

அடாவடி ஆக்கிரமிப்புக்கு மௌன அங்கீகாரம்

செல்வின்

பக்கம் 04


பக்கங்கள்: 20

விலை: 30.00

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:34 18.12.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052





கடலில் மூழ்கும் தேசம்! மீண்டும் 1970 யுகத்திற்கு தேசம் செல்லுமா...?

அவதானி

பக்கம் 05

● ரமணி

# யாழ்ப்பாணத்தில் கால் பதிக்க விரும்புகிறது சீனா





இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட சூறாவளிச் சுற்றுப் பயணம் சில சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. இலங்கையின் தெற்கிலும் மேற்கிலும் ஆழமாகக் கால் பதித்த சீனா, வடக்கிலும் கையை நீட்டியுள்ளது. யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளைப் பேணுவதற்கு விரும்புகிறோம் எனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்திருப்பதில் உள்நோக்கம் இருக்கக்கூடும்.

இந்திய - சீனப் பனிப்போரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இலங்கையால் தற்போது சீனாவைத் தவிர்க்க முடியாத நிலையில் உள்ளது. இலங்கை யின் அபிவிருத்திக்கும், உள்நாட்டு யுத்தத்துக்கும் அளவுகணக்கின்றி அள்ளிக் கொடுத்தது சீனா. “சீனா” எனும் துருப்புச் சீட்டைக் காட்டிக் காட்டி இந்தியாவிடம் இருந்து உதவிகளைப் பெற்றது இலங்கை.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்துக்குப் போட்டிபோட்டு உதவிய இந்தியாவும் சீனாவும் அபிவிருத்திக்கும் முட்டி மோதி உதவின. நாட்டுப் பிரச்சினை தீர்ந்து விட்டது, அபிவிருத்தியில் நாட்டை முன்னேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது கடன் சுமை கழுத்தை இறுக்கியது.

தெற்கில் சீனாவும் வடக்கில் இந்தியாவும் பங்கு போட்டு உதவி செய்யத் தொடங்கின. சீனாவின் உதவித் திட்டங்கள் அனைத்தையும் எதிர்க் கட்சிகள் விமர்சனம் செய்தன. எதிர்க் கட்சியாக இருக்கும் போது எதிர்த்த திட்டங்களுக்கு ஆளும் கட்சியான பின்னர் அனுமதி வழங்கப்பட்டது.

வடமாகாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம், மன்னார் செல்லும் வரை பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்த விஜயத்தில் சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் மற்றும் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.


▶18




# பூகோளப் போட்டிக்குள் நியூ கலிடோனியாவை பிரான்ஸ் நகர்த்துகிறதா?

ஐ.வி.மகாசேனன்




அமெரிக்கா-பிரித்தானியா-அவுஸ்ரேலியா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமாகிய ஆக்கஸ் ஒப்பந்தத்தில் பிரான்ஸ் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் பிரான்ஸின் இருப்பு தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. குறிப்பாக, 2022-ஏப்ரல் பிரான்ஸ் பொதுத்தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் சூழலில் பிரான்ஸின் ஆதிக்கம் நிறைந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் குறித்த பிராந்திய அரசுடனான முரண்பாடு அதிக நெருக்கடிகளை ஆளும் மக்ரோன் தரப்பினருக்கு ஏற்படுத்தியிருந்தது. எனினும், கடந்த வாரம் பிரான்ஸின் ஆளுகைக்கு உட்பட்ட நியூ கலிடோனியாவில் நடைபெற்ற சுயாட்சிக்கான வாக்கெடுப்பின் முடிவுகள் பிரான்ஸிற்குச் சாதகமாகப் கிடைக்கப்பெற்றுள்ளமையானது, பிரான்ஸின் இந்தோ-பசுபிக் பிராந்தியம் மீதான இருப்பு அதிகமாக உறுதிப்படுத்தப்படுகிறது. இக்கட்டுரையும் நியூ கலிடோனியா சுயநிர்ணய உரிமை வாக்கெடுப்பு முடிவுகள் தொடர்பான அரசியல் தாக்கங்களைத் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

பசிபிக் தீவு பிரெஞ்சு பிரதேசமான நியூ கலிடோனியாவின் 30 ஆண்டுகால சமாதான முன்னெடுப்பின் உச்சக்கட்டமாக, பிரான்ஸிலிருந்து சுதந்திரம் பெற வேண்டுமா? என்பது குறித்த மூன்றாவது மற்றும் இறுதி வாக்கெடுப்பே கடந்த வார இறுதியில் நடைபெற்றது. ஆனால், ஒரு தரப்பு பங்கேற்கவில்லை. நியூ கலிடோனியாவில் சுயாட்சிக்கான பல வருட மோதல்களுக்கு பிறகு, 1980 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு மூன்று முறை இடம்பெறும் என்ற வாக்குறுதியை பிரான்ஸ் நியூ கலிடோனியா மக்களுக்கு வழங்கி இருந்தது. அதன் பிரகாரமான மூன்றாவதும் இறுதியுமான வாக்கெடுப்பே டிசம்பர்-12 (2021) அன்று இடம் பெற்றிருந்தது. குறித்த வாக்கெடுப்பில் வாக்களித்தோர் சுதந்திரத்தைப் பெருமளவில் நிராகரித்துள்ளனர். 97 சதவீதம் பேர் பிரான்ஸின் ஒரு பகுதியாக இருக்க விருப்பம் தெரிவித்து வாக்களித்துள்ளனரென நியூ கலிடோனியாவில் உள்ள பிரெஞ்சு உயர் ஸ்தானிகராலயம் டிசம்பர்-13 அன்று இறுதி முடிவுகளில் தெரிவித்திருந்தது. 2018 இல் இடம்பெற்ற முதல் வாக்கெடுப்பில் 43 சதவீதமானோரும், 2020 இல் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில், 47 சதவீதமானோரும் சுதந்திரத்தினைக் கோரி வாக்களித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், டிசம்பர்-11 நடைபெற்ற சுயாட்சிக்கான வாக்கெடுப்பில் தகுதியான வாக்காளர்களில் 44 சதவீதம் பேர் மட்டுமே வாக்களித்தனர். நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் நியூ கலிடோனியா சுயாட்சி வாக்கெடுப்பு தொடர்பான செய்திக் குறிப்பில், “ஞாயிற்றுக்கிழமை காலை பிரெஞ்சு விசுவாசமான பகுதிகளான நொவ்மியா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள வாக்குச் சாவடிகளில் இருந்து வாக்காளர்கள் வரிசையாக வெளியேறிய போது, சுதந்திரத்திற்கு ஆதரவான கோட்டை களில் அவை கிட்டத்தட்ட காலியாக இருந்தன.” எனக் குறிப்பிட்டுள்ளது. ஏனெனில் சுதந்திர ஆதரவு சோசலிஸ்ட் கனக் விடுதலை முன்னணி (FLNKS) அதன் ஆதரவாளர்களிடம் வாக்களிப்பில் பங்கேற்க வேண்டாம் என்று கூறியது.

> **உலகின் மொத்த நிக்கல் தாது வளத்தில் பத்து வீதமானவை குறித்த தீவுக் கூட்டங்களில் செறிந்துள்ளன. பிரான்ஸின் சர்வதேச உறவுகள் தொடர்பான ஆய்வாளர் ஒருவர் செய்தி ஊடகம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையில், “அங்கு பிரான்ஸின் பிடி தளருமானால் சீனா தன்னை அங்கு வலுவாக நிலை நிறுத்தக் கூடிய சகல ஏது நிலைகளும் காணப்படுகின்றன” எனத் தெரிவித்துள்ளார்.**

நியூ கலிடோனியாவில் சுதந்திரத்தை வலியுறுத்தும் கனக் தலைவர்கள் டிசம்பர்-11 வாக்கெடுப்பை அடுத்த ஆண்டுக்கு மாற்றியமைக்குமாறு பிரெஞ்சு அரசாங்கத்தை வலியுறுத்தினர். கொரோனா வைரஸின் பேரனர்த்தத்தினால் தமது சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆதலால் குறித்த காலப்பகுதியில் அரசியல் பிரச்சாரங்கள் சாத்தியமற்றது என்ற கருத்தை முன்வைத்தனர். சோசலிஸ்ட் கனக் விடுதலை முன்னணி இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், “சுகாதார நிலைமை சீராகவில்லை, இரண்டாவது அலையின் ஆபத்து இன்னும் உள்ளது. மற்றும் இன்று, கோவிட் நோயால் இறந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் பசுபிக் தீவுவாசிகள், அவர்களில் பெரும்பாலானோர் கனக்ஸ்.” எனக்குறிப்பிட்டிருந்தது. மேலும், பிரதேசத்தின் 276 கோவிட் இறப்புகளில் பெரும்பாலானவை பழங்குடியினரான கனக் மற்றும் பிற பசிஃபிகா சமூகங்களிடையேயே உள்ளனர். கனக் மக்களைப் பொறுத்தவரை, துக்க சடங்குகள் விரிவானவை மற்றும் 12 மாதங்கள் வரை நீடிக்கும். எனவே செப்டம்பர் வெடிப்பின் போது சமூகத்திலிருந்து பலரை இழந்தமை வாக்கெடுப்புக்குத் தயாராவதைத் தடுத்தது. எனினும், பிரான்ஸில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு தமக்கு சாதகமான சூழலை வெளிப்படுத்தும் நோக்கில் பிரான்ஸ் அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க மறுத்துவிட்டது. ஆதலாலேயே சுதந்திரத்திற்கு அதரவான வாக்குகள் சடுதியாக குறைவடைந்துள்ளது.

இந்நிலையில் முடிவுபெற்றுள்ள நியூ கலிடோனியாவின் சுயநிர்ணயத்திற்கான தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ள அரசியல் தாக்கங்களை நுணுக்கமாக அவதானிக்க வேண்டி உள்ளது.

முதலாவது, இந்தோ-பசுபிக்கில் பிரான்சின் இருப்பு சார்ந்து ஏற்பட்ட சந்தேகங்களுக்கு தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளது. இராணுவக் கண்ணோட்டத்தில், மற்ற ஐரோப்பிய சக்திகளைக் காட்டிலும் இந்தோ-பசுபிக் பகுதியில் பிரெஞ்சுக்காரர்கள் அதிகமாக செயலில் உள்ளனர். பிரெஞ்சு பாலினேசியா, பசுபிக் பெருங்கடலில் உள்ள வாலிஸ் மற்றும் ஃபுடுனா போன்ற தொலைதூர தீவு புறக்காவல் நிலையங்களுடன், இந்தியப் பெருங்கடலில் உள்ள மயோட் மற்றும் ரீயூனியன் என உலகின் மிகப்பெரிய கடல்சார் பிரதேசங்களை பிரான்ஸ் கொண்டுள்ளது. மூலோபாய மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்திற்கான Pierre Marcos ஏப்ரல்-1 (2021) அறிக்கையின் படி, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் 1.6 மில்லியன் பிரெஞ்சு குடிமக்கள் வசிக்கின்றனர். ஆனால் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுடனான பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தம் இரத்தானது. அதற்குப் பதிலாக அமெரிக்காவும் பிரிட்டனும் நுழைந்ததன் விளைவாக, பாரிஸ் நெருக்கடியை எதிர்கொண்டது. இந்தோ-பசுபிக்கில் பிரான்ஸின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பில் அதிக கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்நிலையில் நியூ கலிடோனியாவின் வெற்றி இந்தோ-பசுபிக் பகுதியில் தனது செல்வாக்கை பிரான்ஸ் மீள வெளிப்படுத்த நல்ல வாய்ப்பாக அமையப்பெற்றுள்ளது. இதனை சுட்டிக்காட்டும் வகையிலேயே நியூ கலிடோனியா வாக்கெடுப்பு முடிவுகளைத் தொடர்ந்ததான தொலைக்காட்சி அறிக்கையில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், “பிரான்ஸ் மிகவும் அழகாக இருக்கிறது. ஏனென்றால் நியூ கலிடோனியா தங்குவதைத் தேர்ந்தெடுத்தது,” என்று பெருமிதமான செய்திக்குறிப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

இரண்டாவது, சர்வதேச அரசியலில் அமெரிக்க மற்றும் மேற்கு ஏகாதிபத்திய அரசுகளின் இந்தோ-பசுபிக் பிராந்தியம் மீதான ஏகாதிபத்தியம் சமீப காலங்களில் அதிக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. குறிப்பாக, இந்து சமுத்திரத்திரத்தில் அமெரிக்காவால் பெரும் கட்டுமானங்களுடன் நிர்மாணிக்கப்பட்டள்ள டியாகோ கார்சியா படைத்தளம் மொரிஷியசின் எதிர்ப்புக்களின் மத்தியிலேயே நிலைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் சீனாவின் ஆதிக்கம் படைத்தள விஸ்தரிப்பு, செயற்கை தீவு உருவாக்கம் என இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் வெகுவாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. நியூ கலிடோனியாவின் சுயாட்சிக்கான வாக்கெடுப்பில் சுயாட்சி கோரிக்கை வெற்றி பெற்றிருக்குமாயின் அங்கும் சீனாவின் ஆதிக்கமே உருவாகி இருக்கும் என்பதே பரவலான கருத்தாக காணப்படுகிறது. நியூ கலிடோனியாத் தீவுக் கூட்டங்கள் அவற்றின் நிக்கல் உலோக வளம் காரணமாக உலக சக்திகளால் குறிவைக்கப்பட்டுள்ளன. உலகின் மொத்த நிக்கல் தாது வளத்தில் பத்து வீதமானவை குறித்த தீவுக் கூட்டங்களில் செறிந்துள்ளன. பிரான்ஸின் சர்வதேச உறவுகள் தொடர்பான ஆய்வாளர் ஒருவர் செய்தி ஊடகம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையில், “அங்கு பிரான்ஸின் பிடி தளருமானால் சீனா தன்னை அங்கு வலுவாக நிலை நிறுத்தக் கூடிய சகல ஏது நிலைகளும் காணப்படுகின்றன” எனத்தெரிவித்துள்ளார். மேலும், அந்தப் பிராந்தியத்தின் ஏனைய தீவுகளான பிஜி, வனாட்டு, சொலமன் தீவு, பப்புவா நியூ ஹினியா போன்றன ஏற்கனவே சீனாவின் கண்காணிப்பின் கீழ் வந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், “சீனா தனது முத்து மாலையை ஆஸ்திரேலியாவின் வாசல் அருகே நியூ கலிடோனியாவில் கொண்டு வந்து முடிச்சுப்போட ஆயத்தமாகிறது” என்று கூறியிருக்கிறார். இவ்வாறான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க மற்றும் மேற்கு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழலில் பிரான்ஸின் நியூ கலிடோனியா வெற்றி பசுபிக் கடலில் பிரான்ஸின் உரிமைகள் மற்றும் இராணுவப் பிரசன்னத்துக்கான நியாயாதிக்கத்தை வழங்குகிறது. இந்தோ-பசுபிக்கில் ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் சீனாவிற்கு எதிராக பிரான்ஸை ஒரு அரணாக மக்ரோன் நிலைநிறுத்தியுள்ளார்.

மூன்றாவது, வாக்குறுதியளிக்கப்பட்ட மூன்று பொது வாக்கெடுப்புக்கள் நிறைவுபெற்ற போதிலும், பிரான்ஸின் நியூ கலிடோனியா வெற்றியின் நிலைத்திருப்பில் சில விமர்சனப்பார்வைகளும் காணப்படுகின்றன. 2018 மற்றும் 2020 இல் நடைபெற்ற முதல் இரண்டு வாக்கெடுப்புகள் பிரான்சுடன் நீடிப்பதற்கு ஒரு சிறிய பெரும்பான்மையை வழங்கியது. எவ்வாறாயினும், சுதந்திரத்திற்கான வளர்ந்து வரும் கனக் ஆதரவு தளம் கடந்த வாக்கெடுப்பு முடிவுகளில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 2018 இல் 43.3 சதவீதத்திலிருந்து 2020 இல் 46.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. நியூ கலிடோனியாவின் மக்கள்தொகையில் கனக்ஸ் 40 சதவீதமாக உள்ளனர். மூன்றாவது வாக்கெடுப்பில் வெற்றி பெற முடியும் என்று கனக் தலைவர்கள் முன்பு கூறியிருந்தனர். எனினும் கனக் தலைவர்களின் ஒத்திவைப்பு கோரிக்கையை பிரான்ஸ் நிராகரித்தமையால், தேர்தல் முடிவ

(16 ஆம் பக்கம் பார்க்க...)

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# அரசியலால் அல்லல்படும் பாதீடு

பாதீடு வெற்றி, பாதீடு தோல்வி என்ற செய்தி ஊடகங்களில் அடிக்கடி முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. பாதீடு வெற்றி பெற்றால் நன்மையடைவது யார்? பாதீடு தோல்வியடைந்தால் யாருக்குப் பாதிப்பு? பாதீடு வெற்றி பெற்றால் நன்மையடைவது மக்கள். தோல்வியடைந்தால் அதனால் பாதிக்கப்படுவதும் மக்கள்தான். பாதீடின் வெற்றியும் தோல்வியும் தவிசாளரை, மேயரைப் பாதிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டே வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்படுகின்றன.

தனது கட்சியைச் சேர்ந்தவரின் தவிசாளர் பதவியைப் பறிப்பதற்குப் பாதீடு தோற்கடிக்கப்படுகிறது. பாதீடு இரண்டு முறை தோல்வியடைந்தால் தவிசாளர் அல்லது மேயர் பதவி இழப்பார். பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை ஆகியவற்றின் வருமானத்தை மக்களுக்குப் பயனுள்ள வகையில் செலவளிப்பதே பாதீடு.

மக்களிடம் இருந்து அறவிடப்படும் வரி, சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள் போன்ற நானாவித வருமானம், நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண்டப்பணத்தின் ஒரு பகுதி என்பனவற்றின் வருமானம் கோடிகளைத் தொட்டுவிடும். கொரோனாக் காலத்திலேயே சுமாரான பிரதேச சபையின் வருமானம், சுமார் 20 கோடியாக இருக்கும். அதுவே சகல வளங்களும் உள்ள மாநகர சபையினால் இன்னமும் அதிக வருமானம் கிடைக்கும்.

தேர்தல் காலத்தில் பல கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பல வாக்குறுதிகளுடன் போட்டியிட்டன. கோட்டை எனக் கருதப்பட்ட சில சபைகள் கைவிட்டுப் போயின. ஆட்சியைப் பிடிப்பதற்கான குதிரை பேரம் நடந்தேறியது. தமிழ்க் கட்சிகள் திசைக்கொரு பக்கம் நின்றதால் சில சபைகள் கைவிட்டுப் போயின. அரசியல் தலைவர்களின் சதிராட்டத்தில் சில உறுப்பினர்கள் சிக்குவதால் ஆட்சிமாற்றம் இடம் பெறுகிறது.

சபைகளுக்குக் கிடைக்கும் வருமானம் மூலம் எல்லைக்குட்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. குடிநீர் விநியோகம், வீதியெங்கும் மின் விளக்குப் பொருத்துதல், வீதி அபிவிருத்தி, குப்பை அகற்றல் போன்ற வேலைத் திட்டங்களுக்கு மக்களின் வரிப்பணம் செலவிடப்படுகிறது.

இது மக்களின் பணம் மக்களுக்கான சேவை என்ற மனநிலையில் இருந்து சிலர் விலகுவதால் பாதீடு தோற்கடிக்கப்படுகிறது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறும் அங்கத்தவர்களைத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் சில கட்சிகள் உள்ளன.

உறுப்பினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும். தான் சார்ந்த பகுதிக்கு அதிக தொகையில் வேலைத்திட்டம் சமர்ப்பித்து முடிப்பதிலேதான் அனைவரும் குறியாக உள்ளனர். இது அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்குரிய முன்னேற்பாடாகும். இதனால், சில முக்கியமான வேலைத்திட்டங்கள் முடிக்கப்படுவதென்னவோ உண்மைதான். ஒரே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தமக்குள் குடுமிச்சண்டை பிடிப்பதும் உண்டு. இவர்களின் அடுத்த குறி மாகாண சபைத் தேர்தல். அங்கும் வெற்றி பெற்றால் பாராளுமன்றக் கதிரைக்கு ஆசைப்படுவார்கள்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் மரணமானதால் புதிய தலைவரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் சமர்ப்பித்த பாதீடு இரண்டு முறை தோற்கடிக்கப்பட்டதால் பதவி இழந்தார். மூன்றாவது முறையாகவும் அவரே தலைவரானார். கடந்த மாதம் இரண்டு முறை தோற்கடிக்கப்பட்டவர் இம்மாதம் வெற்றி பெற்றார். மக்களின் நலனுக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிக்கை சொல்கிறது. ஆனால், கனவான் ஒப்பந்தம் பற்றி மக்களுக்கு விளங்கப்படுத்தப்படவில்லை.

கூட்டமைப்பின் வசம் இருந்த யாழ்ப்பாண மேயர் பதவி மணிவண்ணனின் கைக்குச் சென்றுள்ளது. கூட்டமைப்புக்கு மாற்றீடு எனச் சொல்லிக் கொண்டு களம் இறங்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 13 பேரில் மணிவண்ணனும் ஒருவர். அவர்களில் மணிவண்ணன் உட்பட 10 பேரை, கட்சி வெளியேற்றி விட்டது. மூவர் மாத்திரம்தான் கட்சியின் பெயரில் இருக்கிறார்கள். யாழ்ப்பாண மேயரான மணிவண்ணனின் செயற்பாடு ஓரளவு திருப்தியாக இருக்கிறது.

மக்களிடம் இருந்து அறவிடப்படும் பணம் மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும். கல்வி, தரமான போக்குவரத்து வசதி, அச்சமின்றிய நடமாட்டம், சுகாதார மேம்பாடு, வசதியான பொதுச் சந்தை, தரமான வாசிகசாலைகள் போன்றவற்றை மக்களுக்கு வழங்க வேண்டிய கடப்பாடு உடையவர்கள் பதவிக்காக முட்டி மோதுவது மக்களுக்காக அல்ல என்பது வெளிப்படை.

தூரநோக்குடன் மக்களுக்கான சேவைகளைச் செய்பவர்களே மக்களின் மனதில் நிலைத்து நிற்பார்கள். ■

# பண்டிகைக்கால பரபரப்பு

கிறிஸ்மஸ், ஆங்கிலப் புது வருடம், தைத் திருநாள் ஆகிய மூன்று பண்டிகைகள் வரிசைகட்டிக் காத்திருக்கின்றன. தொடர்ச்சியாக மூன்று பண்டிகைகள் வருவதனால் சனக் கூட்டம் கட்டுக்கடங்காமல் இருக்கும். மலிவு விலையில் பொருட்களை வாங்கக் கூட்டம் அலை மோதுவது வாடிக்கை. கொரோனா அச்சம் காரணமாக அடக்கப்பட்டிருந்தவர்கள் வீதியில் இறங்கத் தயாராகி விட்டார்கள். கிறிஸ்தவர்களும் இந்துக்களும் கொண்டாட்டத்துக்குத் தயாராகி விட்டார்கள்.

ஆனால், முன்னரைப் போன்று கண்டபடி திரிய முடியாது. சுகாதார நடைமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை உள்ளது. நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு நாடெங்கும் விசேட பொலிஸ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விசேட கடமைகளுக்காகப் பொலிஸாரை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல் துவ தெரிவித்துள்ளார்.

போக்குவரத்தைக் கட்டுப்படுத்த, சுகாதார வழிமுறைகளை நடைமுறைப்படுத்த, மோசடியில் ஈடுபடும் வியாபாரிகளின் செயற்பாடுகள் மற் றும் முடிச்சுமாறிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, கடந்த வருடங்களின் அறிக்கைகளுக்கமைய, டிசம்பர் மாதக் கடைசி இரு வாரங்களும் நாட்டில் வாகன விபத்துக்கள் அதிகம் பதிவாகும் காலமாகும்.

இதன் காரணமாகப் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் குறித்தும் தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ், புதுவருட காலத்தில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. மக்கள் அதிகமாகக் கூடும் காலங்களில் கொரோனா தொற்றாளர்களின் தொகை கடந்த காலங்களில் அதிகரித்தது. ஒமிக்ரோன் எனும் புதியவகை தொற்று மிக வேகமாக உலகை ஆக்கிரமிக்கிறது. கண்ணுக்குத் தெரியாத எதற்கும் கட்டுப்படாத நோய்த்தொற்று என்பதை பலர் அடிகடி மறந்து விடுகின்றனர். கொண்டாட்ட நாட்களில் விதி மீறல்கள் அதிகளவில் நடைபெற வாய்ப்பு உள்ளது.



பண்டிகைக் காலத்தில் கொரோனா அதிகமாகப் பரவ வாய்ப்பு இருப்பதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடனும், கவனமுடனும் இருக்க வேண்டும். புதுவரு டம், கிறிஸ்மஸ், தைப்பொங்கல் எனப் பண்டிகைகள் அணிவகுத்து வந்து கொண்டிருக்கின்றன. இந்தக் தருணத்தில் மக்கள் பொது இடங்களில் பண்டிகைகளின் பெயரால் கூடுகிற சூழல் ஏற்படும். இது கொரோனாப் பரவல் எழுச்சி பெற வாய்ப்பு ஆகி விடலாம். தற்போதைய சூழலை நாம் சாதாரணமாக எடுத்துக்கொண்டு விடக்கூடாது. தொற்றுநோய் இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது, நாம் கவனமாக இல்லாவிட்டால், விரும்பத்தகாத நிலைமை ஏற்பட்டு விடும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

பண்டிகைக் காலத்திலும், திருமணக் காலத்திலும் தொற்று பரவல் எழுச்சி பெறும் அச்சுறுத்தல் இருக்கிறது. எனவே, இந்த மாதத்திலும், வரும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களிலும் உஷாராக இருந்து கொள்ளுங்கள்.

கூட்டம் கூடுகிற இடங்களுக்குச் செல்லாதீர்கள். தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து விடுங்கள். வீடுகளிலேயே இருங்கள். பண்டிகைகளை வீடுகளிலேயே கொண்டாடுங்கள்.

பண்டிகைக் காலத்தில் மக்கள் கூட்டமாக வெளியில் நடமாடுவது அவதானிக்கப்படுவதனால் அவ்வாறான இடங்களிற்குச்செல்லும் போது சுகாதாரப் பாதுகாப்புடன் செயற்பட்டு கொரோனாவில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக பொது மக்கள் மிக வும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

எனவே, மக்கள் இவ் விசேட பண்டிகைக் காலங்களில் சனநெரிசல் அதிகமான இடங்கள் மற்றும் ஆலயங்கள் போன்றவற்றிற்குச் செல்வதை இயன்றளவு தவிர்த்து வீட்டிலிருந்தவாறே தத்தமது குடும்பத்தாருடன் மத வழிபாடுகளில் ஈடுபடுமாறும், அவசர தேவைகளுக்காக மாத்திரம் வெளியில் செல்வது சாலச் சிறந்ததாக அமையுமெனவும், அவ்வாறு செல்லும் போது கண்டிப்பாகச் சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

இம்முறையும் எளிமையான முறையில் பண்டிகைகளை பொதுமக்கள் கொண்டாடுவதுதான் கொரோனாத் தொற்றைக் குறைத்துக்கொள்ள ஏதுவாக இருக்கும் என சுகாதாரத் துறையினர் மக்களுக்குத் தொடர்ச்சியாக ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

கொரோனாத் தொற்றினை நமது இலங்கையில் இருந்து இல்லாது ஒழிப்பதற்கு ஒவ்வொரு தனி மனிதரும் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி குறைவடைந்துவரும் கொரோனாப் பரவலை முற்றாக இல்லாதொழிப்பதோடு, சுதாதார துறையினரின் அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகளிற்கு அமைவாக தங்களது நாளாந்தக் கருமங்களை ஆற்ற வேண்டும். ■

செல்வின்

# அடாவடி ஆக்கிரமிப்புக்கு மௌன அங்கீகாரம்



ஒடுக்கப்படும் மக்கள் வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்டு தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் கூட ஒடுக்குமுறையாளனின் தொடர்ச்சியான ஒடுக்குமுறை நிகழ்ச்சித்திட்டங்களினால் திசைதிருப்பப்படுகிறது. ஒடுக்கப்படும் மக்கள் சிந்திப்பதற்கான கால அவகாசத்தைக்கூட கொடுக்காமல் ஒடுக்குமுறையாளன் ஏதாவது ஒரு சிறிய சிறிய பிரச்சினைகளை முன்னெடுப்பதன் ஊடாக அவர்களின் கவனத்தையும் அக்கறைகளையும் அதனை நோக்கி மடைமாற்றிக்கொண்டே இருப்பான். மிகவும் கபடத்தனமான இந்தத் தந்திரோபாயத்தினை நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும். எவ்விதமான கபடத்தனமான கவனக்கலைப்பான்களாலும் தடுமாறாத தேசத்தினைக் கட்டியெழுப்பும் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை இடையறாத முயற்சிகளினூடாகப் புத்திபூர்வமாக முன்னெடுக்கவேண்டும்.


ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் இஸ்ரேல் நாட்டிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியது அவர்கள் தங்கள் தேசத்தை எவ்வாறு கட்டமைத்துக்கொண்டார்கள் என்பதே. ஆனால், நாங்கள் அதன் அவசியத்தையும் அவசரத்தையும் புரிந்கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால், எங்களை ஒடுக்குகின்றவர்கள் நிறைய விடயங்களை அந்த நாட்டில் இருந்து தொடர்ச்சியாகக் கற்றுக்கொள்வது மாத்திரமன்றி அவற்றில் தாங்கள் தெரிந்தெடுத்துக் கைக்கொள்ளவேண்டிய விடயங்களை மிகவும் துல்லியமாகப் பின்பற்றுகின்றார்கள்.

இஸ்ரேல் நாடு 1948 ஆம் ஆண்டில் ஐ.நா சாசனத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட அதேவேளையில் பாலஸ்தீனம் என்றவொரு நாடும் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனாலும் அந்த இரண்டு நாடுகளும் பரஸ்பரமாக அங்கீகரிக்கவேயில்லை. பாலஸ்தீனத்தின் நட்பு நாடுகளும் இஸ்ரேலினை ஒரு நாடாக அங்கீகரிக்க முன்வரவில்லை. அப்படியிருந்தும் இஸ்ரேல் நாடு தொடர்ச்சியாக பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து அதனைச்சின்னாபின்னப்படுத்தும் நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துக்கொண்டே இருக்கின்றது. 1948 ஐ.நா சாசனத்தின் கீழ் இருநாட்டு எல்லைகளும் மிகவும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் இஸ்ரேல் தனது அபிவிருத்தித் திட்டங்களின் பேராலும் பாதுகாப்பு என்ற அடிப்படையிலும் பாலஸ்தீனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்து கோறையான தேசமாக மாற்றி சிதைத்துக் கொண்டு இருக்கின்றது. மிகவும் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட மூலோபாயங்கள் ஊடாக இஸ்ரேலியர்களின் பாதுகாப்பு, இஸ்ரேலின் இறைமை, இஸ்ரேல் யூதகுடிமக்களுக்கான புதிய குடியிருப்புகளும் அவர்களுக்கான குடியிருப்பு வசதிகளும் ஏனைய சமூகப் பொருளாதார உட்கட்டுமானங்களை உருவாக்கல் என்ற பல்பரிமாண முனைப்புகள் ஊடாக பாலஸ்தீனம் கோறையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கீழுள்ள வரைபடம் எவ்வாறு 1948 இற்கு முன்பிருந்த பாலஸ்தீனம் எவ்வாறு ஐ.நாவினாலும் ஏனைய சர்வதேச நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளின் கோடுகளையும் தாண்டிச் சிதைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதனைச் சிறப்பாக கூறுகின்றது. இஸ்ரேலின் இந்த அடாவடித்தனமான ஆக்கிரமிப்பினைத் தடுப்பதற்கு ஐ.நாவும் உலகின் மனிதஉரிமைகள், விடுதலை, தேசங்களினதும் மக்களினதும் இறைமை, சனநாயக விழுமியங்கள், சர்வதேச நியமங்கள் என உரத்துக் கத்தும் நாடுகளும் தங்கள் மௌனத்தின் மூலம் அங்கீகாரம் வழங்குகின்றன என்பதே வெளிப்படையான உண்மையாகும்.




இந்த ஆக்கிரமிப்புடனான குடியேற்றங்களையும் அபிவிருத்தி முனைப்புகளையும் எவ்வாறு இஸ்ரேலின் சியோனிச அரசு முன்னெடுக்கின்றது. என்பதனையும் நாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

1948 இல் இஸ்ரேல் நாட்டின் பிரகடனத்தைத் தொடர்ந்து உலகெங்கும் சிதறிவாழ்ந்த யூதர்கள் தங்களது தாயகத்திற்குத் திரும்பத் தொடங்கினர். முதல் வருடத்தில் 100,000 ஆக இருந்த தாயகம் திரும்பியோரின் எண்ணிக்கை 1951 இல் மூன்று வருடத்தினுள் 700,000மாக அதிகரித்தது. மறுவகையில் கூறுவதானால் அதுவரை இஸ்ரேலில் வாழ்ந்த மக்கள் தொகை முதல் மூன்று வருடங்களுக்குள் இரண்டு மடங்காகப் பெருகி பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தது.

அப்போது இஸ்ரேலின் பிரதமராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த டேவிட்பென்-கூரியன் (David Ben-Gurion) ஒரு திட்டத்தை முன்வைத்தார். மீள் குடியேற்றத்துடன் பெருகிச்செல்லும் இஸ்ரேலின் சனத்தொகையினைக் கொண்டு ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவதற்குக் கனவு கொண்டார். அவர்களுக்கான வாழ்க்கை வசதிகள், குடியிருப்பு, சமூகக்கட்டுமானங்கள், பொருளாதாரம் ஆகியவற்றினை இஸ்ரேல் என்ற புதிய தேசத்தின் புவியியல் அமைவிடம், சமூகப் பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலோபாய முக்கியத்துவத்திற்கு ஏற்ப கட்டமைப்பதற்கு மிகப்பொருத்தமான ஆளணிக்கட்டமைப்பாக இஸ்ரேல் இராணுவத்தை மாற்றியமைக்கத் தீர்மானித்தார். தங்கள் நாட்டின் இராணுவம் அதிஉயர் தாக்குதல் திறன் கொண்டதாகப் பாதுகாப்பிற்கும் தற்காத்துக் கொள்வதற்கும் மட்டுமல்லாமல் புதியதோர் தேசத்தின் கல்வி, மீள்குடியேறுபவர்களைத் தேசத்தினுள் உள்ளீர்க்கும் செயற்பாடுகள் மீள்குடியேற்றம் ஆகிய விடயங்களைச் செய்யும் முன்னோடித் தரப்பாகச் செயற்பட வேண்டும் என்பதற்காக இராணுவத்தை முழுமையாக ஈடுபடுத்தும் முயற்சிகளை முன்னெடுத்திருந்தார். இந்த முயற்சிக்கு தனது மந்திரி சபையிலும் குடிசார் நிர்வாகக் கட்டமைப்புக்களிலுமிருந்து வந்த சகல எதிர்ப்புக்களையும் வெற்றிகொள்வதற்கான பலத்தையும் அதிகாரத்தையும் கையகப்படுத்திக் கொண்ட டேவிட் பென்-கூரியன் தேசத்தைக் கட்டுவதற்கான உன்னதமான இலக்கில் தன்னோடும் இஸ்ரேலின் பாதுகாப்புப் படையுடனும் இணையுமாறு இளைஞர்களுக்கு அறைகூறல் விடுத்து ஒரு அதிர்வு திறன் கொண்ட இயக்கமாக இஸ்ரேல் சமூகத்தை மாற்றினார். அவரது இராணுவப் படையணிதான் பலஸ்தீனத்தைக் கூறு போட்டு சிதைக்கும் வகையில் புதிய குடியிருப்புக்களை மிகக்குறுகிய காலத்தில் பலஸ்தீன மக்களின் குடியிருப்புக்களுக்கு மத்தியில் நிறுவியது.

> **தோற்கடிக்கப்பட்ட இனம், தேசம் எத்தகைய துறைகள் ஊடாகவும் தன்னைக் கட்டமைத்து மேலெழக்கூடாது என்பதனை வெற்றி பெற்றவன் தான் தீர்மானிக்கின்றான். இதனையே “வெற்றிபெற்றவர்களின் நிகழ்ச்சித்திட்டம்” (Victors’ Agenda) என ஆய்வாளர்கள் விவரிக்கின்றார்கள்.**

இதேபோன்ற மற்றுமொரு வரலாற்றுப் படிப்பினையினை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். 1944 ஆம் ஆண்டில் சர்வாதிகாரி அடொல்ப் கிட்லர் தலைமையிலான நாஜி ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டு அமெரிக்காவும் அதன் நேசநாட்டுப்படைகளும் ஒருபுறமும் சோவியத்ரஷ்யா மறுபுறமுமாக தோற்கடிக்கப்பட்ட ஜேர்மனியைப் பங்கு போட்டுக் கொண்டன. ஜேர்மனியைத் தோற்கடிக்க முன்னரேயே ஜேர்மனியை கூறுபோட்டு பலவீனப்படுத்திச் சிதைக்கும் மூலத்திட்டம் அமெரிக்காவினதும் ஏனைய நாடுகளினதும் நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்தது.

20 ஆம் நூற்றாண்டின் இரண்டு பெரிய யுத்தங்களுக்குக் காரணமான நாஜி ஜேர்மனியை மீண்டும் ஒரு போரை ஆரம்பிக்க முடியாத அளவுக்குப் பலவீனமாக்க

(17 ஆம் பக்கம் பார்க்க...)




# கடனில் மூழ்கும் தேசம்!

# மீண்டும் 1970 யுகத்திற்கு தேசம் செல்லுமா...?

அவதானி

கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் - என்ற வரியை கம்பராமாயணத்தில் பார்க்கலாம். மாற்றான் மனைவியைக் கடத்தி வந்து, இறுதியில் போர்க்களம் புகுந்து, “ இன்று போய் நாளை வா...” என எள்ளிநகையாடப்பட்டு, இறுதியில் நாட்டையும் இழக்கும் சூழ்நிலை வந்த போதுதான் இலங்கேஸ்வரனின் மன நிலையைக் கம்பர் அவ்வாறு வர்ணித்தார்.

அந்த இலங்கேஸ்வரன் ஆண்ட தேசம்தான் தற்போது கடனில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

வெளிநாடுகளிடம் நிதியுதவி கோரி செல்லவேண்டிய இக்காலத்தில், இன்றுபோய் நாளை வா... என்று நிதியமைச்சரை திருப்பி அனுப்பும் சூழ்நிலை வந்துள்ளது.

பெருந்தொற்றினால், பெரிய வல்லரசுகளும் பொருளாதார ரீதியில் நலிவுற்றிருக்கும் காலப்பகுதியில் இலங்கை போன்ற மூன்றாம் உலக, வளர்முக நாட்டின் கதி எவ்வாறிருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

கடந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொரோனோப் பெருந்தொற்று வந்தவுடன், நாடு முடக்கப்பட்டு வர்த்தகமும் மக்களின் அன்றாட வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

சரிந்துவரும் பொருளாதாரத்தைக் காப்பதற்காக நிதியமைச்சரில் மாற்றம் வந்தது. அதற்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவியை விட்டுக் கொடுக்கவும் நேர்ந்தது.

தலையணையின் உறை மாற்றப்பட்டாலும் தலையணை மாறவில்லை!

அவ்வாறு வந்த நிதியமைச்சர், அண்டை நாடான இந்தியாவிடமும் கடனுதவி கேட்டுச் சென்றார். சீனாவும் கொடுத்தது. இரண்டு நாடுகளும் ஏட்டிக்குப் போட்டியாகக் கொடுக்கும் என்பதும் தெரிந்ததுதானே..?

இலங்கை வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவரும் சுற்றுலாவுக்குச் சிறந்த தேசமாகும். அவர்களின் வருகையினாலும் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திரத் தன்மை கொண்டிருந்தது.

ஆனால், எதிர்பாராதவகையில் 2019 இல் நிகழ்ந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து வெளிநாட்டினர் வருவதற்கு அஞ்சினர். வெளிநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சுகளும் இலங்கையை ஆபத்தான நாடு, செல்ல வேண்டாம் என தமது நாட்டு பிரஜைகளை எச்சரித்தன.

2019 ஏப்ரலுக்குப் பின்னர் இந்த நெருக்கடியைச் சந்தித்த இலங்கை, 2020 ஜனவரிக்குப் பின்னர் பெருந்தொற்றினால் மேலும் நெருக்கடிக்குள்ளாகியது.



விமான நிலையம் வெறிச்சோடியது. சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 73.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதென்றும், சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய 90 சதவீதத்திற்கும் அதிகமான முறைசார் விற்பனை நிலையங்களும் 75 சதவீதத்திற்கும் அதிகமான முறைசாரா விற்பனை நிலையங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன முதலான செய்திகள் வெளியாகியுள்ளன.

இது இவ்விதமிருக்க எரிவாயு சிலிண்டர்கள் நாடெங்கும் வெடிக்கத்தொடங்கியதையடுத்து, மற்றும் ஓர் பிரச்சினையை நாடு எதிர்நோக்கியுள்ளது.

சோதிடத்தில் பொங்கு சனி, மங்கு சனி என்பது பேசுபொருள்.

அதுபற்றிய விளக்கம் ஒன்றை, இந்தப்பதிவை எழுதும் அவதானி படித்தார். அதில் இவ்வாறு சொல்லப்பட்டிருந்தது:

மனதில் பதிந்த எண்ணங்கள், முழு வளர்ச்சியை எட்டாத நிலையில், சனியின் தாக்கம் முடங்கிவிடும். ஆகவே, சனியின் பாதிப்பு மங்கியது என்பர். இளமையில் வளர்ச்சியுற்று, எண்ணம் பெருகி, கிரகிப்பதிலும் வளர்ந்து, சனி பகவானின் தாக்கம் கட்டுக்கடங்காத ஆசைகளை அவனுக்குள் வளர்ந்தோங்கச் செய்து, பொங்கச் செய்கிறது. ஆகவே, பொங்கு சனி என்கின்றனர்.

ராஜபக்‌ஷ குடும்பத்தினர் சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள். மகிந்த ராஜபக்‌ஷ 2015 இல் அவசரப்பட்டு அதிபர் தேர்தலை நடத்தி தோல்வி கண்டதற்கும் ஒரு சோதிடர்தான் காரணம் என்று முன்னர் சில செய்திகள் கசிந்திருந்தன.

எனினும் அப்போது வெற்றிபெற்ற மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமராக வந்த ரணில் விக்கிரமசிங்காவுக்கும் முதலில் பொங்கு சனியும் இறுதியில் விரிசல் வந்து மங்கு சனியும் வரவும், மீண்டும் ராஜபக்‌ஷ குடும்பத்தினர் 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் எழுச்சி கொண்டு, “ தாங்கள் பதவியிலிருந்திருந்தால், அந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்காது” எனச் சொல்லிக் கொண்டு மீண்டும் பதவிக்கு வந்தனர்.

தற்போது, மூன்று ஆண்டுகளுக்குள், இவர்களின் ஆட்சி பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கின்றது.

விரைவில் நாட்டில் பஞ்சம் தலை விரித்தாடப்போகிறது என்று எதிர்க்கட்சிகள் நாடெங் கும் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளன.

கடன்சுமையால் நாடு தத்தளித்துக்கொண்டிருப்பதாகவும், தேசத்தின் வளங்கள் வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கப்படுவதாகவும் அவை சொல்லிவருகின்றன. இது இவ்விதமிருக்க, அரசின் பங்காளிக் கட்சிகளும் தமது அதிருப்தியை வெளியிட்டு வரு கின்றன. ஆனால், அவற்றுக்கும் வேறு போக்கிடமில்லை.

இன்னும் சில வாரங்களில் கையிருப்பிலிருக்கும் அந்நிய செலாவணி பூச்சியத்திற்கு வந்துவிடும் என்று சொல்கிறார் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்‌ஷ. பொறுப்பற்ற ஆட்சியாளர்களினால் முழு நாடுமே அபாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறது எனச்சொல்லும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கை தற்போது ஏல விற்பனை பூமியாக மாறிக்கொண்டிருக்கிறது என்று அரசைப் பார்த்து கிண்டலடிக்கின்றார்.

தேசிய வளங்கள் தாரை வார்க்கப்படும் தருணத்தில் அமைச்சரவை வெறும் சமிக்ஞை தூணாகத்தான் மாறியிருக்கிறது என்றும் அவர் சொல்கிறார். மொத்தத்தில் மலரவிருக்கும் 2022 புத்தாண்டு அபாயச் சங்கை ஊதிக்கொண்டுதான் உதயமாகுமோ என்று அஞ்சுமளவுக்குச் செய்திகள் கசிந்து கொண்டிருக்கின்றன.

1970 களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இடதுசாரிகளும் இணைந்த கூட்டரசாங்கத்தின் காலத்தில், மக்கள் பாண் வாங்குவதற்கு அதிகாலையிலேயே பேக்கரிகளின் வாசலில் வரிசையில் காத்து நின்ற காட்சிகள் நினைவுக்கு வருகின்றன.

அத்துடன் வீடுகளில் இருக்கும் தரைகளில் மரவள்ளிக்கிழங்கை பயிரிடவேண்டிய தேவையும், சீனிக்குப் பதிலாக பனம் கருப்பட்டி, கித்துல் கருப்பட்டியைப் பாவிக்கவேண்டிய மாற்றமும் நேர்ந்தது.

அப்போதுதான் ஸ்ரீமா அம்மையார் சந்திரமண்டலத்திற்குச் சென்றாவது அரிசியை வாங்கி வருவோம் என்று திருவாய் மலர்ந்தார்.

அரை நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் காணப்பட்ட அந்த காட்சிகள்தான் மீண்டும் அரங்கேறப்போகிறதோ

> **“1970 களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இடதுசாரிகளும் இணைந்த கூட்டரசாங்கத்தின் காலத்தில், மக்கள் பாண் வாங்குவதற்கு அதிகாலையிலேயே பேக்கரிகளின் வாசலில் வரிசையில் காத்து நின்ற காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. அத்துடன் வீடுகளில் இருக்கும் தரைகளில் மரவள்ளிக் கிழங்கை பயிரிடவேண்டிய தேவையும், சீனிக்குப்பதிலாக பனம் கருப்பட்டி, கித்துல் கருப்பட்டியை பாவிக்கவேண்டிய மாற்றமும் நேர்ந்தது.”**

தெரியவில்லை.

இது இவ்விதமிருக்க, எமது தமிழ்த்தேசியம் பேசும் தலைவர்கள் தொடர்ந்தும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் வெளிநாட்டு பிரதிநிதிகளுடனும் இனப்பிரச்சினை தீர்வு விடயம் பற்றி அயர்ச்சியின்றி பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அவ்வாறு பேசுவதற்கு முன்னர் தமக்குள் ஒற்றுமை உருவாகவேண்டும் என்றும் அறிக்கை விடுத்து வருகிறார்கள்.

இவ்வேளையில் தனது மருத்துவ தேவைகளுக்காக சிங்கப்பூருக்குப் பறந்திருக்கும் அதிபர் கோத்தபாய ராஜபக்‌ஷ, பாராளுமன்ற அமர்வை 2022 ஜனவரி 18 ஆம் திகதி வரையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்தியுள்ளார். டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் வருகிறது. ஜனவரி 01 ஆம் திகதி புதுவருடம் பிறக்கிறது. அதனையடுத்து தைப்பொங்கல் பண்டிகை. அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதிகளுக்குச் சென்று மக்களின் தேவைகளைக் கவனிப்பதற்காகவாவது இந்த விடுமுறை காலத்தைப் பயன்படுத்துவார்களா..?

■

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்வி சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!


-ஆசிரியர்

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம்!

அத்தியாயம்-1

**2019** கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகி பல கல்லூரிகளின்/ மாணவர்களின் சிறப்பான முடிவுகள் சமூகவெளியில் பாராட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. சார்ந்தோருக்கு வாழ்த்துகள்.

இருப்பினும் தமிழ் மாணவர்கள் செறிந்து வாழும் மாவட்டங்களைப் பொறுத்தவரை தென்பகுதி மாவட்




டங்களுடன் ஒப்பிடும் போது உயர்தரத் தகுதி பெற்றுக் கொண்ட மாணவர்கள் சதவிகித அடிப்படையில் பின்தங்கி இருப்பதை அவதானிக்க முடிந்தது.

அடைவு மட்டங்களின் அடிப்படையில் தேசிய சராசரி அதிகரிக்கப்பட்டு வந்தமையால் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மாணவர்கள் அதிகமுள்ள மாவட்டங்களின் அடைவு மட்டங்கள் அதிகரித்து வந்தாலும், தேசிய சராசரி அதிகரிப்புடன் ஒப்பிடும் போது தென்பகுதி மாவட்டங்களை விட பொதுவாக சற்றுக் குறைவாக அந்த அதிகரிப்பு விகிதம் இருந்ததால் தரவரிசை அடிப்படையில் தென்பகுதி மாவட்டங்கள் முன்னிலைக்குக் செல்ல வடக்கு- கிழக்கு பகுதி மாவட்டங்கள் பின்னிலைக்குத் தள்ளப்பட்டன. கடந்த 15 வருட முடிவுகளை ஆராய்ந்த போது பல நுண்ணிய சரிவுகளைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு உள்ளிட்ட இலங்கையின்வடக்கு - கிழக்கு மாவட்டங்களின் அடைவு மட்டங்கள் தேசிய தரவரிசை அடிப்படையில் நல்ல நிலையில் இருந்து படிப்படியாக சரிந்து பட்டியலின் கடைசி நிலைகளை அடைந்துள்ள நிலையில் அம்பாந்தோட்டை, மாத்தறை போன்ற சற்றுப் பின்தங்கியிருந்த தென்பகுதி மாவட்டங்கள், பலகாலமாக முதலிடத்தை அலங்கரித்த கொழும்பு மாவட்டத்தை 3 ஆம் நிலைக்குத்

| | மாவட்டம் | மாவட்ட நிலை | | | |
|---|---|---|---|---|---|
| | | 2005 | 2010 | 2015 | 2019 |
| | கொழும்பு | 1 | 1 | 1 | 3 |
| | வவுனியா | 2 | 7 | 19 | 21 |
| | மாத்தறை | 9 | 5 | 2 | 2 |
| | யாழ்ப்பாணம் | 10 | 12 | 21 | 19 |
| | அம்பாந்தோட்டை | 13 | 10 | 3 | 1 |
| | மட்டக்களப்பு | 15 | 15 | 18 | 18 |
| | திருகோணமலை | 21 | 22 | 23 | 23 |
| | முல்லைதீவு | 24 | 24 | 24 | 24 |
| | கிளிநொச்சி | 25 | 25 | 25 | 25 |

படம் 2: சில மாவட்டங்களின் தேசிய தரவரிசைகளின் மாற்றம் (மூலம்: இலங்கை பரீட்சை திணைக்களம்)

தள்ளிவிட்டு முதல் இரு நிலைகளை அலங்கரித்திருப்பது பிரமிப்பு ஊட்டியது. சில மாவட்டங்களில், கடந்த 15 வருடமாக, இது எப்படி நடந்துள்ளது என்பதை 5 வருட இடைவெளியில் கீழே கொடுத்துள்ளேன்.

இங்கே தென்பகுதி மாவட்டங்கள் முன்னேறி விட்டதே என்பது என் பிரச்சினை இல்லை. இலங்கையின் எல்லாப் பகுதிகளும் முன்னேற வேண்டியது அவசியமே. ஆனால் இங்கே தென்பகுதி மாவட்டங்கள் முன்னேறிக் கொண்டிருக்க, தமிழ் பேசும் மாணவர்கள் வாழும் பிரதேசங்களின் முன்னேற்ற அளவு போதாமல் தரவரிசையில் சரிவுகளை ஏற்படுத்த ஏது

| | District | Number Sat for 5 or more subjects | 2019 Qualified for G.C.E. (A/L) | | Passed in 6 or more (including 1st Lan. & Maths) with 3 credits | | Failed in All Subjects (Appeared for 6 or more Subjects) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No. | % | No. | % | No. | % |
| 1 | Hambantota | 9667 | 7783 | 80.51 | 6898 | 71.36 | 124 | 1.28 |
| 2 | Matara | 12315 | 9756 | 79.22 | 8592 | 69.77 | 168 | 1.36 |
| 3 | Colombo | 32771 | 25919 | 79.09 | 24038 | 73.35 | 705 | 2.15 |
| 4 | Kurunegala | 24853 | 19284 | 77.59 | 17444 | 70.19 | 448 | 1.80 |
| 5 | Galle | 16198 | 12359 | 76.30 | 10843 | 66.94 | 321 | 1.98 |
| 6 | Kegalle | 12369 | 9403 | 76.02 | 8565 | 69.25 | 235 | 1.90 |
| 7 | Mannar | 1607 | 1200 | 74.67 | 1021 | 63.53 | 20 | 1.24 |
| 8 | Gampaha | 29553 | 22024 | 74.52 | 20026 | 67.76 | 631 | 2.13 |
| 9 | Ratnapura | 16314 | 12110 | 74.23 | 11008 | 67.48 | 406 | 2.49 |
| 10 | Ampara | 10307 | 7644 | 74.16 | 6790 | 65.88 | 200 | 1.94 |
| 11 | Kandy | 21629 | 16038 | 74.15 | 13964 | 64.56 | 428 | 1.98 |
| 12 | Kalutara | 17511 | 12728 | 72.69 | 11375 | 64.96 | 493 | 2.81 |
| 13 | Anuradhapura | 14294 | 10292 | 72.00 | 9026 | 63.15 | 453 | 3.17 |
| 14 | Badulla | 13696 | 9772 | 71.35 | 8612 | 62.88 | 351 | 2.56 |
| 15 | Polonnaruwa | 6171 | 4398 | 71.27 | 3727 | 60.40 | 185 | 2.99 |
| 16 | Matale | 7641 | 5403 | 70.71 | 4541 | 59.43 | 232 | 3.03 |
| 17 | Puttalam | 10816 | 7565 | 69.94 | 6666 | 61.63 | 224 | 2.07 |
| 18 | Batticaloa | 8044 | 5584 | 69.42 | 4849 | 60.28 | 162 | 2.01 |
| 19 | Jaffna | 8520 | 5902 | 69.27 | 5421 | 63.63 | 204 | 2.39 |
| 20 | Monaragala | 7345 | 4989 | 67.92 | 4338 | 59.06 | 278 | 3.78 |
| 21 | Vavuniya | 2545 | 1723 | 67.70 | 1505 | 59.14 | 58 | 2.28 |
| 22 | Nuwara Eliya | 11447 | 7445 | 65.04 | 6525 | 57.00 | 285 | 2.49 |
| 23 | Trincomalee | 5864 | 3784 | 64.53 | 3195 | 54.48 | 240 | 4.09 |
| 24 | Mullaitivu | 1696 | 1070 | 63.09 | 947 | 55.84 | 68 | 4.01 |
| 25 | Kilinochchi | 2254 | 1364 | 60.51 | 1212 | 53.77 | 88 | 3.90 |
| | All Island | 305427 | 225539 | 73.84 | 201128 | 65.85 | 7007 | 2.29 |

வான சமூகப் பொருளாதார அரசியல் காரணிகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் தொடர்ச்சியாக இந்த மாவட்டங்கள் பின்தங்கிவிட வாய்ப்புண்டு.

வலைய ரீதியாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி மொத்தமாக உள்ள 99 வலையங்களில் தரவரிசையில் இறுதியாக வந்துள்ள இருபது (20) வலயங்களில் 16 வலையங்கள் தமிழ் பேசும் மாணவர்கள் அதிகமாக உள்ள வலையங்களாகத் தமிழ் பேசும் பிரதேசங்களின் சரிவை மேலும் சுட்டிக்காட்டியது. அதேவேளை கல்முனை -12, அக்கரைப்பற்று- 15, மன்னார்- 16, யாழ்ப்பாணம் - 22 என 4 தமிழ் பேசும் மாணவர்கள் அதிகம் உள்ள வலையங்கள் மட்டுமே முதல் 25 நிலைகளுக்குள் இடம் பிடித்திருந்தன.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 66 | Trincomalee | 1818 | 1264 | 69.53 | 1120 | 61.61 | 53 | 2.91 |
| 67 | Hingurakgoda | 2556 | 1762 | 68.94 | 1480 | 57.90 | 92 | 3.59 |
| 68 | Vavuniya south | 2049 | 1410 | 68.81 | 1241 | 60.57 | 46 | 2.24 |
| 69 | Hanguranketha | 1805 | 1240 | 68.70 | 1088 | 60.28 | 72 | 3.99 |
| 70 | Dimbulagala | 1637 | 1120 | 68.42 | 921 | 56.26 | 50 | 3.05 |
| 71 | Paddirippu | 1395 | 953 | 68.32 | 804 | 57.63 | 25 | 1.79 |
| 72 | Wilgamuwa | 611 | 415 | 67.92 | 330 | 54.01 | 23 | 3.76 |
| 73 | Madhu | 400 | 269 | 67.25 | 224 | 56.00 | 7 | 1.75 |
| 74 | Galewela | 2461 | 1655 | 67.25 | 1361 | 55.30 | 88 | 3.57 |
| 75 | Kantale | 1009 | 677 | 67.10 | 601 | 59.56 | 40 | 3.96 |
| 76 | Monaragala | 2368 | 1583 | 66.85 | 1398 | 59.04 | 109 | 4.59 |
| 77 | Wattegama | 2818 | 1870 | 66.36 | 1580 | 56.07 | 56 | 1.99 |
| 78 | Kotmale | 1466 | 967 | 65.96 | 876 | 59.75 | 19 | 1.30 |
| 79 | Wellawaya | 1945 | 1281 | 65.86 | 1123 | 57.74 | 83 | 4.26 |
| 80 | Thenmarachchi | 867 | 571 | 65.86 | 538 | 62.05 | 21 | 2.42 |
| 81 | Batticaloa West | 990 | 652 | 65.86 | 562 | 56.77 | 22 | 2.22 |
| 82 | Hatton | 3312 | 2171 | 65.55 | 1923 | 58.06 | 70 | 2.11 |
| 83 | Sammanthurai | 1329 | 871 | 65.54 | 729 | 54.85 | 34 | 2.56 |
| 84 | Gampola | 3685 | 2411 | 65.43 | 2059 | 55.88 | 106 | 2.87 |
| 85 | Mullaitivu | 1206 | 786 | 65.17 | 701 | 58.13 | 43 | 3.56 |
| 86 | Puttalam | 5063 | 3295 | 65.08 | 2846 | 56.21 | 140 | 2.76 |
| 87 | Thirukkovil | 854 | 554 | 64.87 | 482 | 56.44 | 17 | 1.99 |
| 88 | Muthur | 1216 | 788 | 64.80 | 651 | 53.54 | 29 | 2.38 |
| 89 | Valikamam | 2588 | 1665 | 64.34 | 1522 | 58.81 | 81 | 3.13 |
| 90 | Mahiyanganaya | 2074 | 1327 | 63.98 | 1103 | 53.18 | 80 | 3.85 |
| 91 | Passara | 1241 | 786 | 63.34 | 679 | 54.71 | 34 | 2.74 |
| 92 | Vavuniya north | 496 | 313 | 63.10 | 264 | 53.23 | 12 | 2.42 |
| 93 | Kalkudah | 1343 | 829 | 61.73 | 706 | 52.57 | 32 | 2.38 |
| 94 | Kilinochchi | 2254 | 1364 | 60.51 | 1212 | 53.77 | 88 | 3.90 |
| 95 | Nuwara Eliya | 3388 | 2038 | 60.15 | 1756 | 51.83 | 90 | 2.66 |
| 96 | Kinniya | 1187 | 688 | 57.96 | 550 | 46.34 | 49 | 4.12 |
| 97 | Thunukkai | 490 | 284 | 57.96 | 246 | 50.20 | 25 | 5.10 |
| 98 | Trincomalee North | 634 | 367 | 57.89 | 273 | 43.06 | 69 | 10.87 |
| 99 | Islands | 577 | 306 | 53.03 | 263 | 45.58 | 27 | 4.68 |
| | All Island | 305427 | 225539 | 73.84 | 201128 | 65.85 | 7007 | 2.29 |

போர்க்கால சூழல் கடந்து எல்லோருக்கும் சமவாய்ப்புகள் இருக்கும் இன்றைய நிலையில் மூன்று வித நிலைகளே இங்கு காரணங்களாகி இருக்க முடியும்.

1) தென்பகுதி மாவட்டங்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் போது வடபகுதி மாவட்டங்கள் அப்படியேதான் இருக்கின்றது.

2) வடபகுதி மாவட்டங்களின் முன்னேற்றத்தை விட தென்பகுதி மாவட்டங்களின் முன்னேற்றம் அதிகமா உள்ளது.

3) கற்றலில் வடபகுதி மாவட்டங்களின் அடைவுகள் தேசிய சராசரி அதிகரிப்புடன் ஒப்பிடும் போது சரிந்து கொண்டிருக்கிறது அல்லது தேசிய சராசரியுடனான இடைவெளி அதிகரிக்கின்றது.

இன்றைய உலக வழக்கில் G.C.E O/L பெறுபேறுகளில் வாழ்க்கை தங்கியிருக்கவில்லை என்றும் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் பல தன்முனைப்பு அறிவுரைகள் முன்

> **ஒரு சிலர், நாங்கள் வெற்றிச் சரித்திரங்களில் இருந்து சரிந்து கொண்டிருக்கிறோம் என்ற கருத்தியலை ஏற்பதில்லை. மாறாக வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற மாயையை ஏற்படுத்தித் தமிழ் மக்களைத் தூக்கத்தில் வைத்திருப்பதை விரும்புகிறார்கள். இவ்வாறான மாயையை ஏற்படுத்த விரும்புவோரின் பின்னணியில், சில அரசியல் வாதிகளுக்கும், கல்வி வளர்ச்சிக்காகத் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்யாது சுயலாப நோக்கோடு பதவிகளை மட்டும் குறிவைத்து இயங்கும் கல்வித்துறை சார்ந்தவர்களும் இருக்கக் கூடும்.**

வைக்கப்படலாம். அத்துடன் பரீட்சை முறைகள் ஒரு மாணவனின் முற்றுமுழுதான அறிவை பரிசோதிக்க முடிவதில்லை. ஓரளவுக்கு மட்டுமே அதை செய்கின்றன. பின்லாந்து என்ற நாட்டில் குறிப்பிட்ட வயது வரை மாணவர்கள் பரீட்சை முறையில் பரிசோதிக்கப்படுவதில்லை. என்னைப் பொறுத்த வரையிலும் கூட இந்த பெறுபேறுகளில் சாதித்தவன் மட்டும்தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பதையும் நம்பவில்லை. இருப்பினும் இலங்கைக் கல்வி அமைப்பில் பரீட்சைகளில் அடையும் சித்தி மட்டங்களை வைத்தே தேசிய ரீதியாக வேலைவாய்ப்புகள் கட்டமைக்கப்பட்டு உள்ளன. அத்துடன் இந்தப் பெறுபேறுகள் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாவட்டங்களுக்கானவை அல்லவே. இலங்கை முழுவதற்குமானவை. இன்னமும் இலங்கையின் உயர் கல்வித்திட்டம் மற்றும் இடைநிலை / கடை நிலை அரச வேலைகளுக்கான தகுதிகள் இந்த பொதுச் சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை வைத்தே அமைக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை. அதைவிட இலங்கையைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மை வேலைவாய்ப்புகள் அரச துறை சார்ந்தே அமைந்துள்ளன. தனியார் துறையின் பெரும்பாலான கடைநிலை வேலைகளிலும் இந்த சாதாரணதர அடைவு மட்டங்களே குறைந்த பட்சத் தகுதிகளாகப் பார்க்கப்படுகின்றன.

ஆக இந்த நிலை இன்னும் தொடருமாயின், நாளடைவில் அரச / தனியார் வேலை வாய்ப்புகளில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கைகள் சரிய தென் பகுதியினர் படிப்படியாக அந்த இடைவெளிகளை நிரப்ப ஆரம்பிப்பார்கள்.

அதுமட்டுமல்ல, பணபலமுள்ள ஒரு சிலர் / சுயமுயற்சியாளர்கள் எனத் திறன்மிக்க சிலர் வாழ்க்கையில் முன்னேறினாலும் வேலைவாய்ப்பின்றி பல வடக்கு - கிழக்கு இளைஞர்கள் பின்தங்கி நிற்பர். இவை இன்று கண்ணுக்குத் தெரியாது. ஆனால் நாளை நடக்கும் போதுதான் தெரியும். ஆனால் அப்போது தமிழ்ச் சமுதாயம் மேலும் பின்தங்கி நிற்கும்.

இந்த நிலைக்குக் காரணங்களாகப் பின்வருன உட்பட இன்னும் பல இருக்ககூடும்.

(17 ஆம் பக்கம் பார்க்க...)

வேதநாயகம் தபேந்திரன்

**“வாழ்க்கைச் செலவு கழுத்தைப் பிடிக்கிறது. எப்படிச் சீவிப்பது: வருவாய் அதிகரிப்புக்கு மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை ஆராய்ந்து பாருங்கள். நண்பர்கள், உறவினர்களுடன் கலந்துரையாடுங்கள். புதுப்புது வழி பிறக்கும். வருமானம் அதிகரிப்பதற்கு வழி தேடும் அதே வேளையில் செலவுகளைக் குறைப்பது எப்படியென்பதில் மிகவும் நுட்பமாக இருங்கள். நாளாந்தச் செலவுகளை இனி இல்லையென்ற அத்தியாவசியச் செலவுகள் எவையென முதலில் பட்டியல் படுத்துங்கள். தாமதப்படுத்தக் கூடிய தவிர்க்கக் கூடிய செலவுகள் எவையெனவும் நினைத்துக் கொள்ளுங்கள்.”**



# வரவு எட்டணா .......

**கோ**விட்-19 கொரோனாப் பெருந்தொற்று நோயின் பின்பு கூடுதலாகவும் அதற்கு முன்பும் நாடெங்கும் பரவலாகப் பேசப்படும் பிரச்சினை இது.

வறுமைப்பட்ட குடும்பங்களுக்கும், நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கும்தான் இது பிரதான பிரச்சினை.

வருமானம் எவ்வளவு? செலவு எவ்வளவு ? என முதலில் திட்டமிடுங்கள்.

வருகின்ற வருமானத்தை எவ்விதமாகக் கூட்டலாமென்பதில் கவனம் செலுத்துங்கள்.

ஏற்படுகின்ற செலவை எவ்விதமாகக் குறைக்கலாம். மாதாந்தச் சேமிப்பை உருவாக்கும் வழிமுறைகள் எவையெனத் திட்டமிடுங்கள். இவைதான் முதலாவது மிகச் சிறந்த பொறிமுறை.

வருமானம் மாதாந்தச் சம்பளத்தின் ஊடாக வரலாம். அல்லது நாளாந்தக் கூலி வேலை ஊடாக வரலாம். அல்லது சேவைத்துறைகள் ஊடாக வரலாம்.

இந்த வருமானத்தில் பெரிய அதிகரிப்பை ஏற்படுத்த முடியாது. ஆகவே, பிற வழிகளில் வருமானத்தை ஈட்ட முயலவேண்டும்.

உங்களிடம் சொந்த நிலம் சிறியதாக இருக்கலாம் அல்லது பெரியதாக இருக்கலாம். அந்த நிலத்தின் தன்மை தோட்டப் பயிர்கள் செய்வதற்குரியதாக இருக்கலாம். அல்லது உவர்த்தன்மை உள்ளதாக இருக்கலாம்.

நிலத்தின் தன்மைக்கேற்ப அதில் பயிரிடுகின்ற பயிர்களின் தன்மையைத் தீர்மானியுங்கள். உங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஓய்வின் தன்மையைத் தீர்மானியுங்கள்.

நல்ல தண்ணீரும் நல்ல தன்மையும் உள்ள மண் என்றால் தோட்டப் பயிர்களைச் செய்யலாம். 20 முதல் 30 நாள்களில் வருமானம் தரக்கூடிய கீரையை ஒரு பகுதியில் பயிரிடுங்கள். ஒன்றரை மாதம் முதல் 3 மாதம் வரையில் வருமானம் தரக் கூடிய வெண்டியை ஒரு பகுதியில் பயிரிடுங்கள்.

வெங்காயம் நட்டால் 50 முதல் 60 நாட்களில் வருமானத்தை மொத்தமாகப் பெறலாம். மரவள்ளி ஆயின் 6 முதல் 9 மாதங்கள் வரையான காலப்பகுதியில் மொத்தமாக வருவாய் பெறலாம்.

மிளகாய்ச் செய்கையாயின் மிளகாய்க் கன்று நடும் போதே கீரைக் கொட்டைகளை விதைத்து 20 முதல் 30 நாள்களுக்குள் வருவாய் ஈட்டலாம். பாத்திகளின் புருவத்தில் வெங்காயம் நட, கொழு கொழுவென விளைந்து வரும். தோட்டத்தின் எல்லைப் புறங்களில் வெண்டி, பயிற்றை, பாகல், பூசணி போன்றவற்றை நட்டுப் பயன்பெறலாம்.

கிணற்றடியில் பாவிக்கும் கழிவு நீர் போகும் இடங்களில் வாழை, தென்னைகள் போன்றவற்றை நட்டு வருமானம் பெறலாம். கழிவுத் தண்ணீரை இரு திசைகளுக்கும் மாற்றி, இரு இடங்களில் விளைச்சலைப் பெறலாம்.

கழிவுத் தண்ணீர் நாளாந்தம் செல்வதனால் விளைச்சலும் அதிகமாகக் கிடைக்கும்.

ஊர்க்கோழி வளர்ப்பை மேற்கொள்வதற்கு ஒரு கூட்டைத் தயார்படுத்துங்கள். வீட்டில் மிஞ்சும் கழிவு உணவுகள் யாவையும் கோழி உண்ணும்.

மறி ஆடு ஒன்றையாவது வளர்க்க முயற்சி செய்யுங்கள். நாளாந்தம் வரும் மரக்கறிக் கழிவுகள், தேங்காய்ப்பூ, கஞ்சி, பழைய சோறு, பிட்டு, இடியப்பம், வளவிலுள்ள இலைகுழை போன்றவற்றை ஆட்டிற்கு உணவாகக் கொடுக்க அது தானாக வளரும். ஆடு குட்டி போட்டால் மறிக் குட்டியின் மூலமாகப் பட்டி பெருகும். கிடாய்க் குட்டி ஆயின் ஒரு வருடம் முறையாக வளர்த்து வந்தால் நல்ல விலைக்கு விற்கலாம். ஆட்டுப் பால் பூலோகத்தின் தேவாமிர்தம். நாளாந்தம் ஒரு கப் பால் அருந்தி வாருங்கள். மிகச் சிறந்த உடல் ஆரோக்கியம் கிடைக்கும்.

பெரிய காணி இருந்தால் மாடு ஒன்றைக் கட்டாயம் வளருங்கள். பசுப்பால் வீட்டின் உணவுத் தேவைக்கு உதவும். பசு நாம்பன் குட்டி போட்டால் அதனை வளர்த்து நல்ல விலைக்கு விற்கலாம்.

கோழி, ஆடு, மாடு ஆகியவற்றின் எரு தோட்டத்திற்கும், தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கும் மிகச் சிறந்த இயற்கைப் பசளையாகும்.

நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு சிறுகைத் தொழிலை ஆரம்பித்து வருவாய் ஈட்ட முற்படுங்கள்.

வீட்டில் அழகுக்காகப் பூமரங்கள் நடுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள். அந்த இடங்களில் தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டி என வித்தியாசமாக நட்டுப் பாருங்கள். 10 கிலோ அரிசி வரும் உரப்பைகளில் இயற்கைப் பசளை கலந்த மண்ணைப் போட்டு மரக்கறிப் பயிர்களை நடுங்கள். வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் சிறு வருமானமும் கிடைக்கும்.

மாதாந்த வருமானத்தில் சிறிய ஒரு தொகைக்கு நம்பிக்கையான ஒருவரிடம் சீட்டுப் பிடியுங்கள். இது மிகச் சிறந்த கட்டாய சேமிப்பாக இருக்கும். ஏதாவது ஒரு தேவையைப் பூர்த்தி செய்ய உதவும். அல்லது தங்க நகைகள் மீதான முதலீட்டுக்கு உதவும்.

வருவாய் அதிகரிப்புக்கு மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை ஆராய்ந்து பாருங்கள். நண்பர்கள், உறவினர்களுடன் கலந்துரையாடுங்கள். புதுப்புது வழி பிறக்கும்.

வருமானம் அதிகரிப்பதற்கு வழி தேடும் அதே வேளையில் செலவுகளைக் குறைப்பது எப்படியென்பதில் மிகவும் நுட்பமாக இருங்கள்.

நாளாந்தச் செலவுகளை இனி இல்லையென்ற அத்தியாவசியச் செலவுகள் எவையென முதலில் பட்டியல் படுத்துங்கள். தாமதப்படுத்தக்கூடிய தவிர்க்கக் கூடிய செலவுகள் எவையெனவும் நினைத்துக் கொள்ளுங்கள்.

சமையலுக்குப் பயன்படும் காஸ் 2900 ரூபா வரையில் வந்து விட்டது. ஆகவே, இயலுமாயின் ஓய்வு நேரங்களிலோ சமையல் நேரங்களிலோ விறகு அடுப்பையும் சேர்த்துப் பாவிக்கப் பாருங்கள்.

வீட்டில் இருக்கும் குளிர்சாதனப் பெட்டியை அடிக்கடி திறந்து மூடினால் மின்சாரம் அதிகம் செலவாகும். ஆகவே ஒரு நாளில் இரு முறை அல்லது மூன்று முறை திறந்து பொருட்களை எடுக்கவும், பொருட்களை உள்ளே வைக்கவும் . இதன் மூலமாக மின்சாரம் சேமிக்கப்படும்.

உடுப்புகளை நாளாந்தம் அயன் பண்ணாமல் வாரத்திற்கு இரண்டு முறை எல்லா உடுப்புகளையும் சேர்த்து அயன் பண்ணுங்கள் அதன் மூலமாக மின்சாரக் கட்டணம் குறையும். அடிக்கடி அயன்பொக்சின் கொயில்கள் சூடாகி மின் கட்டணம் அதிகரிப்பதை இதன் மூலமாகக் குறைக்கலாம்.

இது போல மின்சார பல்புகளைத் தேவைக்கு ஏற்ப மட்டும் ஒளிரவிட்டு மின் கட்டணத்தைக் குறைக்கலாம்.

இலங்கை மின்சார சபையின் சூரிய மின்சக்தித் திட்டத்தில் இணைந்து அதன் நன்மைகளைப் பெறலாம்.

வெளி இடங்களில் காணும் பொருட்களைத் தேவையற்று வாங்குவதைத் தவிருங்கள். உடுதுணி மீதான செலவுகளில் சிக்கனத்தைப் பேணுங்கள்.

அடுத்தவர் வாழ்வதைப் போல நாமும் வாழ வேண்டுமென்ற ஆசையை விட்டொழியுங்கள். உங்களது இயலளவுக்கேற்ப உங்களுக்காக வாழ்ந்து கொள்ளுங்கள். பிள்ளைகள் உள்ள பெற்றோர்களாயின் பாலன் பஞ்சம் பத்து வருசம். அதாவது, பிள்ளைகள் வளரும் போது ஒரு பஞ்சம் வந்தே தீரும். அதனைப் புரிந்து கொள்ளுங்கள்.

வரவு எட்டணா செலவு பத்தணா... வாழ்க்கை உங்களது நிம்மதியை இழக்கச் செய்து கொடும் இருட்டில் தள்ளிவிடும். விரலுக்கேற்ற வீக்கம் என முன்னோர்கள் தந்த பாடம் தான் எமக்கான வழிகாட்டி. ■

# கனவு நனவான வேளை...

அமுதயாழினி



"இஞ்சருங்கோப்பா.. இந்த வெள்ளத்துக்கயும் மழைக்கிலயும் இந்த ஈர விறகை வைச்சு ஊதி, ஊதியே என் ஈரக் குலையெல்லாம் நொந்து போச்சு.. நான் கேட்டதை ஒருக்கால் வாங்கித் தாங்கோவன்.."

"இந்த மாரி காலம் வந்தாலே உன்னோட இதே ரோதனையாப் போச்சு பார்வதி.. எப்ப பாத்தாலும் நொய் நொய்யெண்டபடி.."

"நானும் பத்து வருசமாக் கேட்கிறன்.. இந்த மனுசன் காதிலேயே வாங்குதில்லை.. இந்த ஈர விறகிலயும் புகையிலயும் சமைச்சுப் பாத்தால் தானே என்ர கஷ்டம் விளங்கும்.."

பூச்சி மருந்தடிக்கும் பம்பை பழுது பார்த்துக் கொண்டிருந்த கணவன், இனியும் தன் பேச்சைக் கணக்கெடுக்கப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்ட பார்வதியும் அடுப்படியை நோக்கி நகர்ந்தார்.

'நாளைக்கு உன்ர பிறந்தநாள்தானே... உன்னை கலியாணம் கட்டி இந்த நாற்பது வருசத்தில உனக்கு நான் ஒரு தரம் கூடப் பிறந்த நாள் பரிசு தந்ததில்லை. இந்த முறை நீ கேட்டதைத்தான் வாங்கித் தரப் போறன். போன ரெண்டு தரமும் வாழைக் குலை இறக்கின காசில இதுக்கெண்டே எடுத்து வைச்சிருக்கிறன். குறைஞ்சது இருபது, இருபத்தைஞ்சாயிரம் எண்டாலும் வேணுமாமே.. இத்தினை வருசம் பொறுத்தனீ.. இன்னும் ஒரு நாள் பொறுத்துக் கொள்ளன்..'

முறைத்துக் கொண்டு போன மனைவியின் பின்புறத்தைப் பார்த்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டே எண்ணிக் கொண்டார் நல்லசிவம்.

தண்ணியூற்று ஒரு அழகிய சிறு கிராமம். உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து மீளக்குடியேறியவர்களில் நல்லசிவம் தம்பதியும் அடங்குவர். குண்டுகளால் தரைமட்டமாகியிருந்த தங்கள் வீட்டை ஒரு வீட்டுத் திட்டத்தின் உதவியோடு சிறு அளவில் கட்டிக் கொண்டனர். ஒரே மகனும் திருமணம் செய்து கிளிநொச்சியில் வேலை, வீடு என்று தங்கி விட, வயதான காலத்தில் படுத்துறங்க ஒரு கூரை போதும் என்று இரு அறை, வரவேற்பறை, சமையலறை என்று சிறியதொரு வீடு தான்.

வீடு கட்டும் போதே பார்வதி சமையலறையில் உயரமாக அடுப்படியைக் கட்டச் சொல்லியிருந்தார். வீட்டின் ஒரு புறமாக பனையோலை வேய்ந்த பத்தி இறக்கி அதைத் தான் சமையலறையாக உபயோகித்து வந்தார்.

வீட்டின் பின்புறமே பரந்து விரிந்திருந்தது அவர்களது காய்கறித் தோட்டம். ஒரு பக்கம் தென்னை, வாழை. மீதியில் வசதிக்கேற்ப காய்கறி பயிரிட்டுக் கொள்வார்கள். தம்பதிகளின் கடின உழைப்பில் ஏதோ கடன் படாது மரியாதையாகவே வாழ்ந்து வரும் தம்பதிகள்தான் அவர்கள்.

பார்வதி இருபது வயதில் நல்லசிவத்தை திருமணம் முடித்து வாழத் தொடங்கியதிலிருந்து கணவனும் பிள்ளையும் தான் அவர் உலகம். கணவனோடு சேர்ந்து தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலிருந்து மகனை கவனித்துக் கொள்வதிலிருந்து அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்யும் அன்பான மனைவி, பாசமான தாய்.

இவர்களின் ஒரே மகனும் பெற்றோரின் எதிர்பார்ப்பை வீணாக்காது பல்கலைக் கழகம் சென்றவன் இப்போது ஆசிரியராகப் பணி புரிகிறான்.

பார்வதி தனக்கென்று எதையுமே ஆசைப்படாதவர். உடையோ, நகையோ தன் ஆசைக்கில்லாது தேவைக்கு வாங்குபவர். தனக்கு ஏதாவது வேண்டுமென்று கணவனிடமோ, மகனிடமோ வாய் விட்டு எதையும் கேட்டதில்லை.

வீட்டுக்கு மின்சார இணைப்பு வந்த போது தாய் மறுக்க மறுக்க மகன் தானே ஒரு தொலைக்காட்சி பெட்டி வாங்கி வந்து கேபிள் இணைப்பும் எடுத்துக் கொடுத்திருந்தான். மாமியார் குணம் அறிந்த மருமகள் வீட்டுக்கு வரும் போதெல்லாம் வீட்டிலே அவர் அணியும் பற்றிக் சோட்டியோ, அல்லது நல்ல சேலைகளோ வாங்கி வந்து கொடுப்பாள்.

இப்படிப்பட்ட பார்வதி அவர் வாழ்நாளிலேயே ஆசைப்பட்டதும் வாய் விட்டுக் கேட்டதும் இந்த ஒன்றைத்தான். மகனிடமோ, மருமகளிடமோ ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அடுத்த நாளே வாங்கிக் கொடுத்திருப்பார்கள். உண்மையில் யாருமே பார்வதிக்கு இது தேவை என்றோ அல்லது அவர் இதற்கு ஆசைப்படுவார் என்றோ எண்ணிப் பார்க்கவில்லை என்பதுதான் உண்மை.

அதிகாலையில் எழும் கணவனும் மனைவியும் காலைக் கடன் முடித்து விட்டு அந்த நேரத்து வசதிப்படி ஒரு பால் தேநீரோ வெறுந் தேநீரோ குடித்து விட்டுத் தோட்டத்துக்குக் கிளம்பி விடுவார்கள். ஒரு ஏழு மணி போல சந்தைக்கு காய்கறி கொண்டு போய் கொடுக்கும் நல்லசிவம் பாணோ, பணிஸோ வாங்கி வருவார்.

முற்றத்துத் தேங்காயில் இடித்த சம்பலோடும் ஒரு தேநீரோடும் காலைச் சாப்பாடு முடிந்து விடும். சில நேரங்களில் இரவு அவித்த புட்டோ, இடியப்பமோ மிஞ்சிய கறியோடோ சம்பலோடு சாப்பிட்டுக் கொள்வார்கள். மதியம் தோட்டத்துக் காய்கறியோடு இருப்பதை வைத்து பார்வதி ஒரு குழம்பும் கீரையும் பருப்பும் வைத்து விடுவார்.

வாரத்தில் மூன்று நாட்கள் நல்லசிவம் சந்தைக்குச் சென்று மீன் வாங்கி வந்தால் பார்வதி மணக்க, ருசிக்க ஒரு குழம்பும் பொரியலும் வைத்தால் அந்தத் தெருவே கமகமக்கும். மகனும் பேரப்பிள்ளைகளும் பாடசாலை விடுமுறையில் வந்து நிற்கின்ற நேரங்களில் வீடே கலகலக்கும். பார்வதி மூன்று நேரமும் இட்லி, தோசை, அப்பம், ஆடு, கோழி, நண்டு, இறால் என்று விதம் விதமாக சமைத்துப் போட்டு அசத்தி விடுவார்.

கணவன், மனைவிக்குள்ளும் அந்நியோயத்திற்குச் சற்றும் குறைவில்லை. வெள்ளிக் கிழமை தவறாமல் காலையில் இருவரும் கோவிலுக்குப் போய் வருவார்கள். ஒரு ரூபா நாணயம் அளவில் வட்டமாக குங்குமம் முகத்தில் மங்களகரமாக ஜொலிக்க, வாழைத்தார் ஏற்ற துவிச்சக்கர வண்டியின் பின்புறம் அகற்றிக் கட்டப்பட்டிருந்த இருக்கையில் ஒரு துவாயை மடித்துப் போட்டு விட்டு பார்வதி ஏறியமர்ந்து கவனமாக மிதி வண்டி இருக்கையைப் பிடித்தவாறு இருக்க நல்லசிவம் துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் செல்வார்.

இவர்கள் போகும் காட்சியைக் காணும் சில இளவட்டங்கள் "இறக்கை கட்டிப் பறக்குது பார் நல்லசிவம் சைக்கிள்.."என்று பாடி கிண்டலடிப்பதும் உண்டு. நல்லசிவமும் பார்வதியும் சிரித்தவாறே கடந்து விடும் மதிப்பும் அன்பும் நிறைந்த தம்பதிதான் ஊரிலே.

பார்வதிக்கு முதன் முறையாக இந்த ஆசை ஏற்பட்டது பத்து வருடங்களுக்கு முன்பு கொழும்பிற்குச் சென்ற போதுதான். மருமகள் கர்ப்பம் தரித்த போது அவளது உதவிக்காக சில மாதங்கள் பார்வதி அவர்களோடு போய் கொழும்பில் தங்கியிருந்தார். மகன் அப்போது கொழும்பில் ஒரு பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருந்தான்.

அங்கேதான் பார்வதி முதன் முதலாக இந்த காஸ் அடுப்பைக் கண்டது. காலங்காலமாக வீட்டு வளவில் நிறைந்து கிடந்த பன்னாடை, பனம் மட்டை, தென்னம் மட்டை, கதியாலுகளை வைச்சே சமைத்துப் பழகியவருக்கு இந்தக் காஸ் அடுப்பு பெரிய அதிசயமாக இருந்தது.

அந்தக் குமிழைத் திருப்பியவுடன் நீல நிற நெருப்பு வருவதும், அதை அளவுக்கேற்ப கூட்டிக் குறைப்பதையும் வியப்போடு பார்த்திருந்தார். ஆரம்பத்தில் சில நாட்கள் மருமகள்தான் அடுப்பைப் போட்டு விடுவதும் பிறகு அணைத்து விடுவதும். பார்வதிக்கு ஏனோ அது பெரிய ஒரு பிரம்மப் பிரயத்தனமான காரியம் போன்றதொரு உணர்வு. மருமகள் மிகவும் பொறுமையாகவே அவரின் பயத்தை உணர்ந்து சொல்லிக் கொடுக்க ஒரு வாரத்திலேயே தனியாக அடுப்புப் போட அணைக்கக் கற்றுக் கொண்டு விட்டார்.

அப்போதிருந்தே அவர் மனதில் இந்தக் காஸ் அடுப்புப் பைத்தியம் பேயாட்டம் ஆடத் தொடங்கி விட்டது. ஆனால் எதையும் இதுவரை வாய் விட்டுக் கேட்டுப் பழகியிராதவரால் அவ்வளவு இலகுவில் கணவனிடம் கேட்டு விட முடியவில்லை. பேரப்பிள்ளை பிறந்தநேரம் கொழும்புக்கு வந்த கணவரிடமும் காஸ் அடுப்பைக் காட்டினார். அவரும் மனைவி தனியாகச் சமைப்பதைப் பெருமையோடுதான் பார்த்தார். ஆனால் சாப்பிடும் போதே பார்வதியின் ஆசையில் மண்ணள்ளிப் போடுவது போலவே ஒரு குண்டையும் தூக்கிப் போட்டு விட்டார்.

"என்ன சொல்லுங்கோ... எங்கட விறகடுப்பில மண் சட்டியில் சமைக்கிற சுவை இந்தக் காஸ் அடுப்புல வருகுது இல்லைத் தானே.. அதுவும் உன்ர அம்மா ஆட்டிறைச்சிக் கறி வைச்சா எண்டால் சட்டி கழுவத் தேவையில்லாம வழிச்சு நக்கிடலாம் என்ன.."

"உண்மை தானப்பா.. நான் இவளுக்கு சொல்லுவன்.. நீ என்ன தான் அம்மாவைக் கேட்டுச் சமைச்சாலும் அம்மா சமைக்கிற டேஸ்ட் இல்லை என்று. ஆனா இப்ப அம்மாவே சமைச்சாலும் கூட அந்த டேஸ்ட் இல்லை. இப்ப நீங்கள் சொல்லத்தான் விளங்குதுப்பா அதுக்குக் காரணம் எங்கட ஊரில விறகடுப்பிலயும் மண் சட்டிலயும் சமைச்சதாலதான் என்று." வாய்க்கு வக்கணையாகச் சமைத்துப் போடுவதே தன் பிறப்பின் காரணம் என்று எண்ணியிருக்கும் பார்வதிக்கு இந்த உரையாடலுக்குப் பிறகு காஸ் அடுப்பைப் பற்றிக் கேட்பதற்குக் கொஞ்சமும் துணிவிருக்கவில்லை.

"அதுக்காக இங்க பிளட்ஸ்ல விறகு வைச்சா ஊதி அடுப்பெரிக்க முடியும் மாமா? கால மாற்றத்திற்கேற்ப மாற வேணும் தான். மாமியையே கேட்டுப் பாருங்கோ.. காஸ் அடுப்புல எவ்வளவு கெதியாச் சமைக்க முடியுது என்று.." மருமகள் தனது பக்க நியாயத்தை எடுத்துரைத்தாள். ஆனாலும் பார்வதியின் மனதில் அன்று விழுந்த காஸ் அடுப்பு எனும் விதை பெரும் விருட்சமாக உருவெடுத்து இப்போதெல்லாம் அடிக்கடி கணவனிடம் நச்சரிக்கும் அளவுக்கே ஆகியிருந்தது.

நல்லசிவத்துக்கும் அப்படியெல்லாம் வாங்கிக் கொடுத்து விடக் கூடாது என்றெல்லாம் ஒன்றும் இல்லை. என்ன.. வீட்டு வளவு நிறையக் கிடக்கும் விறகிருக்கும் போது ஏன் இந்த காஸ் அடுப்பு என்பது தான் அவர் எண்ணம். ஆனால் மனைவி தொடர்ந்து கேட்கவும் விலை எல்லாம் கேட்டு வைத்து வாங்குவதற்கு முடிவெடுத்து விட்டார்.

அன்று பார்வதியின் அறுபதாவது பிறந்த நாள். காலையிலே கோயிலுக்குப் போய் வந்ததும் நல்லசிவம், "நான் ஒருக்கால் டவுண் வரை போய் வாறனப்பா.."

கூறிவிட்டு பக்கத்து வீட்டு முத்சக்கர வண்டியில் புறப்பட்டுச் சென்றார். கணவன் வழமைக்கு மாறாக எதற்கு என்று சொல்லாமல் சென்றது சுணக்கத்தை ஏற்படுத்த மதியச் சாப்பாட்டிற்கு காய்கறி வெட்டிக் கொண்டிருந்தவர், முச்சக்கர வண்டிச் சத்தம் கேட்க எழுந்து வெளியே வந்து பார்த்தார்.

முச்சக்கர வண்டிச் சாரதி உதவியோடு நல்லசிவம் பெரிய சிலிண்டர் ஒன்றை இறக்கிக் கொண்டிருந்தார். அதைக் கண்டதுமே பார்வதியின் முகமெங்கும் விகசிக்கப் பெரும் புன்னகை.

முச்சக்கர வண்டிச் சாரதியே அடுப்பை சமையலறை மேடையில் வைத்து காஸ் சிலிண்டரையும் உரியபடி இணைத்து விட்டுப் போய் விட்டான். அவன் செய்வது எல்லாவற்றையும் ஒரு புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்த பார்வதியை ஒரு கெத்தோடு பார்த்தார் நல்ல சிவம்.

இருவர் பார்வை பரிமாற்றங்களே அவர்களின் காதலையும் புரிதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள, பார்வதி வெக்கத்தோடு வேறு பக்கம் திரும்ப நல்லசிவமும் முற்றத்துக் கயிற்றுக் கட்டிலில் போய் அமர்ந்து கொண்டார்.

"பாரு..! ஒரு பால் தேத்தண்ணி.." கூறி விட்டு பெரும் சிரிப்போடு மனைவி புதிய அடுப்பில் தேநீர் வைத்து மகிழ்ச்சியோடு கொண்டு வரப்போகும் தேநீருக்காகக் காத்திருக்க, "டமால்..." என்று குண்டு வெடித்தது போல் ஒரு சத்தம். "பார்வதி..." என்று அலறியபடி சமையலறையை நோக்கி ஓடினார் நல்லசிவம்.


அடுத்த நாள் காலை பத்திரிகைகளின் முதல் பக்கத்திலேயே, "வடபகுதியிலும் தொடரும் காஸ் வெடிப்புகள்..! முல்லைத்தீவில் மூதாட்டியின் உயிரைப் பறித்த காஸ் எனும் காலன்.."

■

# என்ன உலகமடா பரமானந்தா? 34

– தமிழ்க்கவி

> **“உண்மையச் சொல்லப்போனா பொண்டுகளுக்கு நித்திரை குறைவுதான். ஙா... சரியடா சரி பழைய பொண்டுகளுக்கு. ஹேய்... சிரித்திரன் சுந்தர் இருந்த காலத்தில மகுடியாரிட்ட ஒரு கேள்வி கேட்டிருந்தார் ஒருத்தர். அதாவது “இந்தக் காலத்துப் பெண்கள் காலையில் எழுந்தவுடன் முதல் செய்யும் வேலை என்ன?” பதில்; ‘திரும்பவும் படுக்கையில் விழுந்து நித்திரை செய்தல்’”**



“பசி ருசி அறியாது நித்திரை சுகமறியாது” நித்திரை எண்டது சிலபேருக்கு வரம் சில பேருக்கு சாபம். பாய்விரிச்சு படுத்தாலும் தூக்கம் பிடிக்கலே எண்டொருதன் பாட, இன்னுமொருதன் மெத்தை வாங்கினேன் தூக்கத்தை வாங்கலே’ எண்டு பாட நித்திரையில வந்த பாட்டுக்கள். அடட கனவில இல்லப்பா நித்திரையப்பத்தி வந்த பாட்டுக்கள் எக்கச்சக்கம்..

இதில எந்தப்பாட்டுக்கும் நித்திரையக் கொண்டு வர முடியாதபடிக்கு சிலருக்கு அப்பிடி ஒரு மனக்கிலேசம். எப்பப்பார் ச்சைக் நித்திரை எங்கப்பா வந்தாத்தானே. நித்திரைய வரவைக்க படுக்கையள் தயாரிக்கிற கொம்பனிகள், நிறுவனங்கள் இப்ப படாத பாடுபட்டு அந்த மொடல் இந்த மொடலெண்டு மெத்தையள் கட்டிலுகள் தயாரிக்கினம். ஆனாப் பாரடா பஞ்சணை மெத்தை எண்டது பாழ்பட்டுத் தான் போச்சு. ‘இலவம் பஞ்சிற்துயில் எண்டுதான் அவ்வையார் சொன்னவாவாம். சத்தியமா சொல்லக் கேள்வி. நான் அவா சொன்னத பக்கத்தில இருந்து பாத்தியோண்டு கேளாதை. அதை விடடா உந்த மார்கழி பிறக்க திருப்பாவை வரும் அதில தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரிய தூபம் கமழ துயிலணை மேல் கண்வளரும்... எண்டொரு பாட்டில வருதடா எடே எனக்கு நித்திரை வருது லைற்றை அணைச்சிட்டு படுங்கவன் எண்டு என்ர மோன் கத்தயுக்க நான் இந்தப்பாட்டத்தான் சொல்லுறது கண்டியோ... சுற்றும் விளக்கெரிய தூபம் கமழ நித்திரை எப்பிடி வருது.

கும்பகர்ணன் சிவனிட்ட நித்தியத்துவம் வேணுமெண்டு கேக்கத்தான் இருந்தான் அதுக்குள்ள உந்த தேவர்கூட்டம் போயி பிரமசத்தியான சரசக்காவிட்ட கும்பகர்ணன் அந்த வரத்தக் கேக்க விடாம பண்ணச் சொல்லி கேட்டிட்டினம் அவா ஆர் நாக்கில தங்கிற ஆளெல்லே. போய் கும்பகர்ணன் வரங்கேக்க வாயத் திறக்க, கிழவன் செத்து ஆறாம்மாசம் கிழவி வாசல்படி முட்டி அழுதமாதிரி தவமிருந்த காலத்தில நித்திரை இல்லையே இப்ப அந்த கோதாரி நாக்கில அது வந்து சிவன் வரத்த கேளடா எண்ண, எழும்பி பவ்வியமா ‘நித்திரைத்துவம் வேணும் சுவாமி’ எண்டானே பாக்கலாம்.

பிறசர்காறருக்கு வாக்குச் சிதறிக் கொல்லுற மாதிரி இது நடந்தது கூட தெரியாம சாமி அங்கால போக, இவன் பெரீய்ய்ய கொட்டாவி விட்டுக் கொண்டு படுத்து நித்திரையாப் போனானாம். ஆறு மாசத்துக்கு வலக்கையில தலை வச்சுப் படுத்தா மற்ற ஆறுமாசம் இடக்கையில தலை வச்சுப்படுத்தானாம். நித்திரைக் கதைக்கெண்டு சொல்லுறன் பொடியா அதுக்காக நீ கண்டியோ எண்டு கேளாதை என்ன செய்யிற விளப்பமா ஆராச்சி பண்ண வேண்டிய கதையள்தான் ஆற்றா செய்யிற. எட பெட்டைக் கோழியள் கூவி விடியுதோவோ... எங்க சொல்லுறாய்? பின்ன சேவல்கோழி கூவித்தானாக்கும் விடியுது.

சும்மா விடுரா காலங்காலமா நாங்கள் நித்திரையாக் கிடக்க அவனவன் பாட்டில கண்டதையும் எழுதி வித்துப் போட்டுப் போட்டாங்களடா. இப்ப சுமக்கிறம். நீவேற இதைவச்சே தலையில மிளகாய் அரைக்கப் பாக்கிறாய். ஙா... அம்மியக்கண்ட சிலமன் போடா போ,

அம்ச தூளிகா மஞ்சம் கனகமணித் தொட்டில். மயிற்பீலி மஞ்சம் மலர்மஞ்சம். எண்டு எத்தினை வகை நித்திரைச் சோம்பேறியள கண்ட உலகம் இது. இந்த விக்ரமாதித்தன் கதையில ஒரு உப கதையடா ஒரு ராசாவிட்ட மூண்டு பேர் வாறாங்கள் ஒருதன் தன்னால ஒருநாளைக்காவது தரமான உணவை தின்ன முடியேல்ல எண்டும், மற்றவன் தன்னால ஒரு நல்ல பெண்ணோட கூட முடியேல்ல எண்டும் அடுத்தவன் தனக்கு ஒழுங்கான நித்திரை கொள்ள முடியேல்ல எண்டும். அரசன் தங்களுக்கு ஒரு நாளாவது தங்கட ஆசைய நிறைவேற்றித் தரவேணுமெண்டு கேக்கிறாங்கள்.

சரி நம்மட கதையில மற்றவங்கள் எப்பிடியும் போகட்டும் இந்த நித்திரை வராதவனுக்கு அரசன் தரமான மெத்தை போட்டு, காம்பரிஞ்ச மலர்களை அதில தூவி வாசனத் திரவியங்கள் தெளிச்சு அவனுக்கும் மது கொடுத்து படுக்கவிட்டானாம். விடிஞ்சது அரசன் வந்து என்ன நல்லாத் தூங்கினயோ எண்டு கேட்டான். இவனுக்கு கண்ணெல்லாம் சிவந்து தூக்கக் கலக்கத்தில நிண்டான். ‘ஐயோ ராசா கட்டில்ல முள்ளுப் போல என்னவோ உறுத்திக் கொண்டேயிருந்துது என்னால நித்திரை கொள்ளவே முடியேல்ல.. விடிய விடிய முழிச்சிருந்ததுதான்.’ எண்டானோ ராசா உடன அவன்ர கட்டில சோதனை போடச் சொன்னானாம். மிக கவனமா சோதிச்சா... சோதிச்சா ஒரு வண்டின்ரமெல்லிய சிறகு பூக்களுக்கு உள்ள கிடந்துதாம்.

ப்பூ... என்னடா கதையிது ஙா... ஓடுற வசுவில ஏறின உடன நித்திரை கொள்ளுற எனக்கு அங்க என்ன அம்சதூளிகா மஞ்சமே போட்டிருக்கிறான் ஹஹ ஒரு கோணர் சீற் கிடைச்சா அதுதானே சொர்க்கம். எப்பிடி வரும் நித்திரை எண்டது ஆராலுஞ் சொல்ல முடியாது . சாணுக் கொண்டு முழத்துக் கொண்டெண்டு பீக்கருகளப் பொருத்தி வச்சு எல்லாத்துக் காலயும் வசு ஓடுற வேகத்தில் வசனமே இல்லாம இரைச்சலா கொட்டிக் கொண்டிருக்கும். அந்த இரைச்சலே தாலாட்டா,ஙா... சாத்துவாய் வழிய வழிய உலகத்தில நடக்கிறது எதும் தெரியாம வறாதுதான்ரா உண்மையான நித்திரை. அதுக்குத்தான் சொல்லுறது ‘பசி ருசியறியாது நித்திரை சுகமறியாது’ எண்டு.

எடேய் ஒரு மம்பட்டிய எடுத்து அல்லது கோடாலிய எடுத்து மூசிமூசி வெட்டிக் கொத்திப் போட்டு வேர்வை கசகசண்ட மூச்சு பறிய வந்து யேசுநாதரப் போல கையளை அகட்டி எறிஞ்சு போட்டு கட்டாந் தரையில படுத்துப்பார். எப்பிடி கண் அசருதெண்டு. எட பேயா அதில கனவு கூட வந்து கரைச்சல் படுத்தாது கண்டியோ.

ஆனாப்பார்ரா சிலது பேர் நல்லா இருப்பங்கள். ஆரும் ஏலாவாளியள் வசுவில ஏற, நித்திரையாப் போவாங்கள். எங்க ‘பிள்ளையோட வாறவைக்கு சீற்றக் குடுங்கோ’ எண்டு ஆரும் சொன்னாலும் கடும் நித்திரையில கேக்காது. பள்ளிக்கூடத்தில சில வாத்திமார் தாயிலும் நல்ல தாயான வாத்திமாரா இருப்பினமடா. ஒரு பிள்ளைய நித்திரையாக்க நான் எவ்வளவு கஸ்டப்பட்டிருக்கிறன் ஆனா ஒரு வகுப்பையே ஒட்டு மொத்தமா நித்திரையாக்கக்கூடிய உயர்வான வாத்திமார் ரீச்சர்மார் இருக்கினமடா. அப்பவும் பாரடா பிள்ளையளுக்கு பாய் தலகணி இல்லாமயே நித்திரை வந்திடும். ஐயோ கடவுளே கண் தன்பாட்டில சுருங்கும். வாத்தியார் பாத்திடுவாரோ எண்டு மனம் நடுங்கும். அந்த மாதிரியான நித்திரை வரக்கதான் எனக்கு வாழ்க்கையே வெறுக்கும். ஒரு நாளைக்காவது பள்ளிக்கூடம் வராம வீட்டில நிண்டு முழுநாளும் நித்திரை கொள்ள வேணுமெண்ட வெறி இருக்கும்.

உண்மையச் சொல்லப்போனா பொண்டுகளுக்கு நித்திரை குறைவுதான். ஙா சரியடா சரி பழைய பொண்டுகளுக்கு. ஹேய்... சிரித்திரன் சுந்தர் இருந்த காலத்தில மகுடியாரிட்ட ஒரு கேள்வி கேட்டிருந்தார் ஒருத்தர். அதாவது “ இந்தக் காலத்துப் பெண்கள் காலையில் எழுந்தவுடன் முதல் செய்யும் வேலை என்ன?” பதில்; ‘திரும்பவும் படுக்கையில் விழுந்து நித்திரை செய்தல்’

■

பேராசிரியர் கி.விசாகரூபன்

# “அறிவோர்” தெருவில் - இ.சு.முரளிதரன்




படைப்பு, விமர்சனம், ஆய்வு எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்ட அன்புக்குரிய மாணவ நண்பர் திரு. இ. சு. முரளிதரனின் பிறிதொரு படைப்பான “திருவள்ளுவர் தெருவில் நியூட்டன்” என்ற தலைப்பிலான நூலை அண்மையில் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. நாற்பது திருக்குறட் பாக்களை எடுத்து அவற்றை அறிவியல் ரீதியான கோட்பாடுகளுடன் பொருத்திப்பார்த்து வியாக்கியானம் செய்யும் பாங்கில் இந்நூல் அமைந்திருந்தது. தமிழாசிரியர் ஒருவரிடம் வெளிப்படும் இவ்வாறான ஒரு நோக்குநிலை உண்மையில் மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒன்று. வெறுமனே பாடப்புத்தகங்களுள் மட்டும் புதைந்து, மறைந்து போகாமல் அதற்கப்பாலும் நிகழ்ந்த தேடுதல் மற்றும் சிந்தனைத் தெறிப்பாக இந்நூல் அமைந்துள்ளதனைப் பார்க்கமுடிகிறது.

ஆய்வுப்புலங்களின் (Research fields) எல்லைகள் தகர்ந்து பல்துறை ஆய்வுச்சங்கம (Inter disciplinary) ஆய்வுப் போக்கினை நோக்கி நகரும் இன்றைய ஆய்வுப்போக்குக்கு (Current Research Trend) இந்நூல் ஒரு ஊக்கசக்தியாகப் பலருக்கும் அமைதல் கூடும்.

‘வேண்டுமுழுதும் தருவோய் நீ’ என்று சிறப்பிக்கப்படக்கூடிய திருக்குறளுக்கு உரைகாணும் படலம் இன்றும் நீண்டுகொண்டுதான் செல்கிறது. ‘பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றியதாக’ இந்நூல் இருப்பதுதான் அதன் காரணம். 19 ஆம் நூற்றாண்டில் மேலைத்தேய பொருளியல் பேராசான் ‘அடம்சுமித்’, வேலை ஒன்றில் அதன் உச்ச நிலையிலான வினைத்திறனைப் (Output) பெற வேண்டுமாயின் அவ்வேலையினை அதற்குப் பொருத்தமானவரிடம் ஒப்படைத்தலே அதற்குரிய ஒரே வழி (Right man for right job) எனக் கூறியபோது உலகம் அவரைத் தலையில் வைத்துக் கொண்டாடியது. இதனை வள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரேயே ‘இதனை இதனால் இவன் முடிப்பான் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்’ எனப் பதிவு செய்திருந்ததனை அப்போதைய சூழலில் மேலைத்தேயத்தவர்களால் அறிந்திருக்க முடியவில்லை. நாம் ‘மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்’ பேசிய காலமது.


‘கவியுளம்’ காணும் இ. சு. முரளிதரனது இவ்வாறான தொடர் முயற்சிகள் இளைய தலைமுறையினர்க்கு முன்மாதிரியானவையாக (Role models) அமைதல் கூடும்.

இ. சு முரளிதரனின் மொழிநடை இந்நூலுக்குப் பெரிதும் அணிசேர்க்கின்றது. அறிவியல் விடயங்களையும் படிப்போர் உவக்கும் வண்ணம் குழைத்துக் கொடுக்கத்தக்க ஒரு நெகிழ்ச்சியான மொழிநடை இவருக்கு வாய்த்திருக்கிறது. அறிவியல் புலத்தில் வழக்கிலிருக்கும் பல்வேறு கலைச்சொற்களையும் இ. சு. முரளிதரன் பொருத்தமாக மிக இலாவகமாகக் கையாண்டுள்ளார். ஈழத்தின் இன்னொரு சுஜாதாவாக இ. சு. முரளிதரன் உருவெடுக்கலாம்.

அறிவு, அடக்கம், பணிவு என்பவற்றை ஒருங்கே கொண்ட இ. சு. முரளிதரனுக்கு கற்பித்த ஆசிரியர்களில் ஒருவன் என்ற வகையில் நான் பெருமையும் பேருவகையும் கொள்ளும் தருணங்களில் இதுவும் ஒன்று. ஆசிரியர்களின் முகவரி என்பது அவர்களின் மாணவர்களில்தான் தங்கியுள்ளது. ‘நல்ல மாணவன் தான் நல்ல ஒரு ஆசிரியரை உருவாக்குவான்’ என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதற்கு மிகப் பொருத்தமானவர் இ. சு. முரளிதரன் என்பதில் இருவேறு கருத்துக்களில்லை. ■

த.அபிநாத்

# தொன்மப் போரியல் நுட்பங்களைப் பேசும் அற்புதமான பொக்கிசம்





தொன்ம இந்துக் குழுங்களிடையே நிலவிய போரியல் நுட்பங்களை அற்புதமாகப் பேசுகின்ற நூலாகக் கலாநிதி ச.முகுந்தனின் “புராதன இந்து சமுதாயத்தில் போரியல்” என்ற நூல் காணப்படுகின்றது. ச.முகுந்தன் அவர்கள் இந்துவின் மைந்தன் என்பதில் நாம் பெருமை கொள்கின்றோம். எங்கள் கல்லூரி அன்னை கனதியான இலக்கிய கர்த்தாக்கள் பலரையும் உருவாக்கியுள்ளார் என்பதை உலகம் அறியும். அந்த வகையில் கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் அவர்களும் குறிப்பிடத் தக்கவர். இந்துக் கணித வானியல் மரபு, புராதன இந்து இலக்கியங்களில் அரசியல் பொருளியல் நீதி பரிபாலனம் ஆகிய இரண்டு நூல்களுக்காக தேசிய சாகித்ய விருதினைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவராகவும் அமைந்துள்ளார்.



புராதன இந்து சமுதாயத்தில் போரியல் என்ற இந்த நூலானது ஒன்பது கட்டுரைகளைக் கொண்டுள்ளது. போரியல் வியூகங்கள், விமானப் போரியல், ஆயுதங்கள், பாசறை அமைப்பு, புலனாய்வு, வர்மக்கலை போன்ற பல்வேறு விடயங்களை நூல் பேசு பொருளாகக் கொண்டுள்ளது. ரிக்வேத காலச் செருநர்களின் தனித்துவமான அடையாளங்கள், அதர்வ வேதப்படை வகைப்பாடு, நால்வகைப் படையொடு வேவுப்படை, வில்லாளிகள், கடற்படை என்பன இணைந்த எழுவகைப்படை பற்றியெல்லாம் வேதக காலப் போரியல் குறித்த கட்டுரை நுட்பமாக எடுத்துரைக்கின்றது.


போர் வியூகங்கள் பற்றிய கட்டுரையானது படை அமைப்பு வரிசையின் வேர்களை அழகுற ஆராய்கின்றது. கிரௌஞ்ச வியூகம், மண்டல வியூகம், அர்த்த சந்திர வியூகம், சக்கர வியூகம், மகர வியூகம் என்பன விரிவாக விளக்கப்படுகின்றன. தமிழில் சக்கர வியூகம் குறித்து இத்தனை நுட்பமாக விளக்கும் முதற்கட்டுரை இதுவாகவே அமையும் எனக் கருதுகின்றேன் . வாசகனை அமர்க்களத்தினுள் அழைத்துச் செல்லும் தாடனத்தோடு கட்டுரையை நகர்த்திச் செல்கிறார்.

சூரியசக்தி விமானம், வாயுவால் இயங்கும் விமானம், பாதரசத்தால் இயங்கும் விமானம் உட்பட பல்வேறு விமானங்கள் குறித்தும் பேசுகின்றார். தொன்ம விமான நுட்பங்கள் நம்பகத்தன்மையோடு விளக்கப்பட்டுள்ளன. மேலும் வாள், வில், அம்பு, குந்தம், ஈட்டி, பரசு, கதாயுதம் போன்ற ஆயுதங்களும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இராணுவப் பாசறையானது விளக்கப்படத்தோடு வெளிப்படுத்தப்பட்டுள்ளமை வியப்பினைத் தருகின்றது.




கல்கி எழுதிய “சிவகாமியின் சபதம்” நாவலை வாசித்தவர்களால் “ஒற்றாடலும் திருக்குறளும்” அப்புதினத்தில் திருப்பு முனையாக அமைவதை மறக்க முடியாது . அத்தகைய புலனாய்வானது அரசின் ஸ்த்திர தன்மைக்கு வலுச்சேர்த்தமையினை நூல் சிறப்பாக விளக்குகின்றது. புறநானூறு, தொல்காப்பியம், பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் பழந்தமிழர்களின் போரியல் நுட்பங்களையும் கட்டுரை ஒன்றிலே விரிவுற விளக்குகின்றார். இந்தியன், ஏழாம்அறிவு போன்ற திரைப்படங்களின் மூலம் வெகுமக்களிடம் பரவலடைந்த வர்மக்கலையின் நுட்பங்களை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். படுவர்மம், தொடு வர்மம், தட்டுவர்மம், நோக்குவர்மம் என்னும் அடிப்படைகளைக் கூறி நுண்பிரிவுகளை இனங்காட்டுகின்றார். வர்மப்புள்ளிகள், வர்ம முத்திரைகள் என்பன உரிய வகையிலே விளக்கப்பட்டுள்ளன. இறுதிக்கட்டுரையானது.புராதன இந்துப் போரியல் நெறியும் மனித உரிமைப் பிரகடனங்களும் குறித்துப் பேசுகின்றது.

தொகுத்து நோக்கினால் தொன்மப் போரியல் நுட்பங்களைப் பேசும் அற்புதமான பொக்கிசமாகவே இந்நூல் அமைகின்றது. ■




புலோலியூர் வேல்நந்தன்

## புதுப்புனல் – 22

# யோண்சன் ராஜ்குமார் அவர்களின் ஜீவபிரயத்தனம் (நாடகங்கள் ஏழு) நாடகப்பிரதி குறித்த பார்வை

தீம்புனலின் இவ்வார புதுப்புனலில் நாடகத்துறைசார் நூற்பிரதி ஒன்றைக் குறித்த அறிமுகத்தோடு உங்களைச் சந்திக்கின்றேன். இந்த கோவிட் 19 காலம் திறந்துள்ள zoom செயலி வழியான தொடர் பாடலை அடிப்படையாகக் கொண்டு இக் காலப் பகுதியில் பல்வேறு வகைப்பட்ட நாடகம்சார் உரையாடல்கள், அனுபவப் பகிர்வுகள், அளிக்கைகள் பல்வேறுபட்ட நாடகத்துறை சார் அமைப்புக்களால் அதிக வீச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம். இவ்வகையில் தமிழகம்- ஈழம் - புலம் பெயர் தேசம் என்ற முத்தளங்களையும் ஒன்றிணைக்கின்ற வகையில் இம் முயற்சிகளில் பல மேற்கொள்ளப்படுவதும் சிறப்புக்குரியதாக புதிய சாத்தியங்களை உருவாக்கக் கூடியதாக உள்ளன. இவ்வகையில் அவ்வவ்போது எழுத்துப் பிரதிகளான நாடகப் பிரதிகளும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. கூடவே இன்று ஈழத்தில் பல புதிய நாடகச் சஞ்சிகை முயற்சிகளும் கூட முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த பின்ணணியில் திருமறைக் கலாமன்றம் ஈழத்து நாடக எழுச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்புக்கள் மதம் கடந்து மகத்தானவையாக அமைந்துள்ளன. இதன் மூல கர்த்தாவாக விளங்கியவர் அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த கலைக்காவலர் மரிய சேவியர் அடிகளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் . அவர் உருவாக்கி விட்ட நாடக வாரிசுகள் என்ற வரிசையிலே கல்விப்புலம் சார்ந்தும், அரசாங்க ஆற்றுகைகள் சார்ந்தும் பல்வகை நாடக வெளிப்பாடுகள் சார்ந்தும் முக்கியம் மிக்கவராக விளங்குபவரே தற்போது யாழ் கல்வி வலயத்தில் நாடகமும் அரங்கியலும் துறை ஆசிரிய ஆலோசகராய் கடமையாற்றும் திரு. யோ. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் ஆவார். அளிக்கை, நெறியாள்கை என்பவற்றுக்கு அப்பால் ஈழத்து நாடக வரலாற்றில் காத்திரமான பல நாடகப்பிரதிகளைக் குறிப்பாக சிறுவர் நாடகப்பிரதிகள், பாடசாலைசார் நாடகப்பிரதிகள் தந்தவர் தந்து கொண்டிருப்பவர் என்ற வகையிலும் இவர் முக்கியத்துவம் பெறுகிறார். அந்த வகையில் மிக அண்மையில் திருமறைக் கலா மன்ற கலைத்தூது அரங்கில் சுகாதார நடைமுறைகளுடன் மிக எளிமையாக வெளியிடப்பட்டதொரு நாடக நூலே “ஜீவபிரயத்தனம்” என்ற இந்த நாடக நூலாகும். அழகிய அட்டை மற்றும் புத்தக வடிமைப்போடு இந்நூல் வெளிவந்துள்ளது. மதி அச்சத்தினுடைய அச்சுப்பதிவு சிறப்பாக அமைந்துள்ளது. இந்நூலை மறைந்த தன் அண்ணன் அன்ரன் ஜெயக்குமாருக்கு நூலாசிரியர் சமர்ப்பித்துள்ளார். இந்நூலுக்கான வாழ்த்துரையைக் கவிதை நடையில் உயிரோடு இருந்த போது வேறு ஒரு நூலுக்கு எழுதி வழங்கிய வாழ்த்தை இங்கு இணைத்துள்ளார் கலைத்தந்தை மரிய சேவியர் அடிகள் அவர் தம் வாழ்த்துரையில்

அழகாக ஆடுவார் அற்புதமாய் ஆட்டுவிப்பார்
சுருதி ஞானத்துடன் பாடுவார்
சுவை குன்றாது பாடவைப்பார்
எழுதுவார் எழுதுவிப்பார்...
திருமறைக் கலாமன்றத்தின் பிரதி
இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார்
அவரை யாம் பெற என்ன தவம் செய்தோமோ

என வாழ்த்தியுள்ளார். இந்த நூலுக்குரிய காத்திரமான சிந்திக்கத்தூண்டும் அணிந்துரை ஒன்றை “எதிர்ப்பை எழுத்துருவாக்கல் பின் (உள்) காலனிய ஈழத்தமிழ் அரங்கைப் புரிந்து கொள்ளல்” என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி பாக்கியநாதன் அகிலன் அவர்கள் வழங்கியுள்ளார். பின் அட்டைக் குறிப்பாகவும் இவ்வுரையின் சில பகுதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. என்னுரை என்பதனுள் நூலாசிரியர் அவர்கள் இப் பிரதியில் இடம் பெறும் நாடகங்கள் எழுதி மேடையேற்றப்பட்ட கணங்களையும் தனது நாடகப் பயண அனுபவங்களையும் இத்துறையில் தனக்கு உதவியோரையும் இந் நூலாக்கத்தில் ஆலோசனைகள் உரைகள் வழங்கி உதவியோரையும் நன்றியோடு நினைவு கூர்ந்துள்ளார்.

“ஜீவ பிரயத்தனம்” என்ற இந் நாடக நூலில் எல்லாமாக ஏழு நாடகப் பிரதிகள் இடம் பெற்றுள்ளன. ஏற்கெனவே தான் எழுதிய அமைதிப் பூங்கா, அற்றைத் திங்கள், கம்பன் மகன், கொல் ஈனும் கூற்றம், கடமை வீரன் புத்திமான் உட்பட பல சிறுவர் நாடகப் பிரதிகள் வழி ஈழத்து நாடக அரங்கியலில் தனி முத்திரை பதித்தவராக யோண்சன் ராஜ்குமார் அவர்கள் விளங்குகிறார். அத்துடன் மிக அண்மையில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மீள்பதிப்பாக வெளியிட்ட நொண்டி நாடகத் தொகுப்பு முயற்சியிலும் இவரது பங்களிப்பு முக்கியமானதாகும். நாடகமும் அரங்கியலும் பாடத்துறையின் முக்கிய வளவாளராகவும் இவர் விளங்குகின்றார்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள “ஜீவ பிரயத்தனம்” என்ற நாடகம் 1998 ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்றம் மேற்கொண்ட வடலிக்கூத்தர் கலைப் பயணத்துக்காக எழுதப்பட்டு பிரான்ஸ், லண்டன், ஜேர்மனி, சுவிஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலும் கொழும்பு, யாழ்ப்பாணம், நெடுந்தீவு ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் பெற்ற நாடகம் ஆகும். பின்னர், திருமதி செல்மர் எமில் வைதேகி அவர்கள் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணிக் கற்கை நெறிக்காகத் தயாரித்து தமிழகத்திலும் அதனை அறிமுகம் செய்தார். புலம்பெயர் உறவுகளுக்கு எமது “இருப்பை” சொல்வதற்காக அக்காலகட்ட ஈழத்தமிழரின் அரசியலை, சமூக வாழ்க்கை உள்வாங்கி எழுதப்பட்ட குறியீட்டு நாடகமாக இது விளங்குகின்றது. இந் நாடகப் பனுவல் கலைமுகம் இதழில் (2008 ஐப்பசி - மார்கழி) பிரசுரிக்கப்பட்டது. இந் நாடகத்தில் கொடியோன், கண்ணன், நாகரிகன், யாழ்பிடி என்ற பாத்திரங்களுடன் ஆள் 1,2,3,4,5,6 எனப் பொதுச் சொல்லாடல் கொண்ட பாத்திரங்களும் படைக்கப் பட்டடுள்ளன. இதன் மொழி நடையும் பாடல்களும் நெஞ்சைத் தைக்கின்றன.

இதன் அளிக்கைப் பதிவுகளும் படங்களாகத் தரப்பட்டுள்ளன. அடுத்து இடம் பெறுவது அகலிகைகள் என்ற நாடகம். இது 2017 யா/ திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை அரங்குக்காகப் பெண் விடுதலை என்ற மையப் பொருள் சார்ந்து புராணத் தொன்மங்களான அகலிகை, சீதை, பாஞ்சாலிசபதம் என்பவற்றைக் கையாண்டு உருவாக்கப்பட்ட நாடகமாக விளங்கிச் சிறப்புப் பெறுகிறது.

நாடகத்தில் பெருமளவிற்கு அகலிகை, இந்திரன், கௌதமர், இராமன், சீதை, இராவணன் என்றவாறே பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. சமூகச் சிந்தனை ஒன்றை இலக்கிய நாடகப் பிரதியூடாகத் தரும் புதிய முயற்சியாக இதனைக் கொள்ள முடியும். அடுத்து இடம் பெறுவது வலசைப் பறவைகள் இது 1996 ஆம் ஆண்டு எழுதப்பட்டு மிருசுவில் தவசிக்குளம் காணிக்கை மாதா ஆலய முன்றலில் மேடையேற்றப்பட்டது. இடம்பெயர்வு காலத்தில் நாம் அனுபவித்த பல்வேறுபட்ட மன விவகாரங்களை இப் பிரதி பேசுகிறது. மூன்று குடும்பங்களை மையமாகக் கொண்டு இக் கதை பேசப்படுகின்றது.

“எந்தையும் தாயும் மகிழ்ந்திருந்த நிலமிழந்து
சிந்தை நிறைந்துறைந்த வீடு மனை வேறிழந்து
விந்தை மனிதர்களாய் வெறுவெளியில் ஓரிரவில்
வலசைகளாய் வந்தடைந்த வரலாற்றுப் பேரவலம்”

என்ற விருத்த யாப்புப் பாடலுடன் நாடகம் தொடங்குகிறது. இடம் பெயரும் பறவையாகிய வலசைப் பறவையின் பெயரை இந் நாடகத்திற்குச் சூட்டியிருப்பதும் பொருத்தமுடையதாகவே அமைகிறது. பிரதிகளின் இடையிடையே நாடகம் பற்றிக் கூறப்பட்டுள்ள சிந்தனைத் துளிகளும் சிறப்புக்குரியனவாய் சிந்திக்கத் தூண்டுவனவாய் அமைந்துள்ளன. அடுத்து இடம் பெறும் “மண விலங்குகள்” என்ற நாடகம் 2003 ஆம் ஆண்டு திருக்குடும்ப கன்னியர் மடத் தயாரிப்பில் உருவாகி 2016 ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கான நாடகப் போட்டியில் ஒன்பது தேசிய விருதுகளைப் பெற்ற சிறப்புக்குரியது. பாரதி பாடல்கள் வழி பெண் விடுதலைச் சிந்தனையைப் பேசுவதாக இந் நாடகம் அமைந்துள்ளது.


அடுத்து இடம் பெறுவது திருமறைக் கலாமன்றத் தயாரிப்பாக அமையும் 1996 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்ட ஈன்ற பொழுதில் என்ற நாடகம் இந் நாடகமும் மத்தியதர, சற்று வசதியான, ஏழைக் குடும்பங்கள் என மூன்று குடும்பங்களின் கதைவழி நிகழ்த்தப்படுகிறது. போரினால் கைது செய்யப் பட்டு துயரப்படும் பிள்ளைகள் குறித்தான தாய்மாரின் ஏக்கங்களை யுத்த காலப் பின்ணணியில் இந் நாடகம் பேசுகிறது. உண்மையின் ஒளி என்ற நாடகம் 1993 ஆம் ஆண்டு பலாலி ஆசிரிய கலாசாலை கிறிஸ்தவ மாணவ ஒன்றிய ஒளிவிழாவுக்காக நூலாசிரியரால் எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றப்பட்ட நாடகமாக அமைகிறது. ‘யதார்த்தன்’ என்ற நிரந்தரப் பாத்திரத்தையும் ஏனைய நடிகர்களை பொது நடிகர்களாகவும் கொண்டதாக இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது.

“ஸ்பார்ட்டக்கஸ்” என்ற வரலாற்று நாடகம் 2020 ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்ற திறந்தவெளி அரங்கில் மேடையேற்றப்பட்டது. ஹேவாட் ஃபாஸ்ட் எழுதிய “ஸ்பாட்டக்ஸ்” என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு இந் நாடகம் எழுதப்பட்டுள்ளது. அதிக காட்சி அமைப்புக்கள் கொண்டதாய் வித்தியாசமானதொரு நாடகப் பிரதியாக்க, வரலாற்று அனுபவத்தை இந் நாடகப் பிரதி தருகிறது. நிறைவில் பின்னூட்டங்கள் என்ற பகுதியில் மேற்குறிப்பிட்ட அனைத்து நாடகங்கள் தொடர்பாகவும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த பலரது கருத்துக்கள், விமர்சனங்கள் என்பன இணைக்கப்பட்டுள்ளதுடன். ஆசிரியரின் ஏனைய நாடக நூற்பட்டியலும் தரப்பட்டுள்ளது. மொத்தத்தில் வேறுபட்ட காலங்களுக்கும் களங்களுக்கும் எம்மை அழைத்துச் செல்லும் திரு.யோ.யோண்சன்ராஜ்குமார் ஆசானின் “ஜீவபிரயத்தனம்” என்ற இந் நாடகப் பிரதி எமது வாழ்வின் வலிகளையும் பாடுகளையும் அதிகம் பதிவு செய்த காலச் சாட்சியாகவுப் எதிர்காலத் தலைமுறைக்கான வழிகாட்டியாவும் விளங்கிச் சிறப்புப் பெறுகிறது. இவரது நாடக அரங்கியல் பயணம் தொடர இன்னும் பிரதிகள் பல மலர தீம்புனலின் புதுப்புனல் வாழ்த்தி நிற்கிறது.

# கல்யாணக் கனவு

கனவு 02

யாழ் சத்யா



> இரட்டைப் பின்னலில் நெற்றியில் சிறு கறுத்தப் பொட்டும் காதுகளில் சிறு தங்கத் தோடுகளுமாய் வெள்ளைச் சீருடை அணிந்த ஒரு பதினைந்து, பதினாறு வயது மதிக்கத்தக்க சிறு பெண்ணோருத்தி புன் முறுவலோடிருந்தாள். கழுத்து வரைதான் எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படம் அதன் வயதைச் சுட்டிக் காட்டும் முகமாக நைந்து போயிருந்தது.

தாய்மொழியைக் கேட்கவே ஏங்கிப் போயிருந்த மனதிற்கு சஞ்சயனின் வருகை உண்மையில் பேரானந்தமாய்தான் இருந்தது. ஆனால் அவனின் பாராமுகம் சிந்தையைக் குழப்ப, அதை ஒத்தி வைத்து விட்டுத் தனது வேலையில் ஆழ்ந்தாள்.

இங்கே சஞ்சயன் நிலையோ, வைசாலியினுடையதை விடப் பரிதாபமாக இருந்தது. இந்த ஜென்மத்தில் யாரைப் பார்க்கக் கூடாது என்று நினைத்து, எட்டு வருடங்களாகச் சொந்த ஊருக்கே போகாது அஞ்ஞாத வாசம் பூண்டிருந்தானோ, அவளையே இப்படி முகத்திற்கு நேராகப் பார்க்கும் போது எப்படி இருக்கும்?

தன்னை மீறி உணர்ச்சி வசப்பட்டு அவள் பெயரை உச்சரித்த போதும் அவள் அடையாளம் கண்டு கொண்டிராதது ஆறுதலாகவே இருந்தது. பெரிதாய் ஒரு மூச்சை வெளியேற்றியவன் தனது மோட்டார் வாகனத்தில் தலவாக்கொல தேயிலைத் தொழிற்சாலையை நோக்கிச் சென்றான்.

தொழிற்சாலையை அடைந்தவன் வெளி வாயிலிலேயே இவனையே எதிர்பார்த்துக் காத்திருந்த நபரிடம் பணத்தைக் கொடுத்தான்.

“அண்ணா…! இந்தக் காசை ஆஸ்பத்திரிக்குக் கட்டிடுங்கோ. அரசாங்க ஆஸ்பத்திரில உங்கட முறைக்கு ஆறு மாசத்துக்குக் கிட்டக் காத்திருக்க வேணும். அதுவரையில் கண் சரியாகத் தெரியாமல் எப்படி வேலை பார்ப்பியள்? வேலை பறி போனால் சாப்பாட்டுக்கு என்ன செய்யிறதாக உத்தேசம்? அதனால நீங்க இந்தக் காசைக் கொண்டு போய் பிரைவேட் ஆஸ்பத்திரில ஒப்பிரேசனைச் செய்யுங்கோ. உங்களுக்கு வசதிப்படுற நேரம் திரும்பத் தாங்கோ.”

எனக் கூறியவன் ஒரு சிரித்த முகத்துடன் அவர் நன்றியைப் பெற்றுக் கொண்டு தொழிற்சாலையினுள் சென்றான்.

இதுதான் சஞ்சயன். ஒருவருக்கு உதவி தேவை என்றால் முதல் ஆளாய் நிற்பான். அவனுக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பாகுபாடு எல்லாம் கிடையாது. எல்லோருமே மனிதர்கள். அவ்வளவுதான். ‘தனக்கு மிஞ்சியதுதான் தானமும் தர்மமும்’ என்பதெல்லாம் அவன் அகராதியில் கிடையாது.

ஒருவருக்கு உதவி தேவை என்றால் தன் தலையை அடமானம் வைத்தாவது செய்து விட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்பான். உழைக்கும் பணமெல்லாம் அவனது அத்தியாவசியத் தேவைகள் தவிர்த்துப் பொதுச் சேவைக்கேதான் போய்க் கொண்டிருக்கிறது.

சஞ்சயனுக்கு ஒரு அக்கா. அவர்கள் திருமணமாகி ஜேர்மனியில் வசிக்கிறார். தந்தை சில வருடங்களுக்கு முன்பு மாரடைப்பால் இறந்து விட, தமக்கை தாயைத் தன்னோடு அழைத்துக் கொண்டார்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை தொடர்பான விவசாயக் கற்கை நெறியை முடித்தவன், பின்னர் ஹட்டன் நகரத்தில் ஒரு தோட்டத்தில் வேலை பார்த்து விட்டு, கடந்த மூன்று மாதங்களாகத்தான் தலவாக்கொலவிற்கு மாற்றலாகியிருந்தான்.

உள்ளே சென்று தொழிற்சாலையில் தனது பிரிவு வேலைகளைப் பார்வையிட்டான். தேயிலைக் கொளுந்துகள் ரகம் வாரியாகப் பிரிக்கப்பட்டு விதம் விதமான தேயிலைத் தூள்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

தேயிலைக் கொளுந்தைத் தரம் பிரிக்கும் பகுதிக்கு இவன் தான் பொறுப்பாளர். ஒரு தடவை அனைத்தையும் சுற்றிப் பார்த்து விட்டுத் தனது அலுவலக அறைக்குச் சென்று பைல்களோடும் கணணியோடும் வேலையில் ஆழ்ந்தவன், வேலையை முடித்து விட்டு நிமிர்ந்து பார்த்தால் மணி இரவு எட்டு தாண்டியிருந்தது.

அவனுக்கு வேலைதான் உலகம். வீட்டுக்குப் போய் என்னதான் செய்வது? அவனை அன்போடு வரவேற்க யார் இருக்கிறார்கள்? ஒற்றைப் படுக்கை அறையோடு கூடிய தனி வீடொன்று அவனது அலுவலகத்தாலேயே வழங்கப்பட்டிருந்தது. சமைக்கும் வசதியிருந்தாலும் தனக்கு ஒருவனுக்காய் சமைத்துச் சாப்பிடப் பிடிப்பதில்லை.

அதனால் கிடைக்கும் இடங்களில் அந்த நேரத்துக்குத் தேவையான உணவை முடித்துக் கொள்வான். ருசி அறிந்து சாப்பிட்ட காலம் எல்லாம் அந்த எட்டு வருடங்களுக்கு முன்பே முடிந்திருந்தது.

தலைக்கு மேலே கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தவன், ஏதோ எண்ணம் தோன்றியவனாய் அவன் மேசை மீதிருந்த புகைப்படத் தாங்கியைக் (போட்டோ ஸ்டான்ட்) கையிலெடுத்தான். அப்பா இறப்பதற்கு முன்பு தமக்கையின் திருமணத்தின் முன்பு எடுத்திருந்த குடும்பப் புகைப்படம்.

அதைச் சிறிது நேரம் உற்று நோக்கினான். குடும்பம் என்று ஒன்றிருந்தும் தான் அநாதையாகிப் போன உணர்வு எழ ஏக்கப் பெருமூச்சொன்று அவனையும் மீறி வெளியேறியது. தனது ஜீன்ஸ் பொக்கட்டிலிருந்த தனது பேர்ஸ்ஸை எடுத்தவன் பத்து வருடங்களாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்தச் சிறு அடையாள அட்டைப் புகைப்படம் ஒன்றைக் கைகளில் எடுத்து உள்ளங்கையில் வைத்துப் பார்த்தான்.

இரட்டைப் பின்னலில் நெற்றியில் சிறு கறுத்தப் பொட்டும் காதுகளில் சிறு தங்கத் தோடுகளுமாய் வெள்ளைச் சீருடை அணிந்த ஒரு பதினைந்து, பதினாறு வயது மதிக்கத்தக்க சிறு பெண்ணொருத்தி புன் முறுவலோடிருந்தாள். கழுத்து வரைதான் எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படம் அதன் வயதைச் சுட்டிக் காட்டும் முகமாக நைந்து போயிருந்தது. அதன் ஓரங்களை நீவிச் செம்மைப்படுத்தியவன்,

“எப்பிடியிருக்கிறாய் குட்டிம்மா…?”

என்றவன், இந்த நெடிய ஆண்டுகளாய் இதயத்தின் அடி ஆழத்தில் ஏற்பட்டிருந்த காயங்களின் ரணம் தாங்க முடியாமல் அப்படியே மேசையில் தலை கவிழ்ந்தான். கனவாய்ப் போய் விட்ட தனது வாழ்க்கை மீதும், தன் மீதும் ஏற்பட்ட சுயபச்சாதாபத்தில் அவன் ரணம் என்னவோ அதிகரித்ததே தவிர இன்று வரை குறைவதாக இல்லை.

**கனவு நனவாகுமா?**

# உயிர் கொல்லும் நுண்கடன்




இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல விதங்களில் நடுத்தர மக்களுக்குச் சவாலாகக் காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாக நுண்கடன் திட்டம் உருவெடுத்துள்ளது. நுண்கடன் என்பது சிறிய தொகையைக் கடனாக வழங்குவதிலிருந்து வந்த ஒரு பொருளாதாரத் தத்துவம் வேலையில்லாத ஒரு சில காலங்களுக்கு மாத்திரம் வேலை உள்ள வறிய நடுத்தரப் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்குச் சுய தொழில் முனைவோராக மாற்றுவதே இதன் உண்மை நோக்கமாக இருந்தது.

இந்தச் செயற்திட்டத்தை நிதி நிறுவனங்கள், வங்கிகள் மேற்கொண்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை முதன் முதலில் பங்களாதேஷின் "கிராமின்" வங்கியே ஆரம்பித்தது. அதில் பல வறிய மக்களை சுய தொழிலில் ஈடுபடுத்தி வெற்றியும் கண்டது. ஆனால் இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கில் அதன் நிலைமை வேறு.

போர் தின்று தீர்த்த மக்களை நுண்கடன்கள் தூக்கி நிறுத்தும் என நினைத்தால் அது மக்களை மிகப்பெரிய கடனாளியாக மாற்றி விட்டிருக்கின்றது. நுண்கடன் நிறுவனங்களின் வட்டி வீதமானது நிறுவனங்களுக்கு நிறுவனம் மாறுபடுகின்றது. நூற்றுக்கு 12 வீதத்திலிருந்து 30 வீதம் வரை காணப்படுகின்றது. நிதி நிறுவனங்கள் இலாப நோக்கத்திற்காக மட்டுமே செயற்படுவதினாலயே நுண்கடன் திட்டங்களின் நோக்கம் தலைகீழாக மாறியுள்ளது. இதன் விளைவு குடும்பங்களில் பிளவு, மன உளைச்சல், இதனால் அதிகளவு பெண்கள் தற்கொலை செய்து உயிரை மாய்த்துள்ளனர். இவ் நுண்கடன் திட்டங்கள் அதிகமாகப் பெண்களை இலக்காகக் கொண்டு இயங்க ஆரம்பிக்கின்றன.

> நடுத்தர மற்றும் வறிய குடும்பங்களும் சுய தொழிலுக்காக வழங்கப்படுகின்ற கடன்களைத் தமது ஆடம்பரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகப் பெறுக்கொள்கின்றார்கள். பின்னர் அந்தத் தொகையை மீள செலுத்த முடியாமல் அல்லது மீள் செலுத்துவதற்காக இன்னுமொரு இடத்தில் கடன் வாங்குகிறார்கள். இதனால், மேலும் மேலும் கடனாளியாகின்றனரே தவிர எவ்வித முன்னேற்றமும் ஏற்படுவதில்லை.

குடும்பத் தலைமைத்துவத்தை கவனிக்கும் பெண்களே நுண்கடன் நிறுவனங்களின் இலக்காகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கான கடன்களை வாரி வழங்குகின்றது. வழங்கி விட்டு கடனை மீளச் செலுத்தும் சமயத்தில் எழுகின்ற பிரச்சினைகளின் போது கடன் வழங்கியவர்களின் அணுகுமுறை காரணமாக உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு கட்டத்தில் அதுவே தற்கொலைக்குத் தூண்டி விடுகின்றது. நுண்கடன் பிரச்சினைகளின் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் பல தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு அரச அங்கீகாரம் பெற்ற 70 நிறுவனங்களும் சில அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களும் மக்களை கடனாளிகளாக்கும் இத் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.



சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2009 இற்கு முற்பட்ட காலத்தில் பணப்புழக்கம் குறைவாகக் காணப்பட்டது. இதன்போது மக்களினுடைய ஆடம்பரச் செலவுகளும் குறைவாகவே இருந்தது. ஆனால், அதன் பின்னர் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. நடுத்தர மற்றும் வறிய குடும்பங்களும் சுய தொழிலுக்காக வழங்கப்படுகின்ற கடன்களைத் தமது ஆடம்பரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகப் பெறுக்கொள்கின்றார்கள். பின்னர் அந்தத் தொகையை மீள செலுத்த முடியாமல் அல்லது மீள் செலுத்துவதற்காக இன்னுமொரு இடத்தில் கடன் வாங்குகிறார்கள். இதனால், மேலும் மேலும் கடனாளியாகின்றனரே தவிர எவ்வித முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. குடும்பப் பெண்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்களைச் சொந்த காலில் சுயதொழில் ஈடுபட வைப்பதற்காகவும் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் தலைகீழாகவே மாறியுள்ளது.

இக் கடன் திட்டங்களில் இருந்து காப்பாற்ற மக்களுக்கு இன்னுமோர் திட்டத்தைக் கொண்டு வர வேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. நிதி நிறுவனங்களின் நுண்கடன் திட்டங்கள் அரசின் நேரடி பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டு நிறுவனங்களின் நடைமுறை, கடன் வாங்கும் முறை, பயனாளர்களின் தெரிவு, வட்டி வீதம் போன்ற பல விடயங்கள் முறைப்படுத்தப்படாத பட்சத்தில் இவ் நுண்கடன்களால் இன்னும் பல பாதிப்புக்கள் ஏற்படும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. ■

# மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்ற இந்தியப் பெண் ஹர்னாஸ் சந்து

இஸ்ரேல் நாட்டின் ஈலாட்டில் (Eilat) உள்ள யுனிவர்ஸ் டோமில் (Universe Dome) நடைபெற்ற மிஸ் யுனிவர்ஸ் 2021 போட்டியில் பட்டத்தை வென்றுள்ளார் இந்தியாவின் சண்டிகரைச் சேர்ந்த ஹர்னாஸ் சந்து (Harnaaz Sandhu). 21 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் மிஸ் யுனிவர்ஸ் முடியை சூட்டியுள்ளார்.

மிஸ் யுனிவர்ஸ் 2021 பட்டம் வென்ற ஹர்னாஸ் சந்துவிற்கு 2020 ஆம் ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் டைட்டிலை வென்ற மெக்சிகோவைச் சேர்ந்த ஆண்ட்ரியா மெசா (Andrea Meza) கிரீடத்தைச் சூட்டினார். இந்த நிகழ்வு உலகளவில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. சண்டிகரைச் சேர்ந்த 21 வயதான ஹர்னாஸ் சந்து சண்டிகரில் தனது பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை முடித்துள்ளார். அவர் ஏற்கெனவே பல போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார்.

இதற்கு முன் இந்திய நடிகை சுஷ்மிதா சென் 'மிஸ் யுனிவர்ஸ்-1994' போட்டியில் அழகிப்பட்டம் வென்றார். பின் 2000 ஆம் ஆண்டில் இந்திய நடிகை லாரா தத்தா 'மிஸ் யுனிவர்ஸ்-2000' போட்டியில் அழகிப்பட்டம் வென்றார். !

யுனிவர்ஸ் அரங்கில் நடைபெற்ற மிஸ் யுனிவர்ஸ் 2021 நிகழ்வில், கேள்வி பதில் மற்றும் இறுதிச் சுற்றில் பங்கு பெற்ற ஐந்து போட்டியாளர்கள் என்ன பதிலளித்தார்கள் என்பதன் விபரம்:.

ஒவ்வொரு இறுதிப் போட்டியாளரிடமும் நீதிபதியால் வெவ்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. போட்டியாளர்கள் பல விஷயங்களில் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு 30 வினாடிகள் இருந்தன. இதில், மூன்று பேர் மிஸ் யுனிவர்ஸ் 2021 இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**மிஸ் இந்தியா:- ஹர்னாஸ் சந்து!**

**கேள்வி:** இளம் பெண்கள் இன்று எதிர்கொள்ளும் அழுத்தத்தை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து என்ன அறிவுரை கூறுவீர்கள்.

**பதில்:** அதற்கு அவர் "இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அழுத்தம், தங்களை நம்புவதுதான், நீங்கள் தனித்துவமானவர், அதுதான் உங்களை அழகாக்குகிறது. உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுவதை நிறுத்துங்கள், உலகளவில் நடக்கும் முக்கியமான விஷயங்களைப் பற்றி பேசுவோம். இது நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது என்ன, வெளியே வாருங்கள், உங்களுக்காகப் பேசுங்கள், ஏனென்றால் நீங்கள்தான் உங்கள் வாழ்க்கையின் தலைவர், நீயே உன் குரல். நான் என்னை நம்பினேன் அதனால் தான் இன்று இங்கு நிற்கிறேன்."



**மிஸ் பராகுவே:- நடியா ஃபெரீரா**

**கேள்வி:** பாடி ஷேமிங்கை பெண்கள் எவ்வாறு சிறப்பாகக் கையாள முடியும்?

**பதில்:** நமது உடலே நமது கோவில். எனவே, நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். நமது அக-அழகுதான் முக்கியம். நமது அக அழகை வளர்ப்போம், அது நமது வெளிப்புற அழகில் பிரதிபலிக்கும். நன்றி!

**மிஸ் கொலம்பியா:- வலேரியா மரியா அயோஸ் போசா**

**கேள்வி:** குளோபல் சிட்டிசனின் கூற்றுப்படி, உலகின் 95% நாடுகள் ஒரு ஆண் தலைவரால் வழிநடத்தப்படுகின்றன. அதிகமான பெண்கள் பொறுப்பில் இருந்தால் உலகம் எப்படி மாறும்?"

**பதில்:** பெண்கள் இயல்பிலேயே தலைவர்கள். சமுதாயத்தில் முன்மாதிரியாகக் குரல் எழுப்பி முடிவெடுக்கும் ஆற்றல் எங்களிடம் உள்ளது. அதனால்தான் மிஸ் யுனிவர்ஸ் என்ற இந்த மேடையில் பெண்கள் குரல் எழுப்புகிறார்கள். நாங்கள் எங்கள் வாழ்க்கையைப் பொறுப்பேற்கிறோம், மேலும் சமூகத்தை ஒரு சிறந்த வழியில் மாற்றுவதற்கு நாம் எதைக் கைவிட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறோம். எனவே, பெண்களே குரல் எழுப்பி நம்மைச் சிறந்த ஐக்கிய பிரபஞ்சமாக மாற்றுவோம்.

**மிஸ் பிலிப்பைன்ஸ்: பீட்ரைஸ் லூய்கி கோம்ஸ்**

**கேள்வி:** மாறிவரும் கோவிட் சூழ்நிலையில், உலகளாவிய தடுப்பூசி பாஸ்போர்ட்டைக் கட்டாயமாக்குவது பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்:** பொதுச் சுகாதாரம் என்பது அனைவரின் பொறுப்பு என்றும், தடுப்பூசியைக் கட்டாயமாக்குவது அவசியம் என்றும் நான் நம்புகிறேன். தடுப்பூசி பாஸ்போர்ட்டை கட்டாயமாக்குவது, தடுப்பூசிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் வெளியிடுவதற்கும், இன்றைய தொற்றுநோயின் நிலைமையைக் குறைப்பதற்கும் உதவும் என்றால், அந்த தடுப்பூசிக்குத் தேவையான பாஸ்போர்ட்டைக் கட்டாயமாக்குவதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

**மிஸ் தென் ஆபிரிக்கா:- லலேலா லாலி மஸ்வானே**

**கேள்வி:** பதின்பருவத்தில் உள்ள ஒருவரின் ட்வீட்கள் மற்றும் சமூக ஊடகக் கருத்துகள் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு எதிராக நடத்தப்படுமா?

**பதில்:** ஒவ்வொருவரும் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். மேலும், ஒருவருக்கு சமூக ஊடகங்களில் செயல்படத் தெரியாவிட்டால், அதிலிருந்து வெளியேற வேண்டும். அதே இடத்தில் கலாசாரத்தை நீக்கம் செய்வதை நான் நம்புகிறேன், நான் மீட்பின் கலாசாரத்தையும் நம்புகிறேன், மேலும் அந்த நபர் முதிர்ச்சியடைந்து, சிறப்பாகக் கற்றுக்கொண்டு சிறப்பாகச் செய்திருப்பார் என்று நம்புகிறேன். அவர்கள் சிறப்பாகச் செய்து மீட்கப்படுவார்கள் என்று நம்புகிறேன். ■


# ஒரு கிராமத்தின் முகவரி

இ.சு.முரளிதரன்

“மக்களுக்காக மரணிப்பது வாழ்வதிலும் பார்க்கச் சிறந்தது. எனது மகனின் மகத்துவம் மிக்க மரணத்திற்காக நான் அஞ்சவில்லை. அழுது துடிக்கவில்லை. வீர மரணம் வாழ்விலும் பார்க்கப் பெறுமானம் உள்ளதாகக் கருதுகின்றேன். ஆனால் அந்தச் சாவில் எழுதிய சாகசங்கள் யாவும் எம் மக்களால் மறக்கப்பட்டால் அல்லது இந்தப் புரட்சிப் பூக்களின் கனவுகள் நனவாக்கப்படாது போனால் என் மகனின் மரணத்திற்காக அப்போது நான் அழுவேன்”

போராளி ஒருவரின் வீர மரணத்தை முன்னிட்டு 1987 இல் தந்தை எழுதிய வரிகளே இவை! போராட்டங் குறித்த ஆழமான புரிதலும் தமிழ் மக்களைப் பற்றிய துல்லியமான பார்வையும், அரசியல் குறித்த தீர்க்க தரிசனமும் வாய்க்கப்பெற்ற ஒருவராலே தான் இத்தகைய வரிகளை எழுத முடியும். இந்த வரிகளை எழுதியவர். என் கிராமத்தின் முகவரியாகத் திகழ்கின்ற க.சண்முகசுந்தரம் அவர்கள்தான்! இரசாயனவியல் மேதையான சண் சேர் தூல வடிவில் நம்மோடு இல்லை என்றாலும் சூக்கும வடிவில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். அவரது வார்ப்புக்களான மாணவர்கள் பன்முகத்துறைகளிலும் பிரகாசித்த வண்ணம் உள்ளனர். “சண்ணர் organic chemistry விண்ணர்” என்று அந்த மாணவர்களின் உதடுகள் என்றென்றும் உச்சரித்துக் கொண்டேயிருக்கும்.

நல்லாசிரியருக்கான முன் மாதிரிப் பண்புகளோடு வாழ்ந்து மறைந்திருக்கிறார். பண்டிதர் கந்தையாவின் இரண்டாவது மகனாக அவதரித்ததிலிருந்து பலாலி ஆசிரிய கலாசாலையில் ஓய்வு பெறும் வரையிலுள்ள அவரது வாழ்விலும் ஓய்வின் பின்னர் மக்கள் நலதிட்டங்களுக்கு உறுதுணையாக அமைந்து மரணம் வரைக்கும் சமூக முன்னேற்றத்தினைச் சிந்தித்த அவரது வாழ்வியலும் பெறுமானம் மிக்கவையே!



இளவயதிலிருந்தே உடல் ஆரோக்கியத்திலே அக்கறை கொண்டு தேகப்பயிற்சிகளை செய்கின்ற வழக்கத்தினைக் கொண்டிருந்தார். கற்பித்த கல்லூரிகளில் சாரணியம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பவற்றோடு மெய் வல்லுநர் போட்டிகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி பெரு வெற்றிகளை குவிக்க ஊக்கப்படுத்தினார். தொண்டைமானாறு வெளிக்கள நிலையமானது வினாத்தாள் தயாரிப்பு பணிகளோடு இன்று திருப்தி கண்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் வெளிக்கள நிலையத்தின் நோக்கமே வேறு வகையானது. மாணவர்களுக்கு வெளிக்கள அனுபவங்களை வழங்கி அனைத்துத்துறையிலும் புத்தாக்குநர்களையும், கனதியான புலமையாளர்களையும் உருவாக்குவதாக அமைந்திருந்தது. இரசாயனவியலுக்கான பொறுப்பாசிரியராக சண் சேர் நியமிக்கப்பட்டார். மேலும் 1962 - 1971 வரை தொண்டைமானாற்றுப் பாலம், வல்லைப் பாலம், சாவகச்சேரி சார்ந்த நீரேரி ஆகிய இடங்களில் TSSTA இனால் முன்னேடுக்கப்பட்ட ஆய்வுகளை மாணவர்கள் நடத்தினர். நீரில் நிகழும் மாற்றங்கள். உயி ரிகளில் நிகழும் மாற்றங்கள் என்பன அளவீடுகளாகப் பெறப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டன. கருத்தரங்குகள் நிகழ்த்தப்பட்டன. விஞ்ஞான மாணவர்களுக்கு இது போன்ற வெளிக்களப் பயிற்சி ஆய்வு அனுபவம் பின்னர் எக்காலத்திலும் கிடைக்கவேயில்லை. இவற்றையெல்லாம் சண் சேர் முனைப்போடு ஆற்றுப்படுத்தினார்.



கிராமத்தின் முன்பள்ளி, சன சமூக நிலையம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் தலைமைப் பொறுப்பினை ஏற்று வழிநடத்தினார். ஆலயங்களின் நிர்வாகப் பொறுப்புக்களிலும் பங்கெடுத்து நெறிப்படுத்தினார். தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களில் வசதி குறைவானவர்களை இனங்கண்டு உரிய உதவிகளைச் செய்து முன்னேற்றத்தற்கு வழிப்படுத்ததினார். நான் அவரிடம் கல்வி கற்றதில்லை. ஆனால், எனது வாசிப்புப்பழக்கம் விருத்தியடையப் பின்புலமாக அமைந்தார். நானும், சண் சேர் உடைய இளைய மகன் வேந்தியும் நெருக்கமான நண்பர்கள். சண் சேர் எப்போதும் நூல்களைப் படித்துக் குறிப்புகளைச் சேகரித்துக் கொண்டிருப்பார். நாமிருவரும் அரட்டை அடித்துக் கொண்டு இருப்போம். ஒரு நாள் இருவரையும் அழைத்து ஆளுகொரு புத்தகத்தைத் தந்து வாசிக்கச் செய்தார். “ தினமும் ஒவ்வொரு புத்தகம் வாசிக்க வேண்டும்” என்று கண்டிப்பான உத்தரவு இட்டார். எங்கள் காலத்தில் வெளியான கோகுலம், ராணி காமிக்ஸ், அம்புலிமாமா என அத்தனையும் வாங்கித்தந்து வாசிக்கச் செய்தார்.

க.பொ.த சாதாரண தரம் சித்தி எய்திய தருணத்திலே ஒரு நாள் என்னிடம் “A/L என்ன படிக்கப்போறாய்?” என்று கேட்டார். இதே கேள்வியை என்னிடம் இதற்கு முன்னர் பலர் கேட்டு விட்டார் கள். என் பதிலால் திருப்தி அடையாமல் மாற்று யோசனையினையே முன்வைத்தார்கள். எனவே தயங்கித் தயங்கி “Arts” என்றேன் அவர் என்னைப் பாராட்டியதோடு இலக்கணம் கற்கும் நுட்பமொன்றினையும் சொல்லித் தந்தார். சிறு வயதிலிருந்தேஅவரைப் பார்த்து வியந்த என்னை, ஒரு நாள் அழைத்து “நல்லாய் எழுதுகிறாய்... சந்தோசம்! இது நான் எழுதிய கட்டுரை ஒருக்கால் திருத்தித் தா” என்றார். எனக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. “S.S.செல்லத்துரை காலத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி” பற்றிய அக் கட்டுரை அற்புதமாக எழுதப்பட்டிருந்தது. என் அறிவிற்கு எட்டிய வரையில் ஒரிரு திருத்தங்களைச் செய்து கொடுத்தேன். மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

பதின்ம வயதைக் கடந்த பின்னர்தான், “பாசமலர்” திரைப்படம் பார்த்தேன். எனக்கு சிவாஜி - சாவித்திரி இருவரும் “சண் சேரும்-இந்திராக்காவும்” போலவே தெரிந்தனர். இன்றுவரை அந்தப் படிமம் மாறாமல் அப்படியே தொடர்வது ஆச்சரியமானது. சகோதர பாசத்தின் குறியீடாகவும் “சண் சேர்” விளங்கினார். ஒருநாள் கால் மிதி உடைந்த ஈருருளி ஒன்றினை ஓட்டிய என் அண்ணர் தவறிக் கீழே விழுந்து விட்டார். கால் மிதியிலிருந்த கம்பி வயிற்றைக் கிழித்து விட்டது. நிகழ்விடத்திலிருந்த சண் சேர் உடனடியாக இரு கைகளிலும் ஏந்தி உறவினரின் கார் ஒன்றிலே வைத்து மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். தாமதமாகியிருப்பின் உயிராபத்து நேர்த்திருக்கும் என மருத்துவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு என் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டோடும் சண் சேர் ஏதோவொரு விதத்திலே தொடர்புபட்டிருப்பார். என் கிராமத்தின் அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற இரசாயனவியல் ஆளுமையின் புகழ் பன்னெடுங்காலம் நிலைத்திருக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

■

---

# மீண்டும் தலைவரானார் செல்வேந்திரா

எஸ்.தில்லை நாதன்



வல்வெட்டித்துறை நகரசபையின் புதிய தலைவராக சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த சபாரட்ணம் செல்வேந்திரா புதிய இணக்கப்பாட்டுடன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வல்வட்டித்துறை நகர சபைத் தலைவரான கோ.கருணானந்தராஜா கொரோனாவால் மரணமானதால் ச. செல்வேந்திரா தலைவரானார். சுயேட்சைக் குழுவின் தலைவராக இருந்த சபாரட்ணம் செல்வேந்திரா இரு முறை சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டம் சபையால் நிராகரிக்கப்பட்டு தோல்வியடைந்ததால் பதவி இழந்தார். இந்நிலையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் விடுத்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பட்ரிக் ரஞ்சன் தலைமையில் புதிய தலைவருக்கான தெரிவு நேற்று (15) புதன் கிழமை நடைபெற்றது.

இதன் போது புதிய தலைவர் பதவிக்கு ச. செல்வேந்திராவின் பெயர் முன் மொழியப்பட்டது.மொத்தமாகவுள்ள 17 உறுப்பினர்களால் அவருக்கு ஆதரவாக ரெலோ உள்ளிட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் , சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், தமிழ்த்தேசியமக்கள் முன்னணியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், தமிழ் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒரு உறுப்பினருமாக 13 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். ஈ.பி.டி.பியின் 2 உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினரும் தலைவர் தெரிவுக்கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லை. தமிழ்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் வாக்களிப்பு நேரம் எழுந்து சென்றுவிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சிக்கும், சுயேட்சைக் குழுவுக்கும் இடையே சில தினங்களுக்கு முன்னர் இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்தே சுயேட்சைக் குழுத்தலைவர் ச.செல்வேந்திரா சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இணக்கப்பாட்டுக்கமைய முதல் 6 மாதங்கள் சுயேட்சைக்குழு செல்வேந்திரா தலைவராகவும், அடுத்த 6 மாதங்களுக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ உறுப்பினர் ஒருவர் தலைவராகவும் தெரிவு செய்யப்படுவார் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரங்களுக்குப் பின்னணியில் இருந்து செயல்பட்ட முன்னாள் யாழ் . மாவட்ட பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினரான எம்.கே சிவாஜிலிங்கம் சுமார் 50 ஆண்டுகாலத்துக்கு முன்னர் வல்வெட்டித்துறையில் தமிழ்தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்தது போல இன்று வல்வெட்டித்துறையில் தமிழ் தேசியக் கட்சிகளை ஒற்றுமையாக ஒரே அணியில் கொண்டு வரப்பட்டுள்ளது எனக் கருத்து தெரிவித்தார்.

■

# 25 வருடங்களின் பின் Alexa.com ஐ மூடும் Amazon




Alexa Internet **1996** இல் தொடங்கப்பட்டது மற்றும் விரிவான SEO (Search Engine Optimization) பகுப்பாய்வு மற்றும் நுண்ணறிவுகளுடன் (Insights) கட்டணச்சந்தா சேவையை வழங்குகிறது.

அமேசான் நிறுவனம் கடந்த **25** ஆண்டுகளாக செயல்பட்டு வரும் அதன் இணையதள தரவரிசை கருவியான Alexa.com ஐ மூடுவதாக அறிவித்தது. SEO ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கருவிகளுடன் கட்டணச் சந்தாவை வழங்கிய சேவை, அடுத்த ஆண்டு இணையதளங்களின் புள்ளிவிவரங்கள் மற்றும் அவற்றின் தரவரிசைகளை வழங்குவதை நிறுத்த உள்ளது. அலெக்சா இன்டர்நெட் மூடப்பட்ட பிறகு, சேவையின் பயன்பாட்டு நிரலாக்க இடைமுகம் (API) டிசம்பர், **2022** இல் நிறுவனத்தால் முடக்கப்படும் என்று அமேசான் தெரிவித்துள்ளது. அமேசான் சேவை நிறுத்தப்படும் முன் பயனர்கள் தங்கள் அலெக்சா தரவை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்.

மே, **2022** க்குள் வலை தரவரிசை சேவையான Alexa.com ஐ மூடுவதற்கான தனது முடிவை நிறுவனம் ஒரு ஆதரவு பக்கத்தில் அறிவித்தது, முதலில் bleepingcomputer.com என்ற வலைத்தளம் மூலம் கண்டறியப்பட்டது. 'இரண்டு தசாப்தங்களாக உங்கள் டிஜிட்டல் பார்வையாளர்களைக் கண்டறியவும், அடையவும் மற்றும் மாற்றவும் உங்களுக்கு உதவிய பிறகு மே **1, 2022** அன்று Alexa.com இல் இருந்து ஓய்வு பெறுவதற்கான கடினமான முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்' என்று நிறுவனம் தனது ஆதரவுப் பக்கத்தில் தெரிவித்துள்ளது. அலெக்சா இன்டர்நெட் டிசம்பர் **8** முதல் புதிய சந்தாக்களை ஏற்றுக்கொள்வதை நிறுத்தியுள்ளது, மேலும் சேவை நிறுத்தப்படும் வரை ஏற்கெனவே உள்ள வாடிக்கையாளர்களுக்கு பாவனை உரிமம் இருக்கும்.

அமேசான், ஏப்ரல் **1996** இல் அலெக்சா இன்டர்நெட்டை அறிமுகப்படுத்தியது. மேலும் சேவையின் மிக பிரபலமான மெட்ரிக் Alexa Traffic Rank (அல்லது குளோபல் ரேங்க்) ஆகும், இது பயனர்களுக்கு வலைத்தளத்தின் பிரபலத்தின் மதிப்பீட்டை வழங்குகிறது. AMAZON நிறுவனம் வாடிக்கையாளர்கள் தங்கள் தரவை பணிநிறுத்தத்திற்கு முன்னதாக ஏற்றுமதி செய்யவும் மற்றும் அவர்களின் Alexa.com கணக்கை முன்கூட்டியே நீக்கவும் அனுமதிக்கும். இதற்கிடையில், சேவையின் APIகள் டிசம்பர் **2022** இல் நிறுத்தப்படும் என்று bleepingcomputer தெரிவிக்கிறது.

Alexa இன்டர்நெட்டை நிறுத்துவதற்கான காரணத்தை Amazon நிறுவனம் வழங்கவில்லை என்றாலும், போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்தல் பகுப்பாய்வு நிறுவனமான Semrush இன் தரவை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. பல ஆண்டுகளாக நிலையான சரிவைக் கண்டது. இந்தக் அறிவிப்பை வெளியிடும் நேரத்தில் வரவிருக்கும் பணிநிறுத்தத்தை அறிவிப்பதற்காக அலெக்சா இன்டர்நெட்டின் Facebook, Twitter கணக்குகளில் வெளிவரவில்லை.




## வருகின்றது விண்டோஸ் பீசிகளுக்கான ஆண்ட்ராய்டு கேம்ஸ் – கூகுள் பிளே கேம்ஸ்

Google, The Game Awards **2021** இன் போது, ஆண்ட்ராய்டு கேம்களை விண்டோஸ் பிசிக்களுக்குக் கொண்டு வரும் திட்டத்தை அறிவித்தது. தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் ப்ளே கேம்ஸ் இயங்குதளத்தை விண்டோஸூக்கு அடுத்த ஆண்டு ஒரு முழுமையான அப்ளிகேஷன் மூலம் கொண்டு வரும். இந்த மேம்பாட்டின் மூலம், பயனர்கள் கூகுளிலிருந்து நேரடியாகத் தங்கள் விண்டோஸ் கணினிகளில் ஆண்ட்ராய்டு கேம்களை விளையாட முடியும். ஆண்ட்ராய்டு போன்கள் மற்றும் டேப்லெட்டுகள், Chrome books மற்றும் Windows PC களுக்கு இடையே ஒரே நேரத்தில் மாறுவதற்கு இது பயனர்களை அனுமதிக்கும்.

ஆண்ட்ராய்டு மற்றும் கூகுள் பிளேயில் உள்ள கேம்களின் கூகுளின் தயாரிப்பு இயக்குனரான கிரெக் ஹார்ட்ரெல் (Greg Hartrell), மேற்கோள் காட்டினார்.

"இந்த கூகுள் கட்டமைக்கப்பட்ட தயாரிப்பு Google Play கேம்களின் சிறந்ததை அதிக மடிக்கணினிகள் மற்றும் டெஸ்க்டாப்புகளுக்குக் கொண்டு வருகிறது, மேலும், வீரர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஆண்ட்ராய்டு கேம்களை இன்னும் அதிகமாக அனுபவிக்க எங்கள் தளத்தை விரிவுபடுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்", ஹார்ட் ரெல் மேலும் கூறினார்.

கூகுள் பிளே கேம்ஸ் இயங்கு தளத்தை ஆண்ட்ராய்டில் இருந்து விண்டோஸூக்கு போர்ட் செய்வதற்கு எந்த நிறுவனங்களுடனும் கூகுள் கூட்டு சேரவில்லை என கூறப்படுகிறது. கூடுதலாக, நிறுவனம் இந்த செயலியை சொந்தமாக உருவாக்கியுள்ளது என்பதை Google செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார்.

## எனது வாழ்க்கையில் மிகவும் கடினமான ஆண்டு 2021- பில்கேட்ஸ்.

பில் கேட்ஸ் கூறுகையில், **2021** தனது வாழ்க்கையின் கடினமான ஆண்டாக இருந்தது.

"இது எனக்குத் தனிப்பட்ட சோகமான ஆண்டு என்பதை என்னால் மறக்க முடியாது" என்று மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் கூறுகிறார்.

மெலிண்டா பில்கேட்ஸூடனான அவரது விவாகரத்து மற்றும் கொரோனாத் தொற்றுநோயின் தனிமை அனைத்தும் அவரை பாதித்துள்ளது என்று கேட்ஸ் செவ்வாயன்று தனது Gates Notes Blog வலைப்பதிவில் எழுதினார்.

"நான் வேலை செய்த விஷயங்களின் ஆண்டாக இருந்தது என்பதை என்னால் மறக்க முடியாது."

**27** வருட திருமணத்திற்குப் பிறகு இருவரும் பிரிந்து செல்வதாக மே மாதம் அறிவித்த பிறகு, ஆகஸ்ட் மாதம் கேட்ஸின் விவாகரத்து இறுதியானது. அறிவிப்புக்குப் பிறகு, **132** வருட பழமையான ஊடகமான Wall Street Journal (வால் ஸ்ட்ரீட் ஜேர்னல்) தெரிவித்தது.

மருத்துவ மாணவியான கேட்ஸின் மகள் ஜெனிபர் அக்டோபர் மாதம் நியூயார்க்கில் திருமணம் செய்து கொண்டார். அவரது மற்ற இரண்டு குழந்தைகள், ஃபோப் (Phoebe ) மற்றும் ரோரி (Rory ), கல்லூரியில் இல்லாததால், கேட்ஸ்சை ஒரு வெற்று கூட்டை போல விட்டுச் செல்கிறார்கள்.




"இந்த நாட்களில் புத்தகம் படிப்பதில் அல்லது வேலை செய்வதில் கவனம் செலுத்துவது எளிதாக இருந்தாலும் கூட அவர்கள் வீட்டில் இருப்பதை நான் இழக்கிறேன்" என்று கேட்ஸ் எழுதினார்.

கோவிட்-**19** தொற்றுநோய் என்பது பெரும்பாலான மக்களைப் போலவே, நேருக்கு நேர் சமூக தொடர்பு இல்லாமல் நீண்ட நேரத்தை எதிர் கொண்டதாகவும் கேட்ஸ் கூறினார்.

"கடந்த **12** மாதங்களில் இருந்ததை விட எனது தனிப்பட்ட உலகம் ஒருபோதும் சிறியதாக உணரவில்லை". "இது ஒரு விசித்திரமான அனுபவம்" என எழுதினார். **2022** ஆம் ஆண்டு நடப்பாண்டை விட சிறப்பாக இருக்கும் என்று தான் நம்புவதாக கேட்ஸ் கூறுகிறார்.

எனது ஆண்டின் மிகவும் சுவாரஸ்யமான பகுதியாகும் என்று நான் நினைத்தாலும் கூட வீட்டிற்கு நெருக்கமான ஒரு விஷயத்தைப் பற்றி அறிவதற்கு நிறைய பேர் ஆர்வமாக இருப்பதை நான் அறிவேன்: அது என் விவாகரத்து" என்று கேட்ஸ் எழுதினார். "மெலிண்டாவும் நானும் எங்கள் அறக்கட்டளையைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம், மேலும் ஒரு நல்ல புதிய வேலை செய்யும் முறையை கண்டுபிடித்துள்ளோம், ஆனால் இது எனக்கு தனிப்பட்ட சோகத்

| NO | NAME | PRICE ($) |
|---|---|---|
| 01 | BIT COIN (BTC) | 47,709.023 |
| 02 | ETHEREUM (ETH) | 3,956.28 |

| NO | NAME | PRICE $ |
|---|---|---|
| 03 | BINANCE COIN (BNB) | 531.37 |
| 04 | SOLANA (SOL) | 180.55 |

| NO | NAME | PRICE ($) |
|---|---|---|
| 05 | AVALANCHE AVAX | 101.94 |
| 06 | RIPPTE (XRP) | 0.8194 |

# இந்திய அரசியலில் சலசலப்பைக் கிளப்பிய ஸ்டாலின் – சந்திரசேகர ராவ் சந்திப்பு

தமிழகத்துக்கு விஜயம் செய்த தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், ஸ்டாலினைச் சந்தித்தது இந்திய அரசியலில் பேசு பொருளாகி உள்ளது.

தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், தனது குடும்பத்தினருடன் திருச்சி மாவட்டம், ஶ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். அதன் பின்னர், சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள மு.க.ஸ்டாலின் இல்லத்துக்குச் சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்துப் பேசினார். அந்த சந்திப்பின் போது, மு.க.ஸ்டாலினின் மனைவி துர்கா, மகன் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உடனிருந்தனர்.

அதேபோல, சந்திரசேகர ராவ்வும் மனைவி மற்றும் மகனுடன் வந்திருந்தார். இல்லத்துக்கு வந்த சந்திரசேகர ராவை வாயில் வரை சென்று மு.க.ஸ்டாலின் பூங்கொத்து மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றார். இந்தச் சந்திப்பு தேசிய அளவில் அரசியல் களத்தில் கவனிப்பை ஏற்படுத்தியுள்ளது. பா.ஜ.க மீது எதிர்ப்புக் காட்டாமல் இருந்த சந்திரசேகர ராவ், சமீப காலமாக பா.ஜ.கவை காட்டமாக விமர்சனம் செய்து வருகிறார்.

இந்தநிலையில், மு.க.ஸ்டாலினைச் சந்தித்தது பா.ஜ.கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். தெலுங்கானா முதல்வர் சந் திரசேகர ராவ் இதற்கு முன்பு ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் மற்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர் ஜியையும் சந்தித்துப் பேசினார். பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிராகக் காங்கிரஸ் தவிர்ந்த அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் மம்தா செயற்படுகிறார். அந்த அணியில் சந்திரசேகர ராவும் இருப்பதால் மூன்றாவது அணிக்கான அழைப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் உள்ள நரசிம்மர் கோவில், திருப்பதி கோவில் போல் புகழ் பெறச்செய்யும் வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அக்கோவிலின் திறப்பு விழா விரைவில் நடக்க உள்ளது. அதில் பங்கேற்க ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கவே, சந்திரசேகர ராவ் வந்தார் என, ஒரு தரப்பில் கூறப்படுகிறது.

மற்றொரு தரப்பில், பா.ஜ.வுக்கு எதிரான மாநில கட்சிகள் ஒன்றிணைந்து, மூன்றாவது அணி அமைப்பது குறித்து பேச்சு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் இல்லாத இந்தியா என்பது பாரதீய ஜனதாவின் கொள்கைகளில் ஒன்று. மாநிலங்களில் உள்ள காங்கிரஸின் பலவீனங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பாரதீய ஜனதாவின் செயற்பாட்டினால் பலம் மிக்க இரண்டாம் கட்டத் தலைவர்கள் காங்கிரஸை விட்டு வெளியேறிவிட்டனர். நோப்பட்ட காங்கிரஸுக்கு மம்தா மேலும் குடைச்சலைக் கொடுக்கிறார். மோடியைப் பிரதமர் ஆசனத்தில் வைத்து அழகுபார்த்த பிரசாந்த் கிஷோர் இப்போது அவரை பதவியில் இருந்து இறக்குவதற்கு நாள் பார்க்கிறார்.

மோடியை அசைப்பதற்காகக் காங்கிரஸுடன் பிரசாந்த் கிஷோத் பேச்சு வார்த்தை நடத்தினார். அங்கு அவர் எதிர் பார்த்தது நடைபெறாமையினால் மம்தா பார்னஜியிடம் சென்றார் பிரசாந்த் கிஷோரை இரு கரம் கூப்பி அழைத்த மம்தா அடுத்த கட்ட ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

கூட்டாட்சி அமைக்க ஆதரவு கேட்டு வந்த தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவிடம், காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு அளிக்குமாறு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.




மத்தியில் பாஜக, காங்கிரஸ் அல்லாத கூட்டாட்சியை அமைக்கும் முயற்சியில் சந்திரசேகர ராவ் ஈடுபட்டுள்ளார். இதற்காக அவர் ஒவ்வொரு மாநில முதல்வர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார். கடந்த வாரம் கேரள முதல்வர் பினராயி விஜயனை அவர் சந்தித்துப் பேசினார். ஸ்டாலினைச் சந்திக்க வந்தபோது அவர் தேர்தல் பிரசாரத்தில் இருந்ததால் சந்திக்க முடியாமல் போனது.

அந்த நேரத்தில் பா.ஜ.க தூதராக சந்திரசேகர ராவ் வந்தார். இதனால்தான் ஸ்டாலின் அவரைச் சந்திக்கவில்லை என்றெல்லாம் தகவல் பரவியது. இந்த நிலையில் தி.மு.க தலைவர் ஸ்டாலின் - சந்திர சேகர ராவ் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

அப்போது கூட்டாட்சி அமைக்க ஸ்டாலினிடம் ராவ் வலியுறுத்தியதாகத் தெரிகிறது. இதற்கு ஸ்டாலின் தரப்பில் சந்திரசேகர ராவ் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பு முடிந்த பின்னர் செய்தியாளர்கள் எவரையும் சந்திக்காமல் தெலுங்கானா முதல்வரும் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதியின் தலைவருமான சந்திரசேகர ராவ் சென்று விட்டார்.

சந்திரசேகர ராவின் முயற்சிக்குப் பெரிய அளவில் பலன் ஏதும் கிடைக்கவில்லை. முன்னதாக உத்தர பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் ஆகியோரை ராவ் சந்திக்க முயன்றார். ஆனால், சந்திப்பு நடக்கவில்லை. ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கிடம் இருந்தும் நல்ல பதில் கிடைக்கவில்லை. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மட்டும்தான் சந்திரசேகர ராவுடன் பேசியுள்ளார்..

தேசியக் கட்சியான காங்கிரஸ் பலவீனப்பட்டுள்ளது. பிரதமர் வேட்பாளராக ரச்குலை ஏற்றுக்கொள்ள ஏனைய கட்சிகள் முன்வரவில்லை. இதனால் எதிர்க் கட்சிகளின் பலம் குறையும் நிலை உள்ளது. தமிழகத்தில் காங்கிரஸுடன். கூட்டணி சேர்ந்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இலாபம். மத சார்பற்ற எனும் ஒற்றைச் சொல்லே தமிழகத்தின் தாரக மந்திரம். ■

---

# பூகோளப் போட்டிக்குள் ......

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அவர்கள் ஏற்கத் தயாரில்லை என்பதையே வெளிப்படுத்தியுள்ளார்கள். சுதந்திர ஆதரவு அரசியல் கட்சியின் தலைவர் டேனியல் கோவா, “காலனியாக்கப்பட வேண்டிய மக்களை மதிக்காமல் காலனித்துவமயமாக்கல் செயல்முறை முன்னோக்கிச் செல்கிறது.” என பிரான்ஸின் எதேச்சதிகார காலனித்துவ செயலை கடுமையாகச் சாடியுள்ளார்.

நான்காவது, நியூ கலிடோனியாவில் தொடர்ச்சியாகச் சுயாட்சிக்கோரிக்கைள் இறுக்கமாகக் காணப்படுவது வாக்கெடுப்பு முடிவுகளுக்குப் பின்னரான நிகழ்வுகள் உறுதி செய்கிறது. வாக்கெடுப்பு முடிவுகளின் பின்னரான நேர்காணலொன்றில் நியூ கலிடோனியாவின் ஜனாதிபதி லூயிஸ் மாபூ, “நாங்கள் எங்கள் விடுதலைப் பாதையைத் தொடர்கிறோம், அதுதான் இன்றியமையாதது.” எனக்கூறி வாக்கெடுப்பின் எந்த முடிவுகளையும் ஒதுக்கித் தள்ளியுள்ளார். லூயிஸ் மாபூ நியூ கலிடோனியாவில் அதிகார பூர்வ ஜனாதிபதி பதவியை வகிக்கும் முதல் சுதந்திர சார்புத் தலைவர் ஆவார். மேலும், 40 சதவீத மக்கள் தொகையைக் கொண்ட பழங்குடி கனக் சமூகத்தினைச் சேர்ந்தவராவார். அவர் பிரதேசத்தை ஒரு நாடு என்றே தொடர்ச்சியாகக் குறிப்பிடுகிறார். மேலும், வாக்கெடுப்பு தோல்வியடைந்தாலும், சுதந்திரத்தைக் கோரி வாக்களித்தவர்களைத் தலைநகரான நௌமியாவில் பிரெஞ்சு மூவர்ணக் கொடியைப் பறக்கத் தூண்டிய பிரெஞ்சு ஆதரவாளர்களின் செயற்பாடு, நியூ கலிடோனியவின் இறையாண்மை பற்றிய கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்பதையே உறுதி செய்கிறது.

எனவே, நியூ கலிடோனியாவின் சுதந்திரக்கோரிக்கைக்கான வாக்கெடுப்பின் தோல்வி குறுகிய கால இடைவெளியில் பிரான்ஸிற்குச் சாதகமான அரசியல் சூழலையே உருவாக்கியுள்ளது. குறிப்பாக 2022-ஏப்ரலில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு மக்ரோன் தரப்பினருக்கு அதிக நல்வாய்ப்புக்களை உருவாக்கி உள்ளது. மக்ரோன் தனது பிரச்சாரத்திற்கான உத்தியாக நியூ கலிடோனியாவின் சுதந்திர வாக்கெடுப்பு களத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்பதுவே நிதர்சனமான பார்வையாகும்.



எனினும் நீண்ட காலப் போக்கில் மீளவும் நியூ கலிடோனியா தன் அமைதியை இழந்து போராட்டக்களமாக உருவாகும் நிலைமையையே வாக்கெடுப்பு முடிவுகளுக்குப் பின்னரான நிகழ்வுகள் உறுதி செய்கிறது. அதிலும் சமகாலத்தில் சீனாவின் கரிசனையும் நியூ கலிடோனியா மீது விழுந்துள்ளமை அதிக எச்சரிக்கயை ஏற்படுத்துகிறது. அவுஸ்ரேலியாவின் ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு எதிரான தளமாக நியூ கலிடோனியாவை சீனா தேர்வு செய்யவும் அதிக வாய்ப்புக்கள் காணப்படுகிறது. இத்தகு சூழலில் நியூ கலிடோனியா பிரான்ஸிலிருந்தான சுதந்திர கோரிக்கைகளை சீன ஆதரவுடன் மூர்க்கத்தனமாக முன்வைப்பதற்கான சூழல்களும் அவதானிக்கப்படுகிறது. ■

# அடாவடி ஆக்கிரமிப்புக்கு மௌன அங்கீகாரம்



(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற தீர்மானம் நேசநாட்டுப்படைகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 1934 -1945 காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரிக்குரிய முதன்மைச்செயாளராகவிருந்த கென்றி மொஜென்தவ் (Hendry Morgenthau) என்பவரால் ஜேர்மனியின் கைத்தொழில் ஆற்றல்களை நிர்மூலமாக்குதல் ஊடாக ஜேர்மனியின் போரிடும் ஆற்றலினை பூச்சிய நிலைக்குக் கொண்டு வருதல் என்ற திட்டம் முன்மொழியப்பட்டது. இது மொஜென்தவ் திட்டம் (Morgenthau Plan) எனப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் அமெரிக்காவினாலும் நேசநாட்டுப்படைகளினாலும் கைப்பற்றப்பட்ட மேற்கு ஜேர்மனியில் இருந்த தொழிற்சாலைகள் அனைத்தும் அழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டது. தொழிற்சாலை இயந்திரங்கள் யாவும் கழற்றி அகற்றப்பட்டன. கைத்தொழில் துறையில் ஈடுபட்டிருந்த தொழில்நுட்பவியலாளர்கள், துறைசார் விற்பன்னர்கள் அனைவரும் அடையாளங்காணப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டு விவசாயத்தில் ஈடுபடநிர்ப்பந்திக்கப்பட்டனர். மேற்கு ஜேர்மனியின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் விவசாயத்தில் மட்டும் தங்கி வாழும் பொருளாதாரமாக மாற்றப்பட்டது. அது ஜேர்மனியின் வளர்ச்சியை சுமார் 1000 வருடங்களுக்குப் பின்தள்ளியதாக பொருளாதார மற்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இங்கு தோற்கடிக்கப்பட்ட இனம், தேசம் எத்தகைய துறைகள் ஊடாகவும் தன்னைக் கட்டமைத்து மேலெழக்கூடாது என்பதனை வெற்றி பெற்றவன் தான் தீர்மானிக்கின்றான். இதனையே "வெற்றிபெற்றவர்களின் நிகழ்ச்சித்திட்டம்" (Victors' Agenda) என ஆய்வாளர்கள் விவரிக்கின்றார்கள். மோஜென்தவ் திட்டத்தின் கீழ் "கைத்தொழில் நீக்கம் (De-industrialization) 1944 இலிருந்து துரிதமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை 1947 இல் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி கேபட் கூவர் தனது மேற்கு ஜேர்மன் விஜயத்தின் பின் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். அவ் அறிக்கையில் சரணாகதிக்குப் பின்னரான ஜேர்மனியில் அமுல்படுத்தப்படும் கைத்தொழில் நீக்கம் என்ற திட்டத்தின் காரணமாக ஜேர்மன் மக்கள் முழுமையாக விவசாயத்திலேயே தங்கிவாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஜேர்மனியின் விவசாயம் அங்கு வாழும் ஒட்டுமொத்த மக்களையும் அடுத்த வளர்ச்சி நிலைக்குக் காவிச்செல்லும் (Carrying capacity of agriculture) திறனற்றது. இந்நிலை தொடருமானால் அண்ணளவாக 25.0 மில்லியன் மக்கள் ஜேர்மனியை விட்டு அகதிகளாக வெளியேறுவர் அல்லது வெளியேற்றப்படவேண்டும். இதனால் ஜேர்மனியில் மிகப்பெரும் மக்கள் தொகை வெளியேற்றமும் அண்டைநாடுகளின் அதிகரித்த அகதிகளின் நெருக்கடிகளும் ஏற்படும். எனவே இந்நிலைமை மாற்றியமைப்பதற்குரிய தந்திரோபாய திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இவ் அறிக்கையினைத் தொடர்ந்து அப்போதைய காலகட்டத்தில் அரசின் முதன்மையான செயலாளர்களுள் ஒருவராக இருந்த அல்பிரட் மார்ஷல் (Alfred Marshal) ஒரு திட்டத்தை முன்மொழிந்தார். அதுவே மார்ஷல் திட்டம் (Marshal Plan) எனப்பட்டது. அத்திட்டம் 1947 ஆம் ஆண்டில் உடனடியாகவே அதுவரை அமுல்படுத்தப்பட்டுவந்த மொஜென்தவ் திட்டத்தை பதிலீடு செய்தது.

அல்பிரட் மார்சல் தனது திட்டத்தில் பின்வரும் விடயங்களை வலியுறுத்தியிருந்தார்.

1. மேற்கு ஜேர்மனி தற்போது அமெரிக்காவினதும் நேசநாடுகளினதும் அங்கமாக மாறிவிட்டது.

2. சோவியத்ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்கு கீழ் சென்ற மேற்கு ஜேர்மனியை விட வேறுபட்ட விதத்தில் நாங்கள் மேற்கு ஜேர்மனியை கையாளவேண்டும்.

3. சரணாகதிக்கு முற்பட்ட ஜேர்மனி கைத்தொழிலிலும் தொழில்நுட்பத்திலும் கனரகஉற்பத்தியிலும் முழுமையான ஆற்றல்களைக் கொண்டிருந்தபடியால் நாங்கள் ஜேர்மனி கொண்டிருக்கும் திறமைகள் அனுகூலங்களின் அடிப்படையில் மீண்டும் ஒரு கைத்தொழில் நாடாக (Re-industrialized Country) அபிவிருத்தி செய்வோம் என்பதாகும்.

இன்று நாங்கள் காணும் மேற்கு ஜேர்மனி என்பது மார்ஷல் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மீள்-கைத்தொழில் மயப்படுத்தல் சிந்தனையினால் மீட்டெடுக்கப்பட்டதாகும்.

இப்பொழுது எங்களுக்குப் புரியக்கூடியதாக இருக்கும் எத்தகைய திசையில் என்னவிடயம் நடக்கப்படக்கூடாது என்பதனைத் தீர்மானிப்பதும் முட்டுக்கட்டைகள் போடுவதும் தாமதப்படுத்துவதும் மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட சிதைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய கட்டங்களாகவே அமைகின்றது.

எங்கள் அரசியல் தலைவர்களும் ஏகபிரதிநிதிகளும் இத்தகைய விடயங்களை நம்பி எம்மக்களை "இலவு காத்த கிளிகளாக" ஏமாற்றுவதும் நாம் கற்கவேண்டிய வரலாற்று பாடங்களில் ஒன்றாக அமைகின்றது.

எனவே நாங்கள் வெற்று வாக்குறுதிகள், கபடத்தனமான அரசியல் சித்து விளையாட்டுக்கள், பதவிக்கதிரைகளுக்காக மக்களைக் கூறுபோடும் கட்சி அரசியல் ஆகியவற்றையும் அதன் பூசாரிகளையும் புறந்தள்ளி ஒரு புதிய வழியினைக் காணுவதற்கு முன்வரவேண்டும். ■

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம்!

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1) உள்நாட்டு அரசியல். (கல்வியில் புகுந்த அரசியல்)

2) நீண்டகால உள்நாட்டு யுத்தம்.

3) பெற்றோர்களின் கண்காணிப்புக் குறைபாடுகள் / கண்டிப்புக் குறைபாடுகள் / குறைவானஅழுத்தம்.

4) கல்விமீதான விருப்பு பொதுவாகக் குறைந்து பிற விடயங்கள் மீதான ஆர்வம். அளவுக்குமீறிய வசதிகளும் இதில் அடங்கும்.

5) கல்விதான் அழியாத ஒரே ஒரு சொத்து என்ற போர்க்காலத்தில் இருந்த நம்பிக்கை இன்று இல்லாமல் போனமை.

6) கல்வித்துறையில் இருக்கும் நிர்வாகக் குறைபாடுகள் / அரசியல் தலையீடுகள்

7) சக மாணவர்களையும் ஊக்கப்படுத்தி முன்னேற்றி விடுவதில் முன்னிலை மாணவர்களின் அக்கறை குறைந்தமை.

8) நீண்ட கால போரினால் ஏற்பட்ட வடுக்கள் தாக்கம்.

9) பொருளாதார நலிவு.

10) வாசிப்பு மற்றும் கற்றல் கோரிப்பாடுகளால் தமிழ் மொழி ஆளுமையில் / புரிதலில் ஏற்பட்ட நலிவு.

இவ்வாறு இன்னும் ஏராளமான வேறு பல காரணிகளும் இருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக விபரித்து. விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றிக்கான தீர்வுகளையும், வேறுபட்ட அத்தியாயங்களில் அலசி ஆராய்ந்து சாத்தியப்பாடுகளை முன்வைக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்.

ஏராளமான ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்காக அன்றாடம் போராடுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால், இன்றைய நடைமுறை களச் சூழல் / சட்டங்கள், பெற்றோரின் அழுத்தங்களால், பல ஆசிரியர்கள் கண்டிப்புடன் செயற்பட முடியாமை கூட ஒரு காரணியாக இருக்கலாம்.

ஒரு சிலர் நாங்கள் வெற்றி சரித்திரங்களில் இருந்து சரிந்து கொண்டிருக்கிறோம் என்ற கருத்தியலை ஏற்பதில்லை. மாறாக வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற மாயையை ஏற்படுத்தி தமிழ் மக்களைத் தூக்கத்தில் வைத்திருப்பதை விரும்புகிறார்கள். இவ்வாறான மாயையை ஏற்படுத்த விரும்புவோரின் பின்னணியில், சில அரசியல் வாதிகளுக்கும், கல்வி வளர்ச்சிக்காகத் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்யாது சுயலாப நோக்கோடு பதவிகளை மட்டும் குறிவைத்து இயங்கும் கல்வித்துறை சார்ந்தவர்களும் இருக்கக்கூடும். ஏனெனில், விழிப்புணர்ச்சி அடைந்து மக்கள் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டால் தங்களுக்குப் பிரச்சினை வரும் என்பதால் அவ்வாறான மாயைக்குள் தொடர்ச்சியாக மக்களையும் மாணவர்களையும் வைத்திருக்க முயல்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் விழிப்புணர்ச்சி உருவாக வேண்டும். தமிழ் பிரதேசங்கள் தொடர்ந்து பின்தங்கி இருப்பதற்குரிய ஒவ்வொரு காரணியும் ஆராயப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். அது நடக்க வேண்டுமாயின் முதலில் நாம் உண்மைகளை ஏற்றுக் கொள்ள கற்க வேண்டும். உண்மைகளை ஏற்றுக்கொள்வது என்பதுதான் படித்த சமூகம் வீறுகொண்டு எழுவதற்கான உத்வேகத்தைக் கொடுக்கும். மாறாக மாயைகளுக்குள் ஒளித்து வைக்கப்படுவோமானால் நாளடைவில் எழுவதற்கான சந்தர்ப்பங்கள் முற்றிலும் இல்லாமல் கூட போகலாம். யாருடைய மனஉறுதியை குலைப்பதும் இந்த கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தையும் வீறு கொண்டு விழித்தெழ அழைக்கிறது. அப்போதுதான் நடவடிக்கை தேவை என்ற நிலைக்குச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் முன்வந்து உழைக்க முடியும்.

ஒவ்வொரு காரணிகளும் மிகமுக்கியமானவை. இந்தச் சரிவை இனியும் நாம் உணர்ந்து கொள்ளவில்லை என்றால் போர்காலத்தில் கூட கல்வித்துறையில் சாதனைகளுடன் திகழ்ந்த எங்கள் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் பின்னர் வசதிகள் வந்ததால் அழிந்துபோனதாகவே வரலாறு எழுதும்.

இந்த சரிவில் சமூகத்தில் உள்ள நம் அத்தனை பேருக்கும் முக்கிய பங்கு உண்டு. நீங்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது.

இனி என்ன செய்யவேண்டும், எப்படி நடந்து கொள்ளவேண்டும், எப்படி கட்டுப்பாடுகளுடன் / பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும் என்பதை கள கல்வியியலாளர்கள், பெற்றோர்கள், மாணவர்களின் சுயபுத்திக்கே விட்டுவிடுகிறேன். சரிந்து கொண்டிருக்கும் எங்கள் சரித்திரங்களை உங்கள் நெஞ்சில் சாய்த்து நிமிர்த்த முயலக் கூடிய வழிவகைகளை இந்த கட்டுரை தொடர்ச்சியாகப் பேச இருக்கிறது. இது சரிவைப் பற்றி மட்டும் பேசி யாரையும் காயப்படுத்திக் கொண்டிராமல் நிமிர்வை நோக்கிய நீண்ட பயணத்தில் அனைவரையும் விழிப்புணர்ச்சியூட்டி அழைக்க இருக்கிறது. எங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தமிழ் பேசும் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் சிந்தித்து செயலாற்ற முன்வரும் போது மிக வேகமான நிரந்தர வளர்ச்சி ஒன்றை எதிர்காலத்தில் அனுபவிக்க முடியும். அதுவே நிரந்தரமற்ற எங்கள் வாழ்வில் நாங்கள் எங்கள் சந்ததிக்குச் செய்யும் தலையாய கடமை.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே!" ■



# யாழ்ப்பாணத்தில் கால் பதிக்க விரும்புகிறது சீனா

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தைக் குறிவைத்து இந்தியா உதவிகளை வழங்குகிறது. வடக்கில் கால் பதிக்க சீனா செய்த முயற்சிகள் அனைத்தும் திரை மறைவில் தடுக்கப்பட்டன.

ஒல்லாந்தர்காலக் கோட்டை, நூல் நிலையம், இலங்கை - சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்ற கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணை, பருத்தித்துறை துறைமுகம் ஆகிய இடங்களைப் பார்வையிட்ட சீனத் தூதுக்குழு நல்லூர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடும் செய்தது.


யாழ்ப்பாண நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்த சீனத் தூதுவர், மடிக்கணனிகளையும் கொடுத்துதவினார். வட பகுதி மீனவர்களுக்கு மீன் பிடி உபகரணங்கள் சீனத்தூதுவரால் வழங்கப்பட்டது. இலங்கைக் கடலில் மீன் பிடிக்க இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அதற்கான சரியான தீர்வு இன்னமும் காணப்படவில்லை... இந்த நிலையில் சீனா மூக்கை நுழைத்து வட பகுதி மீனவர்களுக்கு உதவி செய்வதன் நோக்கம் என்னவென்பதை நோக்க வேண்டி உள்ளது. வடக்கு மீன் பிடித்துறையை ஊக்குவிக்க வேண்டும் என சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்ற கீ சென் ஹொங்கின் கேள்வியும் அங்கு நவீன ட்ரோன் கமரா மூலம் காணொலிகளைப் பதிவு செய்ததும் ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றது. வடபகுதித் தீவுகளில் மின்காற்றாலை ஆரம்பிப்பதற்கு சீனா முயற்சி செய்ததாகச் செய்தி வந்தது. சில அரசியல் காய் நகர்த்தல்களின் காரணமாக அத் திட்டம் கைவிடப்பட்டு மலேஷியாவுக்கு மாற்றப்பட்டது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை இல்லை என்றால் தமக்கு இன்னொரு நாடு உள்ளது என சீனா அடையாளப்படுத்தியுள்ளது.

இலங்கையைத் தனது பிடியில் வைத்திருக்க இந்தியா விரும்புகிறது. அதற்கு பிடிகொடுக்காமல் இலங்கை சதுரங்கம் ஆடுகிறது. பலாலி விமான நிலையத்தை இந்தியா புனரமைத்தது. நூல் நிலையத்துக்கு அருகில் கலாசாரநிலையம் ஒன்றை இந்தியா நிர்மாணிக்கிறது. யாழ்ப்பாணத்தின் அடையாளமான நூல்நிலையம், நல்லூர், கோட்டை என்பனவற்றைப் போன்று கலாசாரநிலையமும் அமையும் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பு.

மயிலிட்டியில் ஆழ்கடல் துறைமுகம் அமைக்க வேண்டும் என்பது இலங்கையின் விருப்பம், இந்தியா அதற்கு உதவி செய்யலாம் எனும் நிலை உள்ளது. பருத்தித்துறையை அபிவிருத்திசெய்ய சீனா விரும்புகிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஏதோ ஒரு திட்டத்தை மையப்படுத்தி மன்னார், யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய கடற்கரைகளில் சீனா கால்பதிக்க விரும்புகிறது. இந்திய - சீன அரசியல் பனிப்போரில் இலங்கை ஏற்கெனவே சிக்கி உள்ளது. இந்தியாவுக்குப் பின், போட்டியாக சீனாவும் களம் இறங்கினால் இலங்கைக்கு மேலும் நெருக்கடிகள் ஏற்படலாம். ■



# சிலிக்கன் சில்லு ஒலிபெருக்கி!

காதுக்குள் பொருத்தும், 'இயர் பட்ஸ்' போன்ற ஒலிபெருக்கிகளை மேலும் சிறியதாக ஆக்க முடியுமா? வாய்ப்பு குறைவுதான். ஒலிபெருக்கிகளில் உள்ள காந்தகத்தையும் அதிரும் காகிதத்தையும் ஓரளவுக்கு மேல் சிறியதாக்க முடியாது.

ஆனால், ஜேர்மனியைச் சேர்ந்த 'அரியோசோ சிஸ்டம்ஸ்,' உருவாக்கியுள்ள நுண் ஒலிப்பெருக்கி, 20 சதுர மி.மீ அளவிற்குச் சிறியதாக உள்ளது. தட்டையாக, சதுரமாக உள்ள இந்த நுண் ஒலிபெருக்கிக்கு 'நேனோஸ் கோபிக் எலெக்ட்ரோஸ்டாடிக் டிரைவ்' என்.இ.டி எனப் பெயரிட்டுள்ளனர். அதாவது, இது முழுதும் சிலிக்கன் சில்லினால் ஆனது. என்.இ.டி ஒலிப்பெருக்கிக்கு உள்ளே, 20 மைக்ரோ மீற்றர் நீளமுள்ள பட்டைகள் உள்ளன. இவை ஒலிமின் சமிக்ஞைகளுக்கு ஏற்ப அதிர்ந்து, காற்றதிர்வுகளாக மாற, அவற்றைக் காதுகள் மீண்டும் ஒலியலைகளாக உணர்கின்றன.

நுண் ஒலிப்பெருக்கிக்கு மிகக் குறைவான மின்சாரமே போதும். காதுக்குள் காந்தமாக நுழைந்துவிடும். விலை குறைவாகவும், தயாரிப்பதற்கு எளிமையானதாகவும் என்.இ.டி. ஒலி பெருக்கிகள் இருக்கும். மாற்று மொழிக்காரரின் பேச்சை மொழி பெயர்க்கும் பணிகளுக்கும், சுகாதாரத் துறையில் நோயறிதல் பணிகளுக்கும் , கடைகளில் பணம் செலுத்தவும் குட்டி ஒலிப்பெருக்கிகள் பயன் தரும்.

செவித்திறன் குறைந்தோருக்கு, மிகச் சிறிய காதுகேட்கும் கருவிகள் செய்வதில் என்.இ.டி. ஒலிபெருக்கிகள் மிக உதவிகரமாக இருக்கும். ■

# பெட்டிகளால் கட்டப்பட்ட விளையாட்டரங்கம்!

கட்டாரில் நடக்கவுள்ள 'பிபா' 2022 உலக கால்பந்து கோப்பை போட்டிகள் நடக்கவிருக்கும் இடம் மிகவும் புதுமையானது. ஆனால், பழைய இரும்புச் சாமானால் ஆனது. ஆம், '974 ஸ்டேடியம்' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விளையாட்டு அரங்கம், முழுதும் இரும்பு சரக்குப் பெட்டிகளால் ஆனது.

தலைநகரான டோஹாவில், இந்த மைதானம் கட்டுவிக்கப்பட்டுள்ளது. ஒரு துறைமுகம் மற்றும் விமான நிலையத்திற்கு அருகே உள்ள இந்த மைதானம், பயன்படுத்தி வீணாக கடாசப்பட்ட 974 பெரிய சரக்குப் பெட்டகங்களை பயன்படுத்தி கட்டுவிக்கப்பட்டுள்ளது. இதை எளிதில் கலைத்துவிடவும், மீண்டும் வேகமாக கட்டுவிக்கவும் முடியும் என்பதுதான் சிறப்பு.

ஸ்பெயின் நாட்டு கட்டடக்கலை வல்லுனர்களால் இது உருவாக்கப்பட்டது. இந்தப் பெட்டக அரங்கில் 40 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்க முடியும். இருக்கைகள், உணவகம், கழிப்பறை என்று சகல வசதிகளும் இரும்புப் பெட்டகங்களை வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன. பிபா கோப்பை பந்தயம் முடிந்த பிறகு, இந்த அரங்கத்தை அப்படியே பிரித்து வேறு இடத்திற்கு மாற்றவோ அல்லது, பெட்டிகளை மறுசுழற்சிக்கு போடவோ நிர்வாகம் முடிவு செய்யலாம்.

உலகெங்கும் வீணடிக்கப்படும் பழைய சரக்குப் பெட்டகங்களை இப்படியும் பயன்படுத்தலாம் என்பதற்கு உதாரணமாக கட்டார் அரசு இந்த அரங்கை அமைத்துள்ளது. ■





டைம்ஸின் 2021 ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீராங்கனையாக சிமோன் பைல்ஸ் தேர்வு செய்யப்பட்டார்.

உலகின் மிகவும் சிறந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான சிமோன் பைல்ஸ் டோக்கியோ ஒலிம்பிக்கில் நான்கு இறுதிப் போட்டிகளில் இருந்து விலகியபோது தனது மனநலத்திற்கு முதலிடம் கொடுத்தற்காகப் பாராட்டப்பட்டார்.

சிமோன் பைல்ஸ் உலகின் தலைசிறந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனையாகத் தனது குறிப்பிடத்தக்க நிலையைப்

# சிறந்த வீராங்கனையாக சிமொன் பைல்ஸ் தேர்வு

பயன்படுத்தி, மனநலம் குறித்த நீண்டகால உலகளாவிய உரையாடலைத் தூண்டினார். அவரது செல்வாக்கு விளையாட்டுத் துறைக்கு அப்பால் நீண்டுள்ளது.

கடந்த செப்ரெம்பரில், 24 வயதான பைல்ஸ் 2021 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களில் ஒருவராகப் டைம்ஸா பெயரிடப்பட்டார்.




# பிளே ஓவ் முதல் அணியாக Jaffna Kings

லங்கா பிரீமியர் லீக் (LPL) தொடரின் 14 ஆவது லீக் போட்டியில், தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணிக்கு எதிரானப் போட்டியில் 7 விக்கெட்களால் வெற்றி பெற்ற ஜப்னா கிங்ஸ் முதல் அணியாக பிளே ஓவ் சுற்றில் நுழைந்தது.

மழை காரணமாகச் சற்று தாமதித்தே ஆரம்பித்த இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற ஜப்னா கிங்ஸ் அணியின் தலைவர் திசர பெரேரா தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணியை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தார். தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணி 14.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களை பெற்றது.

70 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்குடன் களம் இறங்கிய ஜப்னா கிங்ஸ் 7.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 71 ஓட்டங்கள் எடுத்தது. போட்டியின் ஆட்டநாயகனாக ஜப்னா கிங்ஸ் அணியின் சத்து ரங்கடி சில்வா தெரிவாகியிருந்தார்.




# 18 போட்டிகளில் வெற்றி பெற்று பாகிஸ்தான் சாதனை

பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சமீபகாலமாகவே ரி20 கிரிக்கெட்டில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ரி20 உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாகிஸ்தான் அணி அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அதிர்ச்சி தோல்வி அடைந்தது. ஆனால் அதனைத் தவிர்த்து இந்த ஆண்டு முழுவதுமே ரி20 கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்திய ஒரு அணியாக பாகிஸ்தானில் இருந்து வருகிறது.

மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ரி20 போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி இந்த ஆண்டு 18 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ஒரே ஆண்டில் அதிக ரி20 போட்டிகளில் வெற்றி பெற்ற அணியாக பாகிஸ்தான் அணி தற்போது வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது. இதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிதான் ஒரே ஆண்டில் 17 வெற்றிகளை பதிவு செய்திருந்தது. இப்படி தங்களின் சாதனையைத் தாங்களே முறியடித்து ரி20 கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி உச்சம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.




# யுவராஜ் சிங்கின் அதிர்ஷ்ட இலக்கம்


இந்திய அணிக்காக யுவராஜ் சிங் விளையாடிய போது அவர் அணிந்திருந்த சீருடையின் இலக்கம் 12. அவர் பிறந்த தினம் 12, மாதமும் 12. அதாவது டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அவருடைய பிறந்த நாள். இதில் இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால், யுவராஜ் சிங் பிறந்த நேரமும் பிற்பகல் 12. அவர் பிறந்த மருத்துவமனை அமைந்திருந்த இடமும் சண்டிகரில 12 ஆவது வீதியில் இருந்துள்ளது.

கிரிக்கெட் வீரராக உருவெடுப்பதற்கு முன் பள்ளியில் ஸ்கேட்டிங் வீர ராக இருந்துள்ளார் யுவராஜ் சிங். 14 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டம் வென்றுள்ளார். அவ ருடைய அப்பாவின் விருப்பத்துக்கு ஏற்ப கிரிக்கெட் விளையாடிய அவர், அதில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்தி தேசிய அணிக்குத் தேர்வானார். யுவராஜ் சிங்கிற்கு பிடித்த மற்றொரு விளையாட்டு டென்னிஸ்.

யுவராஜ் சிங்கின் அப்பா யோகராஜ் சிங் இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர், புகழ்பெற்ற பஞ்சாபி நடிகர். இதனால், யுவராஜ் சிங் குழந்தையாக இருந்தபோது ஒரு சில படங்களில் குழந்தை நட்சத்திரமாகவும் நடித்துள்ளார். இங்கிலாந்தில் இருக்கும் புகழ்பெற்ற கவுன்டி கிரிக்கெட் அணிகளில் ஒன்றான யாக்ஷைர் அணிக்காக, இந்தியாவில் இருந்து 2 வீரர்கள் மட்டுமே விளையாடியுள்ளனர். ஒருவர் சச்சின், மற்றொருவர் யுவராஜ் சிங். விளையாட்டு பொழுபோக்குகளை கடந்து சமூக அக்கறை கொண்ட யுவராஜ் சிங், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, அதில் இருந்து மீண்டவர். அதன்பிறகு " "YOU WE CAN' என்ற தொண்டு நிறுவனத்தை தொடங்கி, அவரைப்போல் கான்சர் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து வருகிறார்.




# சக்கரத்தில் பயணிக்கும் நாலுகால் ரோபோ!



ரோபோக்களுக்கு இரண்டு கால்கள் மட்டும் போதாது என்று ரோபோவியலாளர்களில் சிலர் கருதுகின்றனர். சுவிஸ்லாந்திலுள்ள 'ஸ்விஸ் மைல்' என்ற ரோபோ நிறுவனம், நான்கு கால்கள் கொண்ட ரோபோவை உருவாக்கியது. பின் அந்த நான்கு கால்களுடன் நான்கு சக்கரங்களை இணைத்தது. அண்மையில், பின்னங்கால் சக்கரங்களுடன், அந்த ரோபோ நாய் போல எழுந்து நிற்கவும் கற்றுக்கொண்டுள்ளது.

இது ஒரு முக்கியமான புதிய திறன் என அதன் படைப்பாளர்கள் சொல்கின்றனர். இதன் வாயிலாக ஸ்விஸ் மைல் ரோபோவால், வாடிக்கையாளரின் வீட்டு வாசலுக்குச் சென்று பொருட்களை டெலிவரி செய்ய முடியும்.

இரண்டு கால் ரோபோக்கள், சமநிலையுடன் நிற்கவும், நடக்கவும் அதிக மின்சாரம் செலவாகும். எனவே தான், நான்கு கால் ரோபோக்களை வல்லுனர்கள் உருவாக்கினர். நான்கு கால்களால், படிக்கட்டுகளில் ஏறி இறங்குவது சுலபமாக இருக்கும். அதேநேரம், சாலையில் நான்கு கால் ரோபோக்களுக்கு ஓட்ட வேகம் போதாது என்பதால், சக்கரங்களை கொடுத்தனர். இதனால் மணிக்கு 22 Km வேகத்தில் அவற்றால் நான்கு கால் சக்கரத்துடன் பயணிக்க முடிகிறது.

ஆனால், சக்கரங்களுடன் பொருட்களை கையாள்வது, தன் முதுகுப் பகுதியில் பொருட்களை வைத்துச் செல்வது, அதை எடுத்து உரிய நபரிடம் கொடுப்பது, போன்ற செயல்களை செய்ய முன்னங்கால் பகுதியை பயன்படுத்த ஸ்விஸ் மைல் ரோபோவால் முடியும். பின்னங்காலால் ஊன்றி எழுந்து நிற்கையில், அதிலுள்ள சக்கரங்களை அது கட்டுப்படுத்திக்கொள்ளும்.

ஸ்விஸ் மைல் ரோபோவின் உடலில் உள்ள மின்கலன் வாயிலாக, 16 மோட்டார்களுக்கும் இரண்டு மணி நேரத்திற்கு வேண்டிய மின்சாரம் கிடைக்கிறது. சக்கரக்கால் ரோபோவை 2022ன் இறுதிக்குள், சில தூதஞ்சல் சேவை நிறுவனங்கள் பணிக்கு அமர்த்தவிருக்கின்றன.

# காகமும் பூனையும்



ஒரு வீட்டில் அழகான பூனை ஒன்றை வளர்த்து வந்தார்கள். அந்த பூனைக்கு வீட்டில் உள்ள எல்லோரும் செல்லம் கொடுத்து வளர்த்தார்கள். அந்த பூனைக்கு காகத்துடன் நட்பு ஏற்பட்டது.

ஒரு நாள் காகம் சோகத்துடன் அமர்ந்திருந்தது. அதைக் கண்ட பூனை காகத்தின் அருகே சென்று , "ஏன் காக்கையாரே! சோகத்துடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டது.

அதற்கு காகம், "மனிதர்கள் எல்லோரும் மற்ற விலங்குகளுடனும் பறவைகளுடனும் அன்பாக இருக்கிறார்கள் ஆனால் எங்களை மட்டும் துரத்துகிறார்கள்" என்று சொன்னது.

இதற்குக் காரணம் உங்களிடம் உள்ள தீய குணங்கள்தான் என்று பூனை கூறி யது. எங்களிடம் என்ன தீயகுணம் உள் ளது? பகிர்ந்துண்ணும் பண்பைக் கற் றுத் தந்தது நாங்கள்தான் என்று பெரு மையுடன் சொன்னது காகம்.

அதற்கு பூனை, திருடுதல், ஏமாற்றுதல் போன்ற தீய குணம் உங்களிடம் தான் உள்ளது. அதை இல்லாமல் செய்தால் உங்களையும் அன்புடன் வளர்ப்பார்கள் என்று கூறியது. இதைக் கேட்டதும் காகம் தலை குனிந்தது.

**சாளினி**

# எனது இனிய நண்பி



எனது மனம் கவர்ந்த நண்பியே
உனது அன்பு அரிதானது
உன்னைப் பார்த்த நாளில் இருந்து
என் மனதில் மகிழ்ச்சி தோன்றியது
அன்பு மிக்க நண்பியே
நீ மிகவும் பிரியமானவள்
உன்னோடு இருந்த நாளெல்லாம்
நான் மகிழ்ச்சியாக இருந்தேன்.

**ஜெ.சந்தியா**

## விடுகதைகள்

01. உரச உரச குழைவான், பூசப் பூச மணப்பான்?
**சந்தனம்**

02. கிண்ணம் போல் பூப் பூக்கும், பானை போல் காய் காய்க்கும்?
**பூசணிக்காய்**

03. கரைந்து போகுது வெள்ளித் தட்டு?
**தேய் பிறை**

04. விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம்?
**கடிகாரம்**

05. முள்ளுக்குள்ளே முத்துக் குவலம் அது என்ன?
**பலாப்பழம்**

06. முக்கண்ணன் சந்தைக்குப் போகின்றான் அவன் யார்?
**தேங்காய்**





உலகின் குடிநீர் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் வல்லமை கொண்டது கடல். ஆனால், அதிலிருக்கும் உப்பை நீக்குவதற்கு அதிக அளவு மின்சாரம் தேவைப்படுவதால், கடல் நீர் சுத்திகரிப்பு என்பது சுற்றுச்சூழலுக்குக் கேடாவது மட்டுமல்ல, நீரின் விலையையும் அதிகரித்துவிடுகிறது. இதற்குத் தீர்வாக கடல் அலைகளிலிருந்து மின்சாரத்தை எடுத்து, அதே கடல் நீரை தூய்மைப்படுத்தலாமே?

# கடல் அலை தரும் தூய குடிநீர்!

அதைத்தான் செய்கிறது அயர்லாந்தைச் சேர்ந்த ரிசலூட் மரீன்.

சக்தி வாய்ந்த கடல் அலைகள் முன்னும் பின்னும் அடித்துச் செல்கையில் பெரும் விசை உண்டாகிறது. கடல் அலையில் ஒரு தடுப்பு போன்ற கருவியை உருவாக்கி, அந்த விசையை உள்வாங்கினால், 24 மணி நேரமும் மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் என்பதை ரெசலூட் மரீன் நிறுவனத்தின் விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடலலையில் மின்சாரம் தயாரிக்கும் அத்திட்டத்திற்கு 'வேவ் டூ ஓ' என்று பெயர். தற்போது கேப் வெர்டே என்ற சிறிய தீவு நாடு குடிநீர் பஞ்சத்தில் இருப்பதால், அதை வேவ் டு ஓ தொழில்நுட்பத்தை அங்கு செயல்படுத்த ரிசலூட் மரீன் வேலை செய்து வருகிறது. கடல் அலை ஆற்றலை வைத்தே, கடல் நீரை குடிநீராக்கும் தொழில்நுட்பத்திற்கு நிச்சயம் உலகெங்கும் வரவேற்பு இருக்கும்.



**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 18.12.2021 அன்று வெளியிடப்பட்டது.